**ம.து.ந.க.எண்.பி1/1046/2014**
**ஆணையர் அவர்களின் 09.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.429/2016 **பொருள் எண்.01**

**தென் கொரியா நாட்டில் உள்ள உல்சான் நகரத்துடன் பெருநகர சென்னை மாநகராட்சி நட்பு நகரமாக புரிந்துணர்வு ஒப்பந்தம் – 02.08.2016 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அம்மா மாளிகையில் உல்சான் நகர மேயர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் இணைந்து கையெழுத்திடப்பட்ட விவரம் மன்றத்தின் தகவலுக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.**

அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் (எம்.சி–1) துறை, அரசாணை (எம்.எஸ்) எண்.6, நாள்.18.01.2016ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் தென் கொரியா நாட்டில் உள்ள உல்சான் நகரத்துடன், சென்னை பெருநகர மாநகராட்சி நட்பு நகரமாக (FRIENDLY CITY) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள, அரசு ஆணை வழங்கியதை தொடர்ந்து, 02.08.2016 அன்று உல்சான் நகர மேயர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் இணைந்து, ரிப்பன் மாளிகையில் உள்ள அம்மா அரங்கத்தில் ஒப்பந்தம் செய்துக் கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நிலைக்குழு தலைவர் (கல்வி), மாமன்ற உறுப்பினர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், துணை ஆணையர், வட்டார துணை ஆணையர், துறைத் தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். தென் கொரியா குடியரசின் சார்பில், உல்சான் நகர மேயர் அவர்களுடன் வந்த குழுவினரும் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இவ்விவரம் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் தகவலுக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.227/2016, நாள்.17.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பதிவு செய்து தகவலுக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>ப.து.ந.க.எண்.0069/2016</u>**
**<u>ஆணையர் அவர்களின் 09.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.430/2016 **பொருள் எண்.02**

**<u>தானப்பத்திரம்</u>**

மண்டலம்–8, வார்டு–104ல் திரு.M.ரோஹித் மேத்தா மற்றும் R. லலிதா மேத்தா அவர்கள் கதவு எண்.63, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, புரசைவாக்கம், சென்னை–10, R.S.No.3022/1, 3022/2, Block No.49, புரசைவாக்கம் கிராமம் என்ற இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகம், நகரமைப்பு பிரிவில் PPA/WDCN08/0500/2016 நாள்.28.01.2016ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II''ன்படி 24.0மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகுதான் திட்ட அனுமதி வழங்க இயலும்.

எனவே, திரு.M.ரோஹித் மேத்தா மற்றும் R. லலிதா மேத்தா அவர்கள் தங்களிடத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 7.06ச.மீ [(0.87மீ+0.11மீ)/2] X [(14.63மீ+14.48மீ)/2] = 7.06 ச.மீ பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

எனவே,

1. மனை உரிமையாளர் திரு.M.ரோஹித் மேத்தா மற்றும் R. லலிதா மேத்தா அவர்களிடமிருந்து இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 7.06ச.மீ பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்காக பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்ளவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.12,000/–ஐ மனை உரிமையாளர்களிடம் ''ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் வரைவு காசோலையாக பெற்று கொள்ளவும்,
3. தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''10.08.2016 அன்றுநடைபெற்றநிலைக்குழு(நகரமைப்பு)வின் கூட்டத்தின் தீர்மான எண்.17/2016, நாள்.10.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு)பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>க.து.ந.க.எண்.பி1/4838/2015</u>**
**<u>ஆணையர் அவர்களின் 11.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.431/2016 **பொருள் எண்.03**

**<u>மண்டலம்–5, வார்டு–58, ஈ.வெ.ரா.பெரியார் சாலையில் உள்ள விக்டோரியா பப்ளிக் ஹால் பயன்பாடுகள் சம்மந்தமாக செய்தி வெளியிடுதலுக்கு அனுமதி</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் அவர்கள் விக்டோரியா பப்ளிக் ஹால் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள்.

1882ஆம் ஆண்டு, மார்ச் 17ஆம் நாளன்று சென்னை பச்சையப்பன் ஹாலில் கூடிய முக்கிய பிரமுகர்கள் சென்னை நகர் மக்களுக்காக ஒரு Town Hall அமைக்க வேண்டும் என தீர்மானித்து, அதற்கு ஒரு குழுவை அமைத்தனர். 1886ஆம் ஆண்டு அன்றைய அரசு, The Peoples Park Area-வினை நிர்வாகம் Management செய்வதற்காக சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கியது. அதன் காரணமாக, Town Hall கட்டும் குழுவினர் சென்னை நகராட்சி ஆணையரை அணுகி, ஆணையரின் அதிகாரத்தில் உள்ள 57 கிரவுண்டு (அதாவது 3 ஏக்கர் 14 சென்ட்) நிலத்தை 01.04.1886ஆம் ஆண்டு முதல் 99 வருடங்களுக்கு குத்தகைக்கு உரிமை பெற்றது. இச்செயல் அரசால் அங்கீகரிக்கப்பட்டது. அதன் பின்னர், மேற்படி குழுவினர் இந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு ரூ.16,425/– நன்கொடையாக பெற்று, இதனை முதல் கட்ட மூலதனமாக கொண்டும், பின்னர் 35 நன்கொடையாளர்கள் உதவியுடன் The Indo-Saracenic architecture கலை நுணுக்கங்களை கொண்டு 1888 மற்றும் 1890ஆம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலங்களில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்திற்கு Public Hall என பெயர் வைக்கப்பட்டு, அன்றைய மதராச பட்டணத்தின் கவர்னர் Montstuart Grant-Duff அவர்களால் திறக்கப்பட்டது. பின்னர் விக்டோரியா மகாராணி அவர்களின் அரசு பொன்விழா கொண்டாட்டங்கள் நடைபெற்ற காரணத்தால் இந்த ஹாலுக்கு Victoria Public Hall என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மேற்படி குழுவினர் இந்த Victoria Public Hall கட்டி முடித்ததற்கான முக்கிய நோக்கம் என்னவென்றால், சாதி மத பேதமின்றி பொதுமக்கள் அனைவரும் இந்த ஹாலை நல்ல காரியங்களுக்காக உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், இயல், இசை மற்றும் நாடகங்கள், பேச்சு போட்டிகள், பொருட்காட்சிகள், நல்ல நோக்கத்திற்கான விருந்துகள், நூலகங்கள், மாணவர்களின் படிப்பு தொடர்பான காரியங்கள் என பல்வேறு மக்கள் நலப்பணிகளுக்காக கட்டப்பட்டது. இதனை கருத்தில் கொண்டுதான் அப்போதைய சென்னை நகராட்சி நிர்வாகம் மேற்படி குழுவினருக்கு 57 கிரவுண்டு நிலத்தினை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட்டது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க இக்கட்டடம், நமது பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் மற்றும் பண்பாட்டையும் எடுத்துரைக்கும் விதமாக அமைந்துள்ளது. மேலும், இந்த Victoria Public Hall ல் மகாகவி பாரதியார், சுவாமி விவேகானந்தர், கோபால கிருஷ்ண கோகலே போன்ற பல்வேறு மாமனிதர்கள் உரை நிகழ்த்தியதாக வரலாறு இருக்கிறது. இந்த மக்கள் மன்றத்தில் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் போன்றோர் தமிழ் நாடகங்களை நிகழ்த்தி, இத்தமிழ் மண்ணுக்கு விட்டுச் சென்றதோடு, முத்தமிழில் ஒன்றாகிய நாடகத்தமிழை வளர்த்த மாமன்றம் இதுவாகும். அதுமட்டுமல்லாமல் Victoria Public Hall Trust குழுவில் சென்னை மாநகர செரீப் மற்றும் தொழிலதிபர் திரு சுரேஷ் கிருஷ்ணா அவர்கள் தலைவராகவும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் உறுப்பினராகவும், சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் செயலாளராகவும் இருந்துள்ளார்கள். இவ்வாறு பல பெருமைகள் இக்கட்டடத்திற்கு உண்டு.

சென்னை மாநகராட்சி நிர்வாகம் **01.04.1886**ஆம் ஆண்டு Victoria Public Hall Trust குழுவினருக்கு **99** ஆண்டுகள் கால குத்தகை எந்த நோக்கத்திற்காக வழங்கியதோ, அந்த நோக்கங்களை மேற்படி குழுவினர் நடைமுறைப்படுத்த தவறியதன் காரணமாக, **31.03.1985**ஆம் ஆண்டு குத்தகை காலம் முடிந்த பின் Victoria Public Hall லை சென்னை மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்குமாறு கோரியது. இதை ஏற்க மறுத்த குழுவினர் சென்னை மாநகராட்சிக்கு எதிராக பல்வேறு வழக்குகள் தொடுத்தது. இறுதியாக Victoria Public Hall அறக்கட்டளை **11.03.2009** அன்று சென்னை மாநகராட்சியுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு, விலைமதிப்பற்ற இந்த கட்டடத்தை புதுப்பிக்கும் பொருட்டு **01.04.2009** அன்று அறக்கட்டளையின் உடமைகள், அசையும், அசையா சொத்துக்கள் அனைத்தும் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைத்து விட்டது. பின்னர் Victoria Public Hall Trust Board கலைக்கப்பட்டு விட்டது. உள்குத்தகைக்கு விடப்பட்டிருந்து அனைத்தும் அகற்றப்பட்ட பின்னர், தற்போது சென்னை மாநகராட்சி வசம் உள்ள நிலத்தில் மெட்ரோ ரயில் திட்ட பணிக்காக வி.பி. ஹால் அருகில் **2195** சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தை தற்காலிகமாகவும், **3602** சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு நிரந்தரமாக ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மன்றம் அனுமதி அளித்துள்ளது.

இந்நிலையில் தற்போது முழுமையாக சென்னை மாநகராட்சி வசமுள்ள இந்த வரலாற்று சிறப்பு மிக்க Victoria Public Hall மற்றும் அதனை சுற்றியுள்ள இடம், ஆரம்ப காலத்தில் **100** வருடங்களுக்கு முன்பு எந்த நோக்கத்திற்காக தனியாரிடம் ஒப்படைத்ததோ, அந்த நோக்கம் நிறைவேறும் வகையில், இக்கட்டடம் புனரமைப்பு பணிகள் நிறைவடைந்த பின்னர் பொதுமக்களின் நலப்பணிகளுக்காக உபயோகப்படுத்தலாம் என கருதப்படுகிறது.

முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி, இந்த வரலாற்று சிறப்புமிக்க Victoria Public Hall லை தற்போதைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு எந்தெந்த வகையில் மக்கள் நலப்பணிகளுக்கு பயன்படுத்தலாம் என மக்களிடம் கருத்து கேட்கும் வகையில் செய்தி வெளியீடு ஒன்றை வெளியிடலாம் எனக் கருதப்படுகிறது. இதன் வாயிலாக, பொதுமக்களிடமிருந்து பெறப்படும். கருத்துக்களின் அடிப்படையில் எவ்வகையான பணிகள் மேற்கொள்ளலாம் என பின்னர் தீர்மானித்து, மன்றத்தின் அனுமதி பெற்றபின் அரசுக்கு முன்மொழிவு வைத்து ஒப்புதல் பெறலாம் என உத்தேசிக்கப்படுகிறது.

எனவே, மேற்கண்ட செய்தி வெளிடுதலுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

''**16.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.**230/2016** நாள்.**16.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**17.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.**241/2016**, நாள்.**17.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பூ.து.ந.க.எண்.பி1/131-3/2016, வ.அ.(வ).ந.க.எண்.இ3/8695/2015**
**ஆணையர் அவர்களின் 09.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.432/2016 **பொருள் எண்.04**

**ஒப்பம் – பூங்கா துறை – மண்டலம்–2, வார்டு–18ல், CPCL Layoutல் பூங்கா அமைக்கும் பணி திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர். | : | மண்டலம்–2, வார்டு–18ல், CPCL Layoutல் பூங்கா அமைக்கும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | : | மன்ற தீர்மாண எண்.23/2016, நாள்.30.01.2016 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | : | பூங்கா மற்றும் விளையாட்டு திடல் வடக்கு வட்டார அலுவலகம் |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 1,43,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | : | ரூ . 1,13,28,263.27 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | : | ரூ. 11,32,826.33 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 2,83,206.58 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு – 1% | : | ரூ. 1,13,282.63 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 1,13,282.63 |
| | (ஊ) மின்சாரம்/குடிநீர் /கழிவு நீர் இணைப்பு மற்ற பிற இனங்கள் | : | ரூ. 70,000.00 |
| | (எ) கலந்தறிதற்குரியர் செலவு | : | ரூ. 9,68.566.50 |
| | ( ஏ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 2,90,572.03 |
| | மொத்தம் | : | ரூ. 1,43,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | | 1 . சென்னை மாநகராட்சி செய்தி மலர். 21 நாள் . 4.2.2016<br>2 இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் நாள். 04.02.2016<br>3. மக்கள் குரல் தமிழ் நாளிதழ் நாள்.04.02.2016 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | | 22.02.2016 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலகரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | | ஆம் ஒதுக்கப்பட்டுள்ளது |
| 9 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ? | | மூன்று (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. | ஒப்பத்தில் | பணியின் அலுவலக | ஒப்பந்ததாரரின் | 2014-2015 ஆம் |
|---|---|---|---|---|

| எண் | பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள் / திருமதி | மதிப்பு (ரூ.) | ஒப்பத்தொகை (ரூ.) | ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன் | ரூ. 1,13,28,263.27 | 1,45,00,176.99 | (+)28% அதிகம் |
| 2 | திரு. V.சுரேஷ்குமார் | ரூ. 1,13,28,263.27 | 1,58,59,568.58 | (+)40% அதிகம் |
| 3 | திரு.E.திருநாவுக்கரசு | ரூ. 1,13,28,263.27 | ஒப்பந்ததாரர் திரு.E.திருநாவுக்கரசு அவர்களால் குறிப்பிட்ட நேரத்திற்குள் முன் வைப்புத் தொகை செலுத்தப்படவில்லை. எனவே ஒப்பம் நிராகரிக்கப்பட்டது | |

| | | | |
|---|---|---|---|
| 10 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | : | ஆம். நாள்.23.02.2016 (முதலாவது பேச்சு வார்த்தை) |
| 11 | பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் . | : | ரூ.1,25,74,372.23 (+) 11.00% அதிகம், 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 12 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு | : | வகுப்பு –1 |
| 13 | பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு | : | மூலதன நிதி–பூங்கா துறை வடக்கு வட்டார அலுவலகம் 2015-2016 |
| 14 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | : | 21.05.2016 ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் 21.08.2016 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 22.02.2016 அன்று மூன்று ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்பந்ததாரர் திரு.E.திருநாவுக்கரசு அவர்களால் குறிப்பிட்ட நேரத்திற்குள் முன்வைப்பு தொகை செலுத்தப்படவில்லை. எனவே ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பத் தொகை 2014-2015ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,13,28,263.27யை விட (+) 28% அதிகமாகும். இதன்படி குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,45,00,176.99 ஆகும். எனவே, 23.02.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத்தொகை 1,25,74,372.23 ஆகும். இது 2014–15ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல் படி (+) 11% அதிகமாகும். இது 2015–16ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல் படி (+) 8.83% அதிகமாகும். மேலும் இவ்வொப்பத்தொகை 13.02.2016 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பத்தொகை (+)3.41%அதிகம்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | 1,25,74,372.23 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+) 11% அதிகம் |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+) 8.83% அதிகம் |
| The Hindu (Habitat) dt. 13.02.2016 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (+) 3.41% அதிகம் |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 25.02.2016 அன்று நடந்த ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.1,25,74,372.23-க்கான

ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ரூ.1,25,74,372.23 (ஒரு கோடியே இருபத்தி ஐந்து இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து முன்னூற்று எழுபத்தி இரண்டு மற்றும் இருபத்தி மூன்று பைசா மட்டும்)கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''16.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.218/2016 நாள்.16.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.229/2016, நாள்.17.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பூ.து.ந.க.எண்.பி1/131-5/2016, பூ.து.ந.க.எண்.பி2/0933/2015**
**ஆணையர் அவர்களின் 09.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.433/2016 பொருள் எண்.05

**ஒப்பம் – பூங்கா துறை – மண்டலம்–13, பகுதி–40, வார்டு–175க்குட்பட்ட அடையாறு மண்டல புற்றுநோய் ஆராய்ச்சி மையத்திற்கு பின்புறம் உள்ள பக்கிங்காம் கால்வாய் அருகில் புதிய பூங்கா அமைக்கும் பணியை திருவாளர்கள். வாஸ்கோ என்டர்பிரைசஸ் அவர்களுக்கு அளிக்க அனுமதி**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர். | : | மண்டலம்–13, பகுதி–40, வார்டு–175 க்குட்பட்ட அடையாறு மண்டல புற்றுநோய் ஆராய்ச்சி மையத்திற்கு பின்புறம் உள்ள பக்கிங்காம் கால்வாய் அருகில் புதிய பூங்கா அமைக்கும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | : | மன்ற தீர்மாண எண்.13/2016, நாள்.30.01.2016 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | : | அடையாறு மண்டல புற்றுநோற் ஆராய்ச்சி மையத்திற்கு |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 1,10,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | : | ரூ . 94,06,064.90 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | : | ரூ. 9,40,606.49 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 2,35,151.62 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு – 1% | : | ரூ. 94,060.65 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 94,060.65 |
| | (ஊ) மின்சாரம்/குடிநீர் /கழிவு நீர் இணைப்பு மற்ற பிற இனங்கள் | : | – |
| | (எ) வரைப்படம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் கலந்தறிதற்குரியவர் செலவு | | – |
| | ( ஏ) மற்றைய எதிர்பாரா செலவு 2.5% | | ரூ.2,30,055.68 |
| | மொத்தம் | : | ரூ.1,10,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | | 1 . சென்னை மாநகராட்சி செய்தி மலர். 21 நாள் . 04.02.2016<br>2 Indian Express ஆங்கில நாளிதழ் நாள்.04.02.2016<br>3. மக்கள் குரல் தமிழ் நாளிதழ் நாள்.04.02.2016 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | | 22.02.2016 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலகரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | | ஆம் ஒதுக்கப்பட்டுள்ளது |
| 9 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? | | மூன்று (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள்/திருமதி | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2014-2015 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். வாஸ்கோ என்டர்பிரைசஸ் | ரூ. **94,06,064.90** | 1,08,16,974.64 | (+)15.00% அதிகம் |
| 2 | திரு. K..வடிவேலு | ரூ. **94,06,064.90** | 1,13,81,338.53 | (+)21.00% அதிகம் |
| 3 | திரு.T. ராமசாமி | ரூ. **94,06,064.90** | ஒப்பந்ததாரர் திரு.T.ராமசாமி அவர்களால் குறிப்பிட்ட நேரத்திற்குள் முன் வைப்புத் தொகை செலுத்தப்படவில்லை. எனவே ஒப்பம் நிராகரிக்கப்பட்டது | |

| | | | |
|---|---|---|---|
| 10 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | : | ஆம். நாள்.**23.02.2016** (முதலாவது பேச்சு வார்த்தை) |
| 11 | பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் | : | ரூ.1,07,22,913.99 (+) 14% அதிகம், 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 12 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு | : | வகுப்பு –1 |
| 13 | பணிக்கான நிதி ஆதாரம்<br>அ) வரவு செலவு திட்ட தலைப்பு | : | மூலதன நிதி–பூங்கா துறை தெற்கு வட்டார அலுவலகம்<br>2015-2016 |
| 14 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | : | 21.05.2016<br>ஒப்பந்தப்புள்ளி செல்லத்க்க காலம் **21.08.2016** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான**22.02.2016** அன்று மூன்று ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்பந்ததாரர் திரு. T. ராமசாமி அவர்களால் குறிப்பிட்ட நேரத்திற்குள் முன்வைப்பு தொகை செலுத்தப்படவில்லை எனவே ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. திருவாளர்கள். வாஸ்கோ என்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பத் தொகை 2014-2015ஆம் ஆண்டின்அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.94,06,064.90யை விட (+)15.00% அதிகமாகும். இதன்படி குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ. **1,08,16,974.64** ஆகும். எனவே, **23.02.2016** அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத்தொகை **1,07,22,913.99** ஆகும். இது **2014–15**ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்படி (+) **14.00%** அதிகமாகும். இது **2015–16**ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்படி (+) 9.56% அதிகமாகும். மேலும் இவ்வொப்பத்தொகை **13.02.2016** நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பத்தொகை **(–)2.10%** குறைவு.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.1,07,22,913.99 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+) 14.00% அதிகம் |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+) 9.56% அதிகம் |
| The Hindu (Habitat) dt.13.02.2016 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (-) 2.10% குறைவு. |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு **25.02.2016** அன்று நடந்த ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.1,07,22,913.99-க்கான

ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். வாஸ்கோ என்டர்பிரைசஸ் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். வாஸ்கோ என்டர்பிரைசஸ் அவர்களின் ரூ.1,07,22,913.99 (ஒரு கோடியே ஏழு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து பதிமூன்று மற்றும் தொண்ணுற்று ஒன்பது பைசா மட்டும்)கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். வாஸ்கோ என்டர்பிரைசஸ் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி 80(2)ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''16.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.217/2016 நாள்.16.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.228/2016, நாள்.17.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.பி1/394/2016**
**ஆணையர் அவர்களின் 11.08.2016நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.434/2016 **பொருள் எண்.06**

**மண்டலம்–1, வார்டு–2, கத்திவாக்கத்தில் மீன் அங்காடி கட்டும் பணியை திருவாளர்கள்.S வள்ளி அவர்களுக்கு பணி வழங்க அனுமதி**

**வார்டு எண் : 2** **மண்டலம் : 1**

| | |
|---|---|
| பணியின் பெயர். | மண்டலம்–1, வார்டு–2, கத்திவாக்கத்தில் மீன் அங்காடி கட்டும் பணி |
| மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | மன்றத் தீர்மானஎண்.258/2016, நாள்.26.02.2016 |
| எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்–1 |
| மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| மதிப்பீட்டின் தொகை | ரூ. 2,49,00,000.00 |
| (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 2,11,92,466.09 |
| (ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 21,19,246.61 |
| (இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 5,29,811.65 |
| (ஈ) எதிர்பாரா செலவு | ரூ. 6,04,626.33 |
| (உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 2,11,924.66 |
| (ஊ) தர நிர்ணயம் | ரூ. 2,11,924.66 |
| (எ) மின்சாரம் | ரூ. 30,000.00 |
| மொத்தம் | ரூ. 2,49,00,000.00 |
| எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள் . 14.07.2016<br>2. மக்கள் குரல் நாள். 13.07.2016<br>3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 13.07.2016 |
| ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 27.07.2016 |
| ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? | ஆம் |
| எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ? | இரண்டு (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது) |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள்/திருமதி | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2015-2016 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | S. வள்ளி | 2,11,92,466.09 | 2,40,02,810.00 | (+) 13.26 % அதிகம் |
| 2. | ராஜ் டெவலப்பர்ஸ் | 2,11,92,466.09 | 2,49,27,830.00 | (+) 17.63 % அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் | ஆம். நாள். 28.07.2016, ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+)9.99 % குறைத்துள்ளார். |

| | |
|---|---|
| நடத்தப்பட்ட நாள் | |
| பேச்சு வார்த்தைக்குப்பின் / ஒப்பத் தொகை / ஒப்ப சதவீதம் . | ரூ.2,33,08,700.00 (+) 9.99% அதிகம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு | வகுப்பு –1 |
| பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு | மூலதன நிதி 2016-2017 |
| ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | 26.10.2016 |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 27.07.2016 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 28.07.2016 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். S.வள்ளி அவர்களின் ஒப்பத் தொகை 2015-2016 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,11,92,466.09 யை விட (+)13.26 % அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.2,40,02,810.00ஆகும். எனவே, 28.07.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.2,33,08,700.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் ஒப்பத்தொகையை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.2,33,08,700.00 மற்றும் ஒப்ப சதவீதம் (+) 9.99% அதிகமாகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.2,33,08,700.00 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் | (+) 9.99% அதிகம் |
| The Hindu (Habitat) dated.23.07.2016 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (-) 2.00 % குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 29.07.2016அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.2,33,08,700/- க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். S.வள்ளி அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். S.வள்ளி அவர்களின் ரூ.2,33,08,700.00 (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து எட்டாயிரத்து எழுநூறு மட்டும்) கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். S.வள்ளி அவர்களுக்கு அளிக்க பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**16.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.**226/2016** நாள்.**16.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**17.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.**237/2016**, நாள்.**17.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>க.து.ந.க.எண்.பி1/395/2016</u>**

**<u>ஆணையர் அவர்களின் 11.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.435/2016 **பொருள் எண்.07**

**மண்டலம்–1, வார்டு–9, பட்டினத்தார் கோயில் தெருவில் மீன் அங்காடி கட்டும் பணிக்காக திரு.P.திருமூர்த்தி அவர்களுக்கு பணி வழங்க ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

**வார்டு எண் : 9** **மண்டலம் : 1**

| | |
|---|---|
| பணியின் பெயர். | மண்டலம்–1, வார்டு–9, பட்டினத்தார் கோயில் தெருவில் மீன் அங்காடி கட்டும் பணி |
| மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | மன்றத் தீர்மானஎண்.259/2016, நாள்.26.02.2016 |
| எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்–1 |
| மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| மதிப்பீட்டின் தொகை | ரூ. 3,08,00,000.00 |
| (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 2,62,99,313.77 |
| (ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 26,29,931.38 |
| (இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 6,57,482.84 |
| (ஈ) எதிர்பாரா செலவு | ரூ. 6,57,285.73 |
| (உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 2,62,993.14 |
| (ஊ) தர நிர்ணயம் | ரூ. 2,62,993.14 |
| (எ) மின்சாரம் | ரூ. 30,000.00 |
| மொத்தம் | ரூ. 3,08,00,000.00 |
| எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள். 14.07.2016<br>2. மக்கள் குரல் நாள். 13.07.2016<br>3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 13.07.2016 |
| ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 27.07.2016 |
| ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? | ஆம் |
| எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? | இரண்டு (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது) |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள்/திருமதி | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2015-2016 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | P. திருமூர்த்தி | 2,62,99,313.77 | 3,06,56,790.00 | (+) 16.57 % அதிகம் |
| 2. | S.R.P. கன்ஷ்ட்ரக்ஷன் | 2,62,99,313.77 | 3,35,00,295.00 | (+) 27.38 % அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | ஆம். நாள். 28.07.2016, ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+)9.88 % குறைத்துள்ளார் |
| பேச்சு வார்த்தைக்குப்பின் / ஒப்பத் தொகை/ ஒப்ப | ரூ.2,88,98,215.00 (+) 9.88% அதிகம் |

| | |
|---|---|
| சதவீதம் . | 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு | வகுப்பு –1 |
| பணிக்கான நிதி ஆதாரம்<br>அ) வரவு செலவு திட்ட தலைப்பு | மூலதன நிதி 2016-2017 |
| ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | 26.10.2016 |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 27.07.2016 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 28.07.2016 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திரு. P.திருமூர்த்தி அவர்களின் ஒப்பத் தொகை 2015-2016 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,62,99,313.77யை விட (+)16.57% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.3,06,56,790.00 ஆகும். எனவே, 28.07.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.2,88,98,215.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் ஒப்பத்தொகையை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.2,88,98,215.00 மற்றும் ஒப்ப சதவீதம் (+) 9.88% அதிகமாகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.2,88,98,215.00 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் | (+) 9.88% அதிகம் |
| The Hindu (Habitat) dated.23.07.2016 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (-) 1.00 % குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 29.07.2016அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.2,88,98,215.00 க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திரு.P.திருமூர்த்தி அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திரு.P.திருமூர்த்தி அவர்களின் ரூ.2,88,98,215.00 (ரூபாய் இரண்டு கோடியே என்பத்தெட்டு இலட்சத்த தொண்ணூற்று எட்டாயிரத்து இறுநூற்று பதினைந்து மட்டும்)கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திரு.P.திருமூர்த்தி அவர்களுக்கு அளிக்க பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**16.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.**227/2016** நாள்.**16.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**17.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.**238/2016**, நாள்.**17.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி1/397/2016**

**ஆணையர் அவர்களின் 11.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.436/2016 **பொருள் எண்.08**

**மண்டலம்–6, வார்டு–74, நம்மாழ்வார் பேட்டையில் மீன் அங்காடி கட்டும் பணிக்காக திரு.A.அசோக்குமார் அவர்களுக்கு பணி வழங்க அனுமதி**

**வார்டு எண் : 74** **மண்டலம் : 6**

| | |
|---|---|
| பணியின் பெயர். | மண்டலம்–6, வார்டு–74, நம்மாழ்வார் பேட்டையில் மீன் அங்காடி கட்டும் பணி |
| மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | மன்றத் தீர்மானஎண்.263/2016, நாள்.26.02.2016 |
| எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்–6 |
| மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| மதிப்பீட்டின் தொகை | ரூ. 1,48,80,000.00 |
| (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 1,26,92,363.34 |
| (ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 12,69,236.33 |
| (இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 3,17,309.08 |
| (ஈ) எதிர்பாரா செலவு | ரூ. 3,17,243.99 |
| (உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 1,26,923.63 |
| (ஊ) தர நிர்ணயம் | ரூ. 1,26,923.63 |
| (எ) மின்சாரம் | ரூ. 30,000.00 |
| மதிப்பீட்டின் தொகை | ரூ. 1,48,80,000.00 |
| எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள். 14.07.2016<br>2. மக்கள் குரல் நாள். 13.07.2016<br>3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 13.07.2016 |
| ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 27.07.2016 |
| ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? | ஆம் |
| எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ? | இரண்டு (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது) |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள் / திருமதி | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2015-2016 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | A அசோக்குமார் | 1,26,92,363.34 | 1,47,23,141.47 | (+) 16.00 % அதிகம் |
| 2. | K.கருணாகர பாண்டியன் | 1,26,92,363.34 | 1,51,03,912.37 | (+) 19.00 % அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை | ஆம். நாள். 27.07.2016, ஒப்பந்ததாரர் |

| | |
|---|---|
| தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+) 7.50% குறைத்துள்ளார். |
| பேச்சு வார்த்தைக்குப்பின் / ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் . | ரூ.1,36,44,290.59 (+) 7.50% அதிகம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு | வகுப்பு –1 |
| பணிக்கான நிதி ஆதாரம்<br>அ) வரவு செலவு திட்ட தலைப்பு | மூலதன நிதி 2016-2017 |
| ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | 26.10.2016 |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 27.07.2016 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திரு.A.அசோக்குமார் அவர்களின் ஒப்பத் தொகை 2015-2016 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,26,92,363.34ஐ விட(+)16.00% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,47,23,141.47ஆகும். எனவே, 27.07.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+)7.50% ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் இதற்கு மேல் ஒப்பத்தொகையை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.1,36,44,290.59 மற்றும் ஒப்ப சதவீதம் (+)7.50% அதிகமாகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.1,36,44,290.59 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+) 7.50% அதிகம் |
| The Hindu (Habitat) dated.23.07.2016 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (-) 3.33 % குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 29.07.2016அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.1,36,44,290.59க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திரு.A அசோக்குமார் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திரு.A.அசோக்குமார் அவர்களின் ரூ.1,36,44,290.59 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சத்து நாற்பத்துநான்காயிரத்து இறுநூற்று தொண்ணூறு மற்றும் ஐம்பத்தொன்பது பைசா மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திரு.A அசோக்குமார் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**16.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.**224/2016** நாள்.**16.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**17.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.**235/2016**, நாள்.**17.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2437/2015**
**ஆணையர் அவர்களின் 09.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.437/2016 **பொருள் எண்.09**

**ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – மண்டலம் –15, வார்டு–192ல் நீலாங்கரை சரஸ்வதி நகர் தெற்கில், அறிஞர் அண்ணா நகர், 4வது தெருவில் வைத்தியலிங்கம் சாலை முதல் தெற்கில் பக்கிங்காம் கால்வாய் வரை புதிய ஆர்.சி.சி.பெட்டக வடிவ 900 மி.மீ x 900 மி.மீ புதிய மழைநீர் கால்வாய் கட்டும் பணி ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர் SPL இன்ப்ரா ஸ்டெச்சர் பிரைவேட் லிமிட்டெட்., அவர்களுக்கு பணியணை அளிக்க அனுமதி**

1. பணியின் விவரம் :

| வ. எண் | மண்டலம் / வார்டு | பணியின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1. | 11/148 | மண்டலம்–15, வார்டு–192ல் நீலாங்கரை சரஸ்வதி நகர் தெற்கில், அறிஞர் அண்ணா நகர், 4வது தெருவில் வைத்தியலிங்கம் சாலை முதல் தெற்கில் பக்கிங்காம் கால்வாய் வரை புதிய ஆர்.சி.சி. பெட்டக வடிவ 900 மி.மீx900 மி.மீ புதிய மழைநீர் கால்வாய் கட்டும் பணி | ஆர்.சி.சி. பெட்டக வடிவ மழைநீர் கால்வாய் கட்டும் பணி | 510மீ | ரூ,1,03,75,000/– |

2. மதிப்பீட்டின் எண் / குழுவின் மன்றத்தின் தீர்மான எண் : மன்ற தீர்மான எண். 684/2015, நாள்.27.11.2015
3. திட்ட குறியீட்டு எண் : பின்னர் பெறப்படும்
4. மதிப்பீட்டின் தொகை
   அ) பணியின் செலவீனம் : ரூ. 90,61,065.27
   ஆ) மேற்பார்வை செலவினம் : ரூ. 90,61,06.53
   இ) தமிழ் நாடு கட்டுமான தொழிலாளர் : ரூ. 90,610.65
   ஈ) மின்சார ஒயர் மற்றும் குழாய்கள் மாற்ற ரூ. 90,610.65
   எ) இதர செலவுகள் : ரூ. 2,26,606.90

   ——————————
   மொத்தம் ரூ. 1,03,75,000.00
   ——————————

5. எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் : நியூ இந்தியன் எக்ஸ்ப்ரஸ் நாளிதழ், 08.01.2016
   மக்கள் குரல் நாளிதழ், 08.01.2016
6. ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட நாள் : 20.01.2016
7. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் : 20.01.2016
8. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில், உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் : ஆம்
9. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன : 2
10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன : 2

**11.** ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்:-

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் (திரு / திருவாளர்கள்) | பணியின் அலுவலக மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | 2014 –2015 அலுவலக விலை விகிதம் விழுக்காடு அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| **1** | திருவாளர். SPL இன்ப்ரா ஸ்டெச்சர் பிரைவேட் லிமிட்டெட்., | ரூ. **90,61,065.27** | ரூ.**1,13,60,806.79** | (+) **25.38%** அதிகம் |
| **2** | திருவாளர். செந்தூர் முருகா கன்ஸ்ட்ரக்ஷன் | ரூ. **90,61,065.27** | ரூ. **1,13,93,521.80** | (+)**25.74%** அதிகம் |

**12.** குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : ஆம் **05.02.2016** நாளிட்ட **3**வது கடிதத்தில் ஒப்பந்ததாரர் தனது விலை பட்டியலிருந்து குறைத்து ரூ.**92,78,567.65/–** பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.

**13.** இறுதி ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் : (+) **2.40** % அதிகம்

**14.** குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை பதிவு நாள் : முதல் வகுப்பு

**15.** கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் : ரூ. **1,03,000/–**. டிடி.எண்.**052599**/ நாள்.**20.01.2016** ஆக்ஸ்சிஸ் வங்கி, வேளச்சேரி சென்னை–**82**,

**16.** பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? : ஆம்

அ) வரவு செலவுத்திட்ட தலைப்பு : மழைநீர் வடிகால் துறை மூலதன நிதி **2015 – 2016**

**17.** ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : **90** நாட்கள்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்பத்தில் இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் SPL இன்ப்ரா ஸ்டெச்சர் பிரைவேட் லிமிட்டெட்.,அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.**1,13,60,806.79/–** ஆகும். **2014 – 2015**ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையானரூ. **90,61,065.27/–** உடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை (+) **25.38%**அதிகமாகும். எனவே, **05.02.2016** அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் விலை குறைத்துள்ளபடி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ. **92,78,567.65** மற்றும் ஒப்ப சதவீதம் (+) **2.40%** அதிகம் ஆகும்.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர் SPL இன்ப்ரா ஸ்டெச்சர் பிரைவேட் லிமிட்டெட்., அவர்கள் அளித்த ஒப்ப விலை **2014 – 2015**ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (+)**2.40%** அதிகம் என்பதாலும் சந்தை விலையை ஒப்பிடுகையில் (**–**)**4.32%** குறைவாக இருப்பதாலும் ஒப்ப விலை **2015–2016**ஆம் ஆண்டில் விலை விகிதத்தின்படி (+) **0.98%** அதிகமாக இருப்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர் SPL இன்ப்ரா ஸ்டெச்சர் பிரைவேட் லிமிட்டெட்.,அவர்களுக்கு ரூ. **92,78,567.65/–** மதிப்பிற்கு பணிகள் அளிக்க ஒப்பந்தபுள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**16.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.**219/2016** நாள்.**16.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**17.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.**230/2016**, நாள்.**17.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.பி1/403/2016**
**ஆணையர் அவர்களின் 11.08.2016நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.438/2016 **பொருள் எண்.10**

**மண்டலம்–5, வார்டு–58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள வருவாய் துறை கட்டடத்தை முழுவதும் புதுப்பிக்கும் பணிக்காக திருவாளர்கள்.R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு பணி வழங்க அனுமதி**

**வார்டு எண் : 58** **மண்டலம் : 5**

| | |
|---|---|
| பணியின் பெயர். | மண்டலம்–5, வார்டு–58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள வருவாய் துறை கட்டடத்தை முழுவதும் புதுப்பிக்கும் பணி |
| மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | மன்றத் தீர்மானஎண்.261/2016, நாள்.26.02.2016 |
| எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்–1 |
| மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| மதிப்பீட்டின் தொகை | ரூ. 2,91,00,000.00 |
| (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 2,46,40,059.71 |
| (ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 24,64,005.97 |
| (இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 6,16,001.49 |
| (ஈ) எதிர்பாரா செலவு | ரூ. 6,15,731.03 |
| (உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 2,46,400.60 |
| (ஊ) தர நிர்ணயம் | ரூ. 2,46,400.60 |
| (எ) மாற்று ஏற்பாடுகள் பணி | ரூ. 25,000.00 |
| (ஏ) மற்ற பிற இனங்கள் | ரூ. 2,46,400.60 |
| மொத்தம் | ரூ. 2,91,00,000.00 |
| எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள். 23.06.2016<br>2. தினத்தந்தி நாள். 22.06.2016<br>3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 22.06.2016 |
| ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 26.07.2016 |
| ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? | ஆம் |
| எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? | இரண்டு (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது) |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள்/திருமதி | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2015-2016 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | R. கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ | 2,46,40,059.71 | 2,72,28,940.00 | (+) 10.51 % அதிகம் |
| 2. | ராஜதுரை கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் | 2,46,40,059.71 | 2,81,09,160.00 | (+) 14.08 % அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | ஆம். நாள். 28.07.2016 மற்றும் 29.07.2016 ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+) 5.86 % குறைத்துள்ளார். |
| பேச்சு வார்த்தைக்குப்பின் / ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் . | ரூ.2,60,83,115.00 (+) 5.86% அதிகம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு | வகுப்பு –1 |
| பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு | மூலதன நிதி 2016-2017 |
| ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | 25.10.2016 |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 26.07.2016 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 28.07.2016 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். R. கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களின் ஒப்பத் தொகை 2015-2016 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,46,40,059.71 யை விட (+)10.51 % அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.2,72,28,940.00ஆகும். எனவே, 28.07.2016 மற்றும் 29.07.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.2,60,83,115.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் ஒப்பத்தொகையை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.2,60,83,115.00மற்றும் ஒப்ப சதவீதம் (+) 5.86% அதிகமாகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.2,60,83,115.00 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் | (+) 5.86% அதிகம் |
| The Hindu (Habitat) dated.23.07.2016 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (-) 2.71 % குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 29.07.2016அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.2,60,83,115.00க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள்.R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். R. கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களின் ரூ.2,60,83,115.00 (ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சத்து என்பத்து

மூன்றாயிரத்து நூற்று பதினைந்து மட்டும்) கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். R. கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு அளிக்க பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.229/2016 நாள்.16.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.240/2016, நாள்.17.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.பி5/4716/2013**
**ஆணையர் அவர்களின்11.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.439/2016 **பொருள் எண்.11**

**மண்டலம் 5, வார்டு 58, ஈ.வெ.ரா பெரியார் சாலையில் உள்ள ரிப்பன் மாளிகை புனரமைக்கும் பணிக்கு கூடுதலாக வெளிப்புற மற்றும் உள் வேலைகள் பணியிடம் அபிவிருத்தி செய்யும் பணிக்கு திருவாளர்கள். R. கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு ஒப்பந்த காலத்தை 30.09.2016 வரை நீட்டிப்பு செய்யவும் அதே ஒப்பந்ததாரரை கொண்டு கூடுதல் பணி மேற்கொள்ளவும் அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி புராதன கட்டடங்களில் ஒன்றான மண்டலம்–5, வார்டு–58ல் உள்ள ரிப்பன் மாளிகையை புனரமைக்கும் பணிக்கு கூடுதலாக வெளிபுற மற்றும் உள்வேலைகள் மற்றும் பணியிடம் அபிவிருத்தி செய்யும் பணிக்கு 2013–2014 ஆண்டின் அலுவலக விலைப்பட்டில் அடிப்படையில் ரூ.735 இலட்சங்களில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் ஆர். கிருஷ்ணமூர்த்தி அன் கோ அவர்களுக்கு ரூ.8,13,48,740/–க்கான ஒப்பத்திற்கு மன்ற தீர்மான எண் 190/2014 நாள் 25.02.2014 அனுமதி பெறப்பட்டு 28.02.2014 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது, பணி நடைபெற்று வருகிறது ஒப்பந்த காலம் 18 மாதங்கள் ஆகும்.

ரிப்பன் கட்டடம் விரிவாக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிட அலுவலகமாக இயங்கி வருகிறது. ரிப்பன் கட்டடம் உயர் அதிகாரிகள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு மேயர், நிலைக்குழு தலைவர்கள் மற்றும் அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதனால் கட்டடத்தில் அலுவலகங்கள் இயங்கும் இடத்தில், அலுவலர்கள் பாதிக்காவண்ணம் உள்ள இடத்தில் மட்டும் பணி நடத்தப்படுகிறது.

ரிப்பன் கட்டடத்திலுள்ள கழிவுநீர், குடிநீர் மற்றும் தற்காலிக தடுப்புகள் ஆகியவை நீக்குதல் மற்றும் பொருத்துதல் ஆகிய பராமரிப்பு பணிகள் மற்றும் தற்காலிக மாற்று பணிகள் ஆகியவற்றை இதே ஒப்பந்ததாரரை கொண்டு செய்ய வேண்டி இருந்தது. மேலும், ரிப்பன் கட்டடத்தில் பல்வேறு அலுவலகங்கள் நடைபெற்றதால், அவ்வலுவலகங்களை வேறு இடங்களுக்கு தற்காலிகமாக மாற்ற கால அவகாசம் தேவைப்பட்டதாலும், பணி செய்ய போதுமான இடம் ஒதுக்கப்பட முடியாததனாலும், பணியினை தொடர்ந்து செய்ய இயலாத காரணத்தாலும் பணியினை தற்காலிகமாக 05.07.2015 முதல் 03.10.2015 வரை நிறுத்த ஆணை வழங்கப்பட்டது. இதன்பிறகு ஒப்பந்ததாரரால் மீண்டும் பணி துவங்கி பணி தொடர்ந்து நடைபெற்றது.

2015 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் வரலாறு காணாத வகையில் மழை பெய்ததாலும், ரிப்பன் மாளிகை வளாகத்தில் பகல் நேரங்களில் அனைத்து அலுவலகங்களும் இயங்கி வருவதால் இரவு நேரங்களில் மட்டுமே பெரும்பாலும் பணிகளை மேற்கொள்ள வேண்டிய சிரமம் இருப்பதாலும் இப்பணியினை உரிய காலத்திற்குள் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டது எனவும் தற்போது பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது என்பதால் 30.11.2016 வரை ஒப்ப காலத்தை நீட்டிப்பு செய்து தருமாறும் அதற்கள் பணிகளை செம்மையாக செய்து முடிப்பதாகவும் கோரி கடிதம் அளித்துள்ளார்கள்.

இது குறித்து, கீழ்க்கண்ட காரணங்களால் பணியின் காலம் அதிகரிக்கலாம் என சமர்பிக்கப்படுகிறது.

1. ரிப்பன் கட்டடத்தில் அலுவலக அலுவல்கள் நடக்கும்போது புனரமைப்பு பணியும் நடந்து கொண்டிருப்பதால் குறைந்த வேகத்துடன் செய்யப்பட வேண்டும்.
2. பணி எந்த அலுவலக அலுவலர்களையும் பாதிக்காவண்ணம் நடத்தப்பட வேண்டியுள்ளது.
3. மாமன்ற கூட்டம் மற்றும் நிர்வாக கூட்டங்கள் ரிப்பன் கட்டட வளாகத்தில் நடத்தப்படுவதால், அந்த நாட்ககளில் பணி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுகிறது.
4. புனரமைப்பு பணி முழுவதும் சுண்ணாம்பு கலவையால் செய்யப்பட்டு வருகிறது. கட்டடம் சுண்ணாம்பு கலவையால் செய்யப்படுவதால் சுண்ணாம்பு பூச்சு உறுதியாவதற்கு நீண்ட நாட்கள் ஆவதால் அது உறுதியான பின்னரே வர்ணம் பூச்சு மற்றும் சில பூ வேலைகள் செய்யப்பட வேண்டும். இதனால் நீண்ட நாட்கள்ஆகின்றது.

5. அனுபவம் மிக்க ஸ்தபதிகளை கொண்டுதான் புனரமைக்கும் பணி செய்ய முடியும், அவர்களிலும் சுண்ணாம்பு கலவையில் அனுபவம் மிக்கவர்கள் மிக சிலரே வெளிச்சந்தையில் கிடைக்கப்பெறுவார்கள். எனவே, கிடைக்கக்கூடிய ஸ்தபதிகளை கொண்டு பணி நடைபெற்று வருகிறது.
6. கதவுகளில் உள்ள பழைய பெயிண்ட் நீக்கும் பணி மிகவும் சத்தம் வரக்கூடிய வேலை என்பதால் அலுவலகம் நடைபெறாத நாட்கள் மற்றும் இரவில் மட்டுமே செய்ய முடியும்.
7. சுண்ணாம்பிலிருந்து இரண்டு விதமாக சுண்ணாம்பு கலவைகள் தயாரிப்பது நீண்ட காலம் எடுத்துக்கொள்ளும் ஒரு பணியாகும்.
8. இப்புனரமைப்பு பணிகள் நடைபெறும் பொழுது பணி நடைபெறாத அலுவலகங்கள் உள்ள இடத்தில் பராமரிப்பு பணிகளை உடனே செய்ய வேண்டியுள்ளதால், அப்பணிகளை முடித்த பின்னரே புனரமைப்பு பணி தொடர வேண்டியுள்ளது.
9. ரிப்பன் கட்டடத்தில் உள்ள சிற்ப வேலைகள் மற்றும் கலை நுட்பமுள்ள புனரமைக்கும் பணி பகல் நேரத்தில் மட்டுமே செய்ய முடியும். மேலும் இரு ஸ்தபதிகள் இரு புறம் அமர்ந்து ஒரே நேரத்தில் பூசும் பணி சில இடங்களில் செய்வதால் மட்டுமே ஏற்கனவே உள்ளது போன்ற தூண்கள் மற்றும் சிற்ப வேலைப்பாடுகள் உருவாக்க முடியும் இதனால் பகலில் மட்டுமே பணியாற்ற முடிகிறது.
10. அனைத்து சுண்ணாம்பு பூச்சு இரண்டு அடுக்காக பூசப்படுகிறது. முதல் முறை பூசப்படும் சுண்ணாம்பு கலவை காய்ந்த பின்னரே அடுத்த கலவை பூசப்பட வேண்டும். இக்கலவை காய்வதற்கு அதிக நேரம் எடுத்து கொள்வதால், அடுத்த அடுக்கு சுண்ணாம்பு கலவை பூசுவதற்கு அதிக நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.
11. பணி துவங்குவதற்கு முன்பு ஏற்கனவே கட்டியுள்ள எல்லா பழைய கழிவறைகள் மற்றும் தடுப்புகள் முழுவதும் அகற்றப்பட்டு உபயோகத்திலுள்ள கழிவறைக்கு மாற்று ஏற்பாடுகள் செய்த பின் வேலைகளை அவ்விடத்தில் துவங்க வேண்டியுள்ளது.
12. தரமான சுண்ணாம்பு வெளிச்சந்தையில் வெகுதூரத்தில் இருந்து பெறப்படுவதால் அதிக நாட்கள் ஆகிறது. மேலும், சுண்ணாம்பு கற்கள் தயாரிக்கும் சூளை சிறிய தயாரிப்பாளர்களாக இருப்பதால் அவர்களால் ஒரே நேரத்தில் அதிக அளவு சுண்ணாம்பு கற்கள் தயாரித்து குறித்த நேரத்தில் தர இயலவில்லை. இதனால் சுண்ணாம்பு பல சிறிய தயாரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்டு கலவை தயாரிக்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்பார்வை பொறியாளர் அவர்களின் ஆணைப்படி இப்பணியின் ஒப்பந்த காலம் **01.12.2015** வரை நீடிக்கப்பட்டது. தற்சமயம் பணி நடந்து வருகிறது.

ஒப்பந்ததாரர் தெரிவித்துள்ள பணி தாமதத்திற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது.

மேற்கண்ட பணியின் ஒப்பந்த காலத்தை **30.09.2016** வரை நீட்டிக்கலாம் என கருதப்படுகிறது.

இந்நிலையில் இந்த பணியினை ASI, INTACH, ANNA UNIVERSITY வல்லுநர்களை கொண்ட வல்லுநர் குழு IIT Madras மற்றும் மூன்றாம் நபர் (Third Party) கலந்தறிதற்குரியவர் ஆகியோர்களால் முறையாக பார்வையிடும் பொழுது, அறிவுறுத்தப்பட்ட கூடுதலாக செய்யவேண்டிய பணிகள் மற்றும் கட்டடத்தின் மேற்பூச்சினை அகற்றும் பொழுது கூடுதலாக செய்ய வேண்டிய பணிகள் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு கூடுதல் பணிகள் செய்யவேண்டியதன் பொருட்டு இப்பணியின் பெருமளவு பணம் செலவு செய்யப்பட்டுவிட்டதாலும் கூடுதல் பணிகளுக்கான பணம் இல்லாவிட்டால் பணி தற்காலிகமாக நிறுத்தப்படவேண்டிவரும். தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா ஒப்ப சட்டத்தின் படி (Tamilnadu Tender Transparency act 1998) ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்ப தொகைக்கு கூடுதலாக **25** சதவிகிதத்திற்குள் அதே ஒப்பந்ததாரரைக் கொண்டு பணிகளை நிறைவேற்றலாம். அதாவது ரூ.**8,13,48,740 + 2,03,37,185 (25** சதவீதம்) = **10,16,85,925** ஒப்பத்தொகைக்குள் பணிகளை மேற்கொள்ளலாம். இவ்வகையில் கூடுதல் பணிகளை நிறைவேற்றினால் மறுபடியும் ரூ.**1.90** கோடிக்கு ஒப்பம் கோரி முடிவு செய்து பணிகளை நிறைவேற்ற ஆகும் காலதாமதம் தவிர்க்கப்படும் என்று கருதப்படுகிறது. மேலும் ஏற்கனவே **2014**ல் ஒப்புக்கொண்ட விலைகளுக்கு ஒப்பந்ததாரர் பணி மேற்கொள்வதால், மாநகராட்சிக்கு எந்தவித நிதி

இழப்பும் ஏற்படாது. இதனாலேயே ரூ. 1.90 கோடிக்காக கூடுதல் மதிப்பீடு 2013–14 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் படி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த கூடுதல் பணிக்கான திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்படும்பொழுது, அதில் ஏற்கனவே உள்ள இனங்களில் மாறுதல் மற்றும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள இனங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ,7.35 கோடி மற்றும் கூடுதலாக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.1.90 சேர்த்து மொத்தம் 9.25 கோடி (10.00 கோடிக்கு மிகாமல் உள்ளது.) என்பதால் மன்றத்தின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம்.

எனவே,

1) மண்டலம்–5 வார்டு 58ல் உள்ள ரிப்பன் மாளிகையை புனரமைக்கும் பணிக்கு கூடுதலாக வெளிபுற மற்றும் உள்வேலைகள் மற்றும் பணியிடம் அபிவிருத்தி செய்யும் பணிக்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.சு.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு ஒப்ப காலத்தை 30.09.2016 வரை நீட்டிப்பு செய்யவும்,
2) மேற்கண்ட பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள கூடுதல் பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.1.90 கோடிக்கு நிர்வாக அனுமதியும்,
3) தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா ஒப்ப சட்டத்தின் படி (Tamilnadu Tender Transparency act 1998) ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்ப தொகைக்கு கூடுதலாக 25 சதவிகிதத்திற்குள் அதே ஒப்பந்ததாரரைக் கொண்டு பணிகள் மேற்கொண்டு வருவதற்கு பின்னேற்பு அனுமதியும்,
4) கூடுதல் பணிகளுக்கும் கூடுதல் ஒப்பத்தொகைக்கும் ஒப்பந்ததாரருடன் கூடுதல் ஒப்பந்தம்(Supplementary Agreement) நிறைவேற்றவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008 நாள்.26.08.2008 ல் வெளியிட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்ட விதிகளின்படி பணி மேற்கொள்ள நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“16.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.231/2016 நாள்.16.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.242/2016, நாள்.17.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.து.ந.க.எண் எம்1/6013/2015**
**ஆணையர் அவர்களின் 09.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.440/2016 **பொருள் எண்.12**

**வருவாய் துறை – சமுதாய நலக்கூடம் முன்பதிவு செய்வது – பெருமழை வெள்ளம், கண்ணப்பர்திடல் சமுதாய நலக்கூடத்தில் காவலர்கள் தங்குதல் – தமிழக சட்ட மன்ற தேர்தல் 2016 பணிக்கு காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – ஆகியவற்றால் நிகழ்ச்சி ரத்து செய்தது – செலுத்திய வாடகை, சேவை வரி தொகை திரும்ப வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சமுதாய நலக்கூடங்களில் பொது மக்களின் நிகழ்ச்சிக்காக முன்பதிவு செய்யப்படுகிறது. சென்னை மாநகரில் 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கனமழை பொழிந்து வெள்ளம் ஏற்பட்டதால் பெரும்பாலான சமுதாய நலக்கூடங்களில் மழை நீர் தேங்கியதாலும், மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களை சமுதாய நலக்கூடங்களில் தங்க வைக்கப்பட்டதாலும் வெள்ள நிவாரண பணியில் ஈடுபடும் ஊழியர்கள், காவலர்கள், இராணுவ வீரர்கள் ஆகியோர்கள் சமுதாயநலக்கூடங்களில் தங்கவைக்கப்பட்டதாலும், வெள்ள நிவாரண பொருட்கள் வைக்கப்பட்டதாலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு தயாரிக்க சமுதாய நலக்கூடங்கள் தேவைப்பட்டதாலும், சமுதாய நலக்கூடங்களை முன்பதிவு செய்தவர்கள் நிகழ்ச்சி நடத்த இயலாத சூழ்நிலை உருவாகிவிட்டது.

கனமழை பொழிந்து வெள்ளச் சேதம் காரணமாக சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடங்களில் 01.12.2015 முதல் 20.12.2015 வரை முன்பதிவு நிகழ்ச்சி நடத்த முடியாத நபர்களுக்கு முன்பதிவு செய்த தொகையை திருப்பி வழங்குவதற்கும், இதுகுறித்து மன்றத்தின் பின்னேற்பு பெறுவதற்கும் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 24.12.2015 நாளிட்ட உத்தரவு பெறப்பட்டு அதனடிப்படையில் 41 நபர்களுக்கு அவர்கள் செலுத்திய வாடகை தொகை **ரூ. 1,81,277** மற்றும் சேவை வரி தொகை **ரூ. 25, 470** திருப்பி அளிக்கப்பட்டது. முன்வைப்பு தொகை சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்கள் மூலமாக விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்டது. (அதன் விவர பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

மண்டலம்–5, கோட்டம்–58ல் உள்ள கண்ணப்பர்திடல் சமுதாய நலக்கூடத்தில் உயர்நீதிமன்றத்தில் பாதுகாப்பு பணி மேற்கொண்டுள்ள CISF காவலர்கள் தங்க வைக்கப்பட்டதால் 01.01.2016 முதல் 6.3.2016 வரை முன்பதிவு செய்து மேற்கண்ட காரணத்தால் நிகழ்ச்சி நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டவர்களுக்கு அவர்கள் செலுத்திய வாடகை, சேவை வரி ஆகியவற்றை திருப்பி வழங்க முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 14.01.2016 மற்றும் ஆணையர் அவர்களின் 09.02.2016 நாளிட்ட அன்று உத்தரவு பெறப்பட்டு அதனடிப்படையில் 23 நபர்களுக்கு அவர்கள் செலுத்திய வாடகை தொகை **ரூ. 62,932** மற்றும் சேவை வரி தொகை **ரூ. 8,917** திருப்பி அளிக்கப்பட்டது. முன்வைப்பு தொகை சம்பந்தப்பட்ட மண்டல அலுவலம்–5 மூலமாக விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்டது. (அதன் விவர பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடங்களில் மார்ச் 2016 முதல் மே 2016 வரை வரை முன்பதிவு செய்து தமிழக சட்டமன்ற தேர்தல்–2016 காரணமாக சமுதாய நலக்கூடத்தில் நிகழ்ச்சி நடத்த முடியாத நபர்களுக்கு முன்பதிவு செய்த தொகையை திருப்பி வழங்குவதற்கும், நிகழ்ச்சியை ரத்து செய்தவர்கள் மாற்று தேதி கேட்கும்பட்சத்தில் அச்சமுதாய நலக்கூடம் காலியாக இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு ஒருமுறை மட்டும் வாய்ப்பு வழங்குவதற்கும் இதற்கு அனுமதி வழங்கும் பட்சத்தில் இதுகுறித்து மன்றத்தின் பின்னேற்பு பெறுவதற்கும் ஆணையாளர் அவர்களின் 04.04.2016 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு, அதனடிப்படையில் 7 நபர்களுக்கு அவர்கள் செலுத்திய வாடகை **ரூ. 54,338** மற்றும் சேவை வரி தொகை **ரூ. 7,546** திருப்பி அளிக்கப்பட்டது. முன்வைப்பு தொகை சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்கள் மூலமாக விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்டது. (அதன் விவர பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

| வ. எண் | சமுதாய நலக்கூடம் ரத்து செய்யப்பட்டவர் எண்ணிக்கை | காரணம் | வாடகை | சேவை வரி |
|---|---|---|---|---|
| 1. | 41 | டிசம்பர் 2015 கனமழை காரணமாக | ரூ. 1,81,277 | ரூ. 25, 470 |
| 2. | 23 | CISF காவலர்கள் சமுதாய நலக்கூடத்தில் தங்கவைக்கப்பட்டதால் | ரூ. 62,932 | ரூ. 8,917 |
| 3. | 7 | தமிழக சட்டமன்ற தேர்தல் மே 2016 | ரூ. 54,338 | ரூ. 7,546 |
| | **மொத்தம்** | | **ரூ 2,98,547** | **ரூ. 41,933** |

**01.12.2015 முதல் 20.12.2015 வரை கன மழை காரணமாக நிகழ்ச்சி ரத்து செய்து தொகையை திருப்பி வழங்கியவர்களின் விவரம்**

| வ. எண் | விண்ணப்பதாரர் பெயர் | சமுதாய நலக்கூட பெயர் | முன்பதிவு செய்த தேதி | நிகழ்ச்சி | நிகழ்ச்சி தேதி | செலுத்திய தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வாடகை | முன் பணம் | சேவை வரி |
| 1. | சங்கர் | சத்திய மூர்த்தி நகர் | 20.11.2015 | பிறந்த நாள் | 6.12.2015 மாலை | 1395 | 1500 | 202 |
| 2. | டி. பிரபு | சத்திய மூர்த்தி நகர் | 17.11.2015 | பிறந்த நாள் | 04.12.2015 மாலை | 1395 | 1500 | 202 |
| 3. | எஸ். யுவராஜ் | சத்திய மூர்த்தி சாலை சேத்துபட்டு | 30.10.2015 | பிறந்த நாள் | 3.12.2015 மாலை | 1738 | 1500 | 243 |
| 4. | கே. பக்தவச்சலம் | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 11.08.2015 | வரவேற்பு | 5.12.2015 மாலை | 7500 | 20000 | 1050 |
| 5. | கே. வெங்கடேசன் | போகி பாளையம் | 3.12.2015 | பிறந்த நாள் | 5.12.2015 மாலை | 1650 | 1500 | 231 |
| 6. | எஸ். பாபு | போகி பாளையம் | 6.10.2015 | பிறந்த நாள் | 3.12.2015 மாலை | 1650 | 1500 | 231 |
| 7. | எம். நாகதாஸ் | அண்ணாபிள்ளை தெரு | 11.11.2015 | சீமந்தம் | 6.12.2015 மாலை | 1100 | 1500 | 154 |
| 8. | எம். முருகன் | சந்திரயோகி சமாதி | 6.11.2015 | பிறந்த நாள் | 11.12.2015 மாலை | 2025 | 1500 | 284 |
| 9. | டி. பன்னீர்செல்வம் | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 2.6.2015 | திருமணம் | 6.12.2015 மாலை 7.12.2015 காலை | 15000 | 20000 | 2100 |
| 10. | மஸ்தான் | கஜலட்சுமி காலனி | 12.11.2015 | வரவேற்பு | 13.12.2015 மாலை | 1525 | 1500 | 214 |
| 11. | டி. சீனிவாசன் | செம்மஞ் சேரி | 29.10.2015 | மஞ்சள் நீராட்டு விழா | 06.12.2015 மாலை | 700 | 1000 | 98 |
| 12. | ஜி. மனோகரன் | சந்திரயோகி சமாதி | 17.11.2015 | பணி ஓய்வு விழா | 5.12.2015 மாலை | 2025 | 1500 | 294 |
| 13. | என். சுரேஷ் | ஜாபர்கான் பேட்டை | 23.09.2015 | ஐயப்பா பூஜை | 12.12.2015 மாலை 13.12.2015 காலைமுதல் மாலை வரை | 4500 | 1500 | 630 |
| 14. | ரத்தினசபாபதி | சிசுவிஹார் | 27.10.2015 | பிள்ளையார் நோன்பு | 17.12.2015 மாலை | 2203 | 1500 | 308 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 15. | எம். தாமோதரன் | கேபி தாசன் சாலை | 20.112015 | நிச்சய தார்த்தம் | 6.12.2015 மாலை | 2200 | 1500 | 319 |
| 16. | எஸ். ரகுராமன் | ஜெய்நகர் | 30.11.2015 | நிச்சய தார்த்தம் | 6.12.2015 காலை | 1100 | 1500 | 160 |
| 17. | வி. சுகன்யா | கண்ணப்பர் திடல் | 2.11.2015 | பிறந்தநாள் | 3.12.2015 மாலை | 2325 | 1500 | 326 |
| 18. | ஆர். ராஜா | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 28.09.2015 | வரவேற்பு | 9.12.2015 மாலை | 7500 | 20000 | 1050 |
| 19. | பி. பூபாலன் | ஆர் ஏ புரம் | 6.8.2015 | ஐயப்பன் பூஜை | 19.12.2015 மாலைமுதல் 20.12.2015 முழு நாள் | 6000 | 1500 | 840 |
| 20. | பி. லாரன்ஸ | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 8.10.2015 | வரவேற்பு | 7.12.2015 மாலை | 7500 | 20000 | 1050 |
| 21. | என். சுப்பிரமணி | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 5.11.2015 | நிச்சய தார்த்தம் | 10.12.2015 மாலை | 7500 | 20000 | 1050 |
| 22. | மாரியப்பன் | ஜாபர்கான் பேட்டை | 16.11.2015 | சீமந்தம் | 6.12.2015 மாலை | 1500 | 1500 | 218 |
| 23. | பிராபகரன் | சிபி ராமாசாமி ரோடு | 15.09.2015 | பிறந்தநாள் | 12.12.2015 மாலை | 2500 | 1500 | 350 |
| 24. | ஏ. பாலசந்தர் | ஜாபர்கான் பேட்டை | 8.9.2015 | சீமந்தம் | 6.12.2015 காலை | 1500 | 1500 | 210 |
| 25. | அரவிந்தராமலிங்க ம் | சிபி ராமாசாமி ரோடு | 8.07.2015 | பிறந்தநாள் | 15.12.2015 காலை | 2500 | 1500 | 350 |
| 26. | எஸ். வினோத்குமார் | நேரு காலனி | 25.11.2015 | சீமந்தம் | 6.12.2015 மாலை | 750 | 100 | 109 |
| 27. | கே. செல்வராஜ் | கேபிதாசன் ரோடு | 15.10.2015 | திருமணம் | 5.12.2015 மாலைமுதல் 6.12.2015 காலை | 4390 | 1500 | 615 |
| 28. | அருண் | சிசுவிஹார் | 8.10.2015 | பிறந்தநாள் | 12.12.2015 மாலை | 2203 | 1500 | 308 |
| 29. | பி. நாராயணன் | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 16.10.2015 | வரவேற்பு | 14.12.2015 மாலை | 7500 | 20000 | 1050 |
| 30. | டி. சியாமளாதேவி | காமராஜர் சாலை விருகம்பா க்கம் | 16.10.2015 | நிச்சய தார்த்தம் | 2.12.2015 மாலை | 1800 | 1500 | 252 |
| 31. | டி. ஆரோக்கியராஜ் | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 19.10.2015 | வரவேற்பு | 16.12.2015 மாலை | 7500 | 20000 | 1050 |
| 32. | வி. மோகன் | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 27.08.2015 | பிறந்தநாள் | 04.12.2015 மாலை | 7500 | 20000 | 1050 |
| 33. | ஏ. ரவி | சிஐடி நகர் | 28.10.2015 | நிச்சய தார்த்தம் | 4.12.2015 மாலை | 1600 | 1500 | 224 |
| 34. | எஸ். ஆனந்த | சிபி ராமசாமி | 20.10.2015 | சீமந்தம் | 2.12.2015 மாலை | 2500 | 1500 | 350 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 35. | டி. காமேஷ் | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 18.11.2015 | வரவேற்பு | 19.12.2015 மாலை | 7500 | 20000 | 1088 |
| 36. | ஆர். சுரேஷ் | செம்மஞ் சேரி | 04.11.2015 | பிறந்தநாள் | 10.12.2015 காலை முதல் மாலை | 1400 | 1000 | 196 |
| 37. | பி. ராஜேஷ் | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 07.07.2015 | ஜெபக் கூட்டம் | 11.12.2015 காலை முதல் 12.12.2015 மாலை | 30000 | 40000 | 4200 |
| 38. | ஜெஸ்டின் ஜெரால்டு | டாக்டர் அம்பேத்கர் ரோடு | 07.07.2015 | ஜெபக் கூட்டம் | 13.12.2015 காலை முதல் மாலை | 15000 | 20000 | 2100 |
| 39. | திரு.ஈ.முருகேசன் | ஜெய் நகர் | 15.09.2015 | 25 ஆம் ஆண்டு விழா | 06.12.2015 மாலை | 1100 | 1500 | 154 |
| 40. | திரு. ஆர். மதன்குமார் | விருகம்பா க்கம் | 25.08.2015 | பிறந்தநாள் | 4.12.2015 மாலை | 1800 | 1500 | 252 |
| 41. | திருமதி. ஆர். விஜயலட்சுமி | சிசுவிஹார் | 14.09.2015 | காதணி விழா | 06.12.2015 காலை | 2203 | 1500 | 308 |

**<u>மண்டலம் –5, கோட்டம் –58ல் உள்ள கண்ணப்பர்திடல் சமுதாய நலக்கூடத்தில் உயர்நீதிமன்ற CISF காவலர்கள் தங்க வைக்கப்பட்டதால் 01.01.2016 முதல் 6.3.2016 வரை முன்பதிவு செய்து நிகழ்ச்சி ரத்து செய்து தொகையை திருப்பி வழங்கியவர்களின் விவரம்</u>**

| வ. எ ண் | விண்ணப்பதாரர் பெயர் | சமுதாய நலக்கூட பெயர் மண்டலம் 5 வார்டு–58 | முன்பதிவு செய்த தேதி | நிகழ்ச்சி | நிகழ்ச்சி தேதி | செலுத்திய தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வாட கை | முன் பணம் | சேவை வரி |
| 1. | சி. குமார் | கண்ணப்பர் திடல் | 17.08.2015 | பிறந்தநாள் | 23.12.2015 மாலை | 2325 | 1500 | 326 |
| 2. | ஏ. ஆனஸ்ட்ராஜ் | கண்ணப்பர் திடல் | 11.08.2015 | ஜெபக் கூட்டம் | 31.12.2015 மாலைமுதல் 01.01.2016 காலை | 3925 | 1500 | 550 |
| 3. | வி. சந்தோஷ்குமார் | கண்ணப்பர் திடல் | 19.11.2015 | பிறந்தநாள் | 27.12.2015 மாலை | 2325 | 1500 | 337 |
| 4. | ஆர். வேலன் | கண்ணப்பர் திடல் | 14.12.2015 | மஞ்சள் நீராட்டு விழா | 10.01.2016 மாலை | 2325 | 1500 | 337 |
| 5. | எம். ரமேஷ் (வி.எண். 2198) | கண்ணப்பர் திடல் | 15.09.2015 | மஞ்சள் நீராட்டு விழா | 8.01.2016 மாலை | 2325 | 1500 | 326 |
| 6. | சி. ரஞ்சித் (வி.எண். 2137) | கண்ணப்பர் திடல் | 09.09.2015 | திருமணம் | 19.01.2016 மாலைமுதல் 20.01.2016 காலை | 3925 | 1500 | 550 |
| 7. | டி. ரவிகுமார் (வி.எண். 3072) | கண்ணப்பர் திடல் | 9.12.2015 | வரவேற்பு | 24.01.2016 மாலை | 2325 | 1500 | 337 |
| 8. | வி. பி. பாக்கியலட்சுமி (வி.எண். 2863) | கண்ணப்பர் திடல் | 6.11.2015 | பணி ஓய்வு | 25.1.2016 மாலை | 581 | 1500 | 81 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9. | டி. சரவணன் (வி.எண். 3020) | கண்ணப்பர் திடல் | 27.11.2015 | பிறந்தநாள் | 28.01.2016 மாலை | 2325 | 1500 | 337 |
| 10. | ஸ்டீபன் (வி. எண். 2633) | கண்ணப்பர் திடல் | 16.10.2015 | திருமணம் | 3.2.2016 மாலை | 2325 | 1500 | 326 |
| 11. | எம். தேவி (வி.எண். 2383) | கண்ணப்பர் திடல் | 29.09.2015 | வரவேற்பு | 5.2.2016 மாலை | 2325 | 1500 | 326 |
| 12. | கே. ஜெகன் (வி.எண். 2125) | கண்ணப்பர் திடல் | 9.9.2015 | திருமணம் | 6.2.2016 மாலைமுதல் 7.2.2016 காலை வரை | 3926 | 1500 | 550 |
| 13. | எம். லட்சுமணன் (வி.எண். 2990) | கண்ணப்பர் திடல் | 25.11.2015 | வரவேற்பு | 7.2.2016 மாலை | 2325 | 1500 | **337** |
| 14. | வொய். ஜி, சாருகேசன் (வி.எண். 1430) | கண்ணப்பர் திடல் | 13.7.2015 | நிச்சய தார்த்தம் | 10.2.2016 மாலை | 2325 | 1500 | 326 |
| 15. | எஸ். ஜானகியம்மாள் (வி.எண். 2838) | கண்ணப்பர் திடல் | 4.11.2015 | திருமணம் | 11.2.2016 மாலைமுதல் 12.2.2016 காலை | 3925 | 1500 | 550 |
| 16. | கே. குமார் (வி.எண். 1257) | கண்ணப்பர் திடல் | 30.06.2015 | வரவேற்பு | 12.2.2016 மாலை | 2325 | 1500 | 326 |
| 17. | என். ஆனந்தன் (வி.எண். 2253) | கண்ணப்பர் திடல் | 18.09.2015 | திருமணம் | 13.02.2016 மாலைமுதல் 14.2.2016 காலை | 3925 | 1500 | 550 |
| 18. | கே. தண்டபாணி (வி.எண். 2411) | கண்ணப்பர் திடல் | 1.10.2015 | வரவேற்பு | 14.2.2016 மாலை | 2325 | 1500 | 326 |
| 19. | எம். பாலாஜி (வி.எண். 2858) | கண்ணப்பர் திடல் | 6.11.2015 | திருமணம் | 17.02.2016 காலைமுதல் மாலை வரை | 3925 | 1500 | 550 |
| 20. | ஈ. விநாயகமூர்த்தி (வி.எண். 3063) | கண்ணப்பர் திடல் | 8.12.2015 | காதணி விழா | 18.02.2016 மாலை | 2325 | 1500 | 337 |
| 21. | குப்பம்மாள் (வி.எண். 3097) | கண்ணப்பர் திடல் | 16.12.2015 | வரவேற்பு | 19.2.2016 காலைமுதல் மாலை வரை | 3925 | 1500 | 569 |
| 22. | எம். சுரேஷ் (வி.எண். 2927) | கண்ணப்பர் திடல் | 18.11.2015 | வரவேற்பு | 26.02.2016 மாலை | 2325 | 1500 | 337 |
| 23. | கே. பிரசாந்த் (வி.எண். 2215) | கண்ணப்பர் திடல் | 16.09.2015 | வரவேற்பு | 6.3.2016 மாலை | 2325 | 1500 | 326 |

**மார்ச் 2016 முதல் மே 2016 வரை வரை முன்பதிவு செய்து தமிழக சட்டமன்ற தேர்தல்–2016 காரணமாக சமுதாய நலக்கூடத்தில் நிகழ்ச்சி நடத் செய்து நிகழ்ச்சி ரத்து செய்து தொகை திருப்பி வழங்கியவர்களின் விவரம்**

| வ. எ ண். | விண்ணப்ப தாரர் பெயர் | முன் பதிவு செய்த தேதி | சமுதாய நலக் கூடத்தின் பெயர் | நிகழ்ச்சி தேதி | செலுத்திய தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வாட கை | முன் பணம் | சேவை வரி |
| 1. | சி. கனகராஜ் | 23.12.2015 | வெங்கடாசலபதி | 9.03.2016 மாலை முதல் 10.03.2016 காலை வரை | 6000 | 1500 | 870 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2. | கே.மாலிக் | 15.5.15 | சந்திரயோகி சமாதி சாலை | 16.4.16 2 மணி முதல் 17.4.16 – 10 மணி வரை திருமணம் | 6075 | 1500 | 759 |
| 3. | கே.சுப்பிரமணியன் | 4.9.15 | டாக்டர் அம்பேத்கர் சாலை | 20.4.16 மாலை முதல் 21.4.16 காலை வரை திருமணம் | 15000 | 20000 | 2100 |
| 4. | ஈஸ்வரி (பணியாளர்) | 19.9.15 | சந்திரயோகி சமாதி சாலை | 20.4.16 2 மணி முதல் 21.4.16 2 மணி வரை திருமணம் | 1013 | 1500 | 142 |
| 5. | வி.கோபி | 3.9.15 | டாக்டர் அம்பேத்கர் சாலை | 24.4.16 மாலை முதல் 25,4,16 காலை வரை திருமணம் | 15000 | 20000 | 2100 |
| 6. | எம்.விஜயா | 4.9.15 | டாக்டர் அம்பேத்கர் சாலை | 25.4.16 மாலை வரவேற்பு | 7500 | 20000 | 1050 |
| 7. | ஜி.வெங்கடேசன் (பணியாளர்) | 10.9.15 | டாக்டர் அம்பேத்கர் சாலை | 28.4.16 மாலை முதல் 29.4.16 காலை வரை திருமணம் | 3750 | 20000 | 525 |

எனவே மேற்கண்ட காரணங்களால் விண்ணப்பத்தாரர்கள் செலுத்திய வாடகை மற்றும் சேவை வரி தொகையை திருப்பி வழங்கியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமான மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘17.08.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.233/2016, நாள்.17.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.அ1/8458/2016**
**ஆணையர் அவர்களின் 11.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.441/2016 **பொருள் எண்.13**

**கல்வித்துறை – சென்னைப்பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம், உட்கட்டமைப்பு மற்றும் பள்ளிகளில் உள்ள பொருட்களை பாதுகாப்பதற்கான தேவைகளை அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே மேற்கொள்ள அனுமதி – தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்குவதற்கு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் 32 மேல்நிலைப்பள்ளிகளும், 38 உயர்நிலைப் பள்ளிகளும் 92 நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 119 தொடக்கப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. சுமார் 88,000 மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் நிர்வாகப் பணிகள் மற்றும் அலுவலகப் பணிகளும் நடந்து வருகின்றன. இப்பணிகள் செவ்வனே நடைபெறுவதற்கு பள்ளிகளில் மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் பள்ளிகளின் பாதுகாப்பும் மிகவும் அவசியமாகும்.

அனைத்துப் பள்ளிகளிலும் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியமாகும். 13.05.2015 நாளிட்ட முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் அனுமதியின்படி பள்ளித் தலைமையாசிரியர்களே தங்கள் பள்ளிக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு வசதிகளையும் 01.06.2015 முதல் 31.03.2016 வரை மேற்கொள்ளவும், மேலும் அவர்களுக்கு தேவைப்படும் நிதியை காவலர் செலவுகள் (Security Expenses) என்ற நிதிஒதுக்கீட்டில் பெற்று கல்வி அலுவலர் அவர்கள் மூலம் அளிக்க அனுமதி பெறப்பட்டது. அதற்கு மன்றத் தீர்மான எண். 247, நாள் 06.07.2015–ன்படி மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட பாதுகாப்புத் தேவைகளின் அனுமதி காலம் முடிவடைந்ததால் துணை ஆணையர்(கல்வி) அவர்களின் அனுமதி பெறப்பட்டு 01.04.2016 முதல் 30.04.2016 வரை ஒரு மாதத்திற்கு நீட்டிப்பு பெறப்பட்டு பள்ளிகளின் பாதுகாப்பு தேவைகள் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது மீண்டும் பள்ளித் தலைமையாசிரியர்களே தங்கள் பள்ளிக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு வசதிகளையும் 01.06.2016 முதல் 31.03.2017 வரை (10 மாதங்கள்) மேற்கொள்ளவும், மேலும் அவர்களுக்கு தேவைப்படும் நிதியை காவலர் செலவுகள் (Security Expenses) என்ற நிதிஒதுக்கீட்டில் பெற்று கல்வி அலுவலர் அவர்கள் மூலம் தலைமை ஆசிரியர்களுக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே,

1. பள்ளிகளில் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளி சார் உட்கட்டமைப்பு பொருட்களின் பாதுகாப்புத் தேவைகளை சந்தித்திட மாணவ/மாணவர்களின் நலனுக்காக பள்ளியின் தலைமையாசிரியரே நேரடியாக பாதுகாப்பு ஏற்பாடுகளை 01.06.2016 முதல் 31.03.2017 வரை (10 மாதத்திற்கு) மேற்கொள்ள அனுமதியும்,
2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதியும்,
3. இச்செலவினங்களுக்காக ரூ.2,28,20,000/– (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தி எட்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) வழங்க அனுமதியும்,
4. இத்தொகையை தொடக்க/நடுநிலைப்பள்ளிகளுக்கு கணக்கு குறியீட்டு எண். 80–82–07, 220–11–03–11 Security Expenses என்ற தலைப்பில் ரூ.1,26,00,000/– மற்றும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீடு எண்.80–82–01, 230–11–03–12 Security Expenses என்ற தலைப்பில் ரூ.1,02,20,000/– பெறுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**12.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.**12/2016**, நாள்.**12.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**17.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.**234/2016**, நாள்.**17.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.க.கு.ந.க.எண்.அ8/1244/2016**

**ஆணையாளர் அவர்களின் 09.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.442/2016 **பொருள் எண்.14**

**மத்திய கணக்கு குழுமம் – வருங்கால வைப்பு நிதி – பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ்நாடு) மற்றும் இதர நிதிகள் – 01.04.2016 முதல் 30.06.2016 வரை உள்ள நிதியாண்டிற்கான வட்டி விகிதம் 8.1 % நிர்ணயித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி**

அரசாணை எண்.209 நிதி (படிகள்)த் துறை, நாள். 15.07.2016 அரசாணையில் தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதி 01.04.2016 முதல் 30.06.2016 வரை உள்ள நிதியாண்டிற்கான வட்டி விகிதம் 01.04.2016 முதல் 8.1 சதவீதமாக நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டது. அரசாணையின் விவரம் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**FINANCE (ALLOWANCES) DEPARTMENT**
**G.O.No.209, DATED 15.07.2016**

(Dhunmugi, Aani 31, Thiruvalluvar Aandu 2047)

**PROVIDENT FUND**– General Provident Fund (Tamilnadu) – Rate of interest for the financial period 01.04.2016 to 30.06.2016 - Orders – Issued.

---

**Read** the following:-

1. G.O.Ms.No.129, Finance (Allowances) Department, dated 27.4.2015.
2. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs, (Budget Division) New Delhi Resolution No.5(1)-B(PD)/2016, dated 02.06.2016.

******

**ORDER**:

The Government direct that the accumulation at the credit of the subscribers to the General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of 8.1% (Eight point one per cent) with effect from $1^{st}$ April, 20-16 tp $30^{th}$ June, 2016.

2. The rate of interest on belated final payment of General Provident Fund accumulations remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as indicated in Para 1 above.

(BY ORDER OF THE GOVERNOR)

**K. SHANMUGAM**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

எனவே, அரசாணை எண்.209 நிதி (படிகள்)த் துறை, நாள். 15.07.2016 அரசாணையில் தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதி 01.04.2016 முதல் 30.06.2016 வரை உள்ள நிதியாண்டிற்கான வட்டி விகிதம் 01.04.2016 முதல் 8.1 சதவீதமாக நிர்ணயித்து வெளியிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.232/2016, நாள்.17.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.க.கு.ந.க.எண்.அ8/1227/2016**
**ஆணையாளர் அவர்களின் 09.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.443/2016 **பொருள் எண்.15**

**மத்திய கணக்கு குழுமம் – வட்டி, கடன் மற்றும் முன்பணங்களுக்கான வட்டி விகிதங்கள் – 2016–2017–ஆம் ஆண்டிற்கு நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை – பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசாணை எண்.208 நிதித் (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்) துறை, நாள்.08.07.2016ல் பல்வேறுவிதமான கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான வட்டிவிகிதங்கள் 2016–2017 – ஆம் ஆண்டிற்கு நிர்ணயித்து அரசாணை உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாணையின் விபரம் பின்வருமாறு:

**ABSTRACT**

**FINANCE (LOANS AND ADVANCES CELL) DEPARTMENT**
**G.O.NO.208, Dated 8th July 2016**
(Thunmugi, Aani 24, Thiruvalluvar Aandu 2047)

**INTEREST** – Rate of interest on Loans and Advances sanctioned by the State Government – Interest rates for the year 2016–2017 – Orders – Issued.

**READ** – the following ppers:

G.O. Ms. No.213, Finance (Loans and Advances Cell) Department, dated. 23.07.2015.

✯✯✯✯✯

**ORDER:**

Government direct that the rate of interest on various kinds of loans and advances by the State Government during the year 2016-17 shall be as shown below:-

| Sl No. | | Class of Loan / Advance | Percent per annum for the year 2016 -2017 |
|---|---|---|---|
| **1.** | | **Loans to State owned Industrial / Commercial Undertakings / Corporations, etc. including Financial Corporations and all other Local Bodies and Municipal Corporations.** | |
| | (a) | Plan Schemes for development purposes | **11.50** |
| | (b) | Other Schemes | **11.50** |
| | (c) | For capital formation and development purposes | **11.50** |
| | (d) | For Working Capital Support | **13.50** |
| | (e) | For Ways & Means , advances including loans to cover cash deficits | **13.50** |
| | (f) | For Ways & Means advance to Tamil Nadu Civil Supplies Corporation Limited for Public Distribution System | **10.00** |
| **2** | | **Loans to Co-operative Institutions and Co-operative Banks like Land Development Bank** | **10.00** |
| **3** | | **Loans to Government Servants** | |
| | **(i)** | **House Building Advance:** | |
| | | (a) For loans upto Rs.50,000/- | **5.50** |
| | | (b) For loans from Rs.50,001/- to 1,50,000/- | **7.00** |
| | | (c) For loans from Rs.1,50,001/- to 5,00,000/- | **9.00** |
| | | (d) Above Rs.5,00,000/- | **10.00** |

| | | | |
|---|---|---|---|
| | **(ii)** | **Conveyance Advance:** | |
| | | (a) For purchase of Motor car | **11.50** |
| | | (b) For purchase of Motor Cycle / Scooter | **9.00** |
| | | (c) For purchase of Bi – cycle | **5.50** |
| | **(iii)** | **Other personal Loans to Government Servants:** | |
| | | (a) For purchase of Computer | **10.00** |
| | | (b) Others | **10.00** |
| **4.** | **Other items:** | | |
| | Loans which are not covered in any specific category mentioned above | | **12.75** |
| **5.** | **Value of seized stock under Essential Commodities Act, 1955** | | **6.50** |
| **6.** | **Penal Interest** | | **2.50** |

2. The above rates will be applicable for all loans and advances being sanctioned during the year 2016-2017 and will have validity till the next revision is done

3. The rates of interest are general and will not apply to cases where reduced rates of interest have been sanctioned specially by the Government or where loans have been sanctioned by the Government free of interest. The Government may also sanction Ways and Means advances at special rates or interest taking into account, the cost of borrowing of the government.

4. The mobilization advances to Contractors for World Bank assisted projects wherein the standard bidding documents provide for exemption from paying of interest are however excepted from payment of interest.

5. The penal Interest on all overdue instalments of principal and interest will be at 2.50 per cent more than the normal rates of interest per annum.

6. Except in the case of loans to Government Servants, interest ion all cases unless specifically indicated otherwise should be paid every Calendar quarter on the outstanding balance.

7. Even at the stage of sanction of loan, in the sanction order, the period of repayment, rate of interest and schedule of repayment with dates shall be indicated. In case, it is a permanent loan, a specific mention of this fact should be made in the sanction order itself.

(BY ORDER OF THE GOVERNOR)

**K. SHANMUGAM**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

எனவே, அரசாணை எண்.**208** நிதித் (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்) துறை, நாள்.**08.07.2016**ல் பல்வேறுவிதமான கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான வட்டிவிகிதங்கள் **2016–2017 –** ஆம் ஆண்டிற்கு நிர்ணயித்து வெளியிட்டுள்ள அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு நிலைக்கு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''**17.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.**231/2016**, நாள்.**17.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.க.கு.ந.க.எண்.அ8/1307/2016**
**ஆணையர் அவர்களின் 11.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.444/2016 **பொருள் எண்.16**

**மத்திய கணக்கு குழுமம் – ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் – பணியாளர்கள் பங்களிப்பு மற்றும் அரசு பங்களிப்பு – 01.04.2016 முதல் 30.06.2016 வரை உள்ள நிதியாண்டிற்கான வட்டி விகிதம் 8.1 % – ஆணை வழங்கப்பட்டது – நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மாமன்றத்தின் மூலமாக – பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி**

அரசாணை எண்.**219** நிதி (PGC)த் துறை, நாள் **27.07.2016.** அரசாணையில் ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் குறித்து பணியாளர்கள் பங்களிப்பு மற்றும் அரசு பங்களிப்பு **01.04.2016** முதல் **30.06.2016** வரை உள்ள நிதியாண்டிற்கான வட்டி விகிதம் **8.1** சதவீதமாக நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டது. அரசாணையின் விவரம் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**FINANCE (PGC) DEPARTMENT**
**G.O.No.219, DATED 27.07.2016**
(Thunmugi, Aadi-12, Thiruvalluvar Aandu 2047)

**PENSION** – Contributory Pension Scheme – Employees contribution and Government contribution – Rate of interest for the period from 1st April, 2016 to 30th June, 2016 - Orders – Issued.

---

**Read**

1. G.O.Ms.No.222, Finance (Pension) Department, dated: 03.06.2008.
2. G.O.Ms.No.38, Finance (PGC) Department, dated: 11.02.2013.
3. G.O.Ms.No.155, Finance (PGC) Department, dated: 09.05.2013.
4. G.O.Ms.No.183, Finance (PGC) Department, dated: 26.06.2015.
5. G.O.Ms.No.209, Finance (Allowances) Department, dated: 15.07.2016.

******

**ORDER**:

1. In the Government Orders first to fourth read above, orders were issued fixing the rate of interest for accumulations at the credit of the subscribers to the Contributory Pension Scheme for the period up to 31-03-2016.

2. In the Government Order fifth read above, the rate of interest for General Provident Fund was fixed at the rate of **8.1%** for the period from 1st April, 2016 to 30th June, 2016.

3. The Government now direct that the rate of interest on the accumulations at the credit of the subscribers to the Contributory Pension Scheme be fixed at **8.1%** for the period from 1st April, 2016 to 30th June, 2016.

(BY ORDER OF THE GOVERNOR)

**K. SHANMUGAM**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

எனவே, ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் குறித்து பணியாளர்கள் பங்களிப்பு மற்றும் அரசு பங்களிப்பிற்கு வட்டி விகிதம் **01.04.2016** முதல் **30.06.2016** வரை உள்ள நிதியாண்டிற்கு **8.1** சதவீதமாக நிர்ணயித்து வெளியிடப்பட்டுள்ள அரசானை எண்.**219** நிதி (PGC)த் துறை, நாள் **27.07.2016**ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**17.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.**243/2016**, நாள்.**17.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>சி.தி.து. ந.க.எண்.பி1/0218/2016</u>**
**<u>ஆணையர் அவர்களின் 17.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**445/2016** **பொருள் எண்.17**

**<u>சிறப்பு திட்டங்கள் துறை – சென்னை பெருநகரம் ஜெர்மன் அரசின் நிதி உதவி திட்டமான “ பருவ நிலை மாற்றத்திற்கு தயாரான நகரம் ” பட்டியலில் பெருநகர சென்னையை தேர்வுசெய்யப்பட்டதை தொடர்ந்து புத்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள அனுமதி</u>**

சென்னை பெருநகரம் ஜெர்மன் அரசின் நிதி உதவி திட்டமான “ பருவ நிலை மாற்றத்திற்கு தயாரான நகரம் ” பட்டியலில் ஒரு முன் மாதிரி நகரமாக ஜெர்மன் பெடரல் அரசால் கடந்த மே’**2016** அன்று தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை ஜெர்மன் தொழில் நுட்ப கூட்டுறவு (GIZ) கம்பெனி மூலமாக சென்னையில் செயல்படுத்தபடவுள்ளது. சென்னை பெருநகரத்தை இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட தகவலை மாமன்றத்தீர்மான எண்.**395/2016,** நாள்.**30.07.2016** பெறப்பட்டது.

இது தொடர்பாக தெரிவிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், சென்னை பெருநகர வளர்ச்சியில் ஒருங்கிணைந்த பருவ நிலை சார்ந்த அம்சங்கள் மற்றும் முறையான திட்டமிடலின் பங்கை வழிமுறைபடுத்தி, “ பருவநிலை மாதிரி நகர வளர்ச்சியை” உருவாக்குவதின் மூலம் “புதிய நகர திட்டமிடலின் பங்கை” மேம்படுத்த மிகவும் உதவியாகயிருக்கும். இந்த “ மாதிரி நகர வளர்ச்சியின்” மூலமாக புதுமையான வழிமுறைகளை நகர திட்டமிடலில் கையாள்வதால் சென்னை பெருநகரம் “ பருவநிலை மாற்றத்திற்கு தயாரன நகரமாகும்”. மேலும் இவை நகர வளர்ச்சி மற்றும் பருவநிலை மாற்றம் சார்ந்த ஒருங்கிணைப்பு மற்றும் கையாளும் யுக்தி போன்ற பங்களிப்பினை தன்னுள் அடக்கியிருக்கும்.

எனவே, சென்னை பெருநகரம் ஜெர்மன் அரசின் நிதி உதவி திட்டமான “ பருவ நிலை மாற்றத்திற்கு தயாரான நகரம் ” பட்டியலில் சென்னையை சேர்க்க விண்ணப்பம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து பெருநகர சென்னையை ஜெர்மன் அரசு இத்திட்டத்திற்கு தேர்வுசெய்யப்பட்டதை தொடர்ந்து புத்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“**16.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.**232/2016** நாள்.**16.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“**17.8.2016** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.**245/2016,** நாள்.**17.08.2016**ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**க.து.ந.க.எண்.இ2/10139–2/2016**
**ஆணையர் அவர்களின் 12.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.446/2016 **பொருள் எண்.18**

**கல்வித் துறை – சென்னை மழலையர் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக கற்றல், கற்பித்தல், போன்ற பள்ளி சார் பணிகளில் ஏற்படும் தேவைகளை பூர்த்தி செய்து – பள்ளி தலைமையாசிரியரே ஜுன்2016 முதல் மார்ச்2017வரை 10 மாதங்களுக்கு மேற்கொள்ள அனுமதியும் – தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக பெற்று பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக வழங்குவதற்கு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 119–தொடக்க பள்ளிகளும், 92–நடுநிலைப்பள்ளிகளும், 38–உயர்நிலைப்பள்ளிகளும், 32–மேல்நிலைப்பள்ளிகளும், ஆக மொத்தம் 281 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

இதில் சென்னை தொடக்க/ நடுநிலைப்பள்ளிகளில் 1997–98ஆம் கல்வியாண்டில் 10 மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டது. அதன் பின் 1998–99ஆம் கல்வியாண்டில் 20 மழலையர் பள்ளிகள் தொடங்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டு வரை 30 பள்ளிகள் செயல்பாட்டில் இருந்து வந்தது. அப்பள்ளிகளில் ஆசிரியர்களும், ஆயாக்களும், அலுவலக உதவியாளர்களும் பணிபுரிந்து வந்தார்கள். அதன் பிறகு 2013–2014 ஆம் கல்வியாண்டில் மீண்டும் புதியதாக 10 மழலையர் பள்ளிகளும், 2014–2015ம் கல்வியாண்டில் 25 மழலையர் பள்ளிகளும், 2015–16 ஆம் கல்வி ஆண்டில் 100 மழலையர் பள்ளிகளும் தொடங்கப்பட்டு ஆக மொத்தம் 165 மழலையர் பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வந்தது.

மேலும், மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 2016–2017ம் கல்வியாண்டில் சென்னை பள்ளி மாணாக்கர்களின் எண்ணிக்கையையும் கல்வித் தரத்தையும் மேம்படுத்திட 35 மழலையர் பள்ளிகள் புதிதாக தொடங்கப்பட்டு மொத்தம் 200 பள்ளிகள் செயல்பாட்டில் உள்ளது.

2015–2016, மற்றும் 2016–2017 முற்றிலும் தற்காலிக அடிப்படையில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்கள், ஆயாக்களின் மொத்த எண்ணிக்கை

| மழலையர் பள்ளிகளின் விவரம் | 2015–2016ன் பள்ளிகளின் எண்ணிக்கை, மற்றும் தற்காலிக ஆசிரியர்கள்/ ஆயாக்களின் எண்ணிக்கை | 2016–17 பள்ளிகளின் எண்ணிக்கை, மற்றும் தற்காலிக ஆசிரியர்கள்/ ஆயாக்களின் எண்ணிக்கை | 2016–2017ம் ஆண்டு கூடுதலாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் ஆயாக்கள் |
|---|---|---|---|
| பள்ளிகளின் எண்ணிக்கை | 165 | 200 | – |
| LKG மற்றும் UKG மாணவர்களின் எண்ணிக்கை | 9380 | 10,146 | – |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | 187 | 279 | 92 பேர் (279–187) |
| ஆயாக்களின் எண்ணிக்கை | 196 | 236 | 40பேர் (236–196) |

2015–2016 ஆம் கல்வியாண்டில் L.K.G. மற்றும் U.K.G. மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 9380ஆகும். அதனால் 200ஆசிரியர்கள் மற்றும் 200 ஆயாக்களுக்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. கடந்த கல்வியாண்டில் தொடங்கப்பட்ட பள்ளிகளில், இந்த கல்வியாண்டில் LKG வகுப்பை தொடர்ந்து UKG வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளதாலும், கூடுதலாக 35 மழலையர்

பள்ளிகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளதாலும், அனைத்து மழலையர் பள்ளிகளிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகி உள்ளது. மேலும் செப்டம்பர் 30 வரை அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களின் சேர்க்கை நடைபெற உள்ளதால் இன்னும் மாணவர்கள் சேர வாய்ப்பு உள்ளது. இக்காரணங்களினால் அனைத்து பள்ளிகளுக்கும் ஆசிரியர்கள் மற்றும் ஆயாக்கள் தேவையுள்ளதால் இக்கல்வியாண்டில் 300ஆசிரியர்கள் மற்றும் 300 ஆயாக்கள் மழலையர் பள்ளிகளில் தற்காலிக பணிநியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது.

எனவே, மழலையர் பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் போன்ற பள்ளிசார் பணிகளில் ஏற்படும் தேவைகளை சந்தித்திட அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே ஜுன் 2016 முதல் மார்ச் 2017 வரை (10–மாதம்) ஆகும் செலவுகளை மேற்கொள்ள அவர்களுக்கு நேரடியாக தேவைப்படும் நிதியை அளிக்கலாம் என ஆலோசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை மழலையர் பள்ளிகளில் நடைபெறும் கற்றல் பணி, கற்பித்தல் பணிகளில் ஏற்படும் பள்ளிசார் தேவைகளை சந்தித்திட மாணவ/மாணவர்களின் நலனுக்காக பள்ளியின் தலைமையாசிரியரே ஜுன்–2016 மாதம் முதல் மார்ச்–2017 வரை (10–மாதங்களுக்கு) நேரடியாக மேற்கொள்ள அனுமதியும், இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக பெற்று பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் வழங்க அனுமதியும்,
2. இச்செலவினங்களுக்காக 300 ஆசிரியருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.8000வீதமும் (8000x300)=24,00,000, 300 ஆயாக்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.3000 வீதமும், (3000x300)=9,00,000, 10–மாதத்திற்கு (24,00,000+9,00,000=33,00,000x10)= ரூ.3,30,00000/- (ரூபாய். மூன்று கோடியே முப்பது இலட்சம் மட்டும்) வழங்க அனுமதியும்,
3. இத்தொகையை மழலையர் பிரிவு கணக்கு குறியீடு எண்.80–82–06, 230–11–02–02 கல்வி செலவினங்கள் என்ற நிதி ஒதுக்கீட்டில் பெறுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் 12.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.13/2016ன்படி நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 17.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.258/2016ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>சு.து.ந.க.எண்.பி2/0356/2013</u>**
**<u>ஆணையர் அவர்களின் 16.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.447/2016 **பொருள் எண்.19**

**<u>பொது சுகாதாரத்துறை – உச்சநீதி மன்ற உத்திரவுபடி வீடற்றோருக்கென 37 காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடைபெற்று வருகிறது – இக்காப்பகங்களை ஒரு வருட காலத்திற்கு தொடர்ந்து நடத்திட – 2016–17ம் ஆண்டிற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி</u>**

உச்சநீதி மன்ற உத்திரவின்படி உச்சநீதிமன்ற பேராணை PUCL Vs UOI WP.No.196/2001ன் படி இந்திய நகர்புறங்களில் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு வீடற்றோர் காப்பகம் ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளது. இதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியினால் கடந்த ஜுன் 2013 முதல் 28 வீடற்றோருக்கான காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 37 காப்பகங்கள் நடைபெற்று வருகின்றன.

முதன்மை செயலர்/ஆணையரின் ஆணை நாள். 24.05.2013 சு.து.ந.க.எண். பி2/0356/2013 அவர்களின் ஆணையில் காப்பகங்களை சென்னை மாநகராட்சியின் நிதியிலிருந்து துவங்கப்பட்டு அமைப்பு சாரா நிறுவனம் மூலமாக பராமரிக்க ஆணை பெறப்பட்டு தற்போது 37 காப்பகங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை கொண்டு சென்னை மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சி கட்டடங்களில் நடத்தப்படும் காப்பங்களுக்கு ஒரு காப்பகத்திற்கு ஓராண்டிற்கு ரூ.10,10,000ம், வாடகை கட்டடங்களில் நடத்தப்படும் காப்பங்களுக்கு ஓராண்டிற்கு ஒரு காப்பகம் நடத்துவதற்கு ரூ.13,10,000ம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்க ஆணை பெறப்பட்டுள்ளது.

ஆணையரின் செயல்முறை ஆணைபடி 01.06.2013 முதல் மூன்று வருட காலத்திற்கு காப்பகங்களை நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது. அதற்கான மன்றத்தீர்மானமும் (தீர்மான எண். 417/2012 நாள்.26.09.2012) பெறப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மானம் எண் 213/2015 நாள் 03.08.2015மன்ற தீர்மானத்தில் ஒரு வருடத்திற்கு (01.06.2015 முதல் 31.05.2016 வரை) கீழ்கண்டுள்ளவாறு 1 முதல் 15 மண்டலங்களில், 28 காப்பகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்போது ஒரு வருடத்திற்கு (01.06.2016 முதல் 31.05.2017வரை) கீழ்க்கண்டுள்ளவாறு 1 முதல் 15 மண்டலங்களில், 37 காப்பகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | மண்டலம் | சென்னை மாநகராட்சி கட்டடம்/ வாடகை கட்டடம் | காப்பகங்களின் எண்ணிக்கை | ஒரு காப்பகத்திற்கு ஒதுக்கீடு ரூ. | மொத்த தொகை ரூ. | காலாண்டிற்கு விடுவிக்கப்பட வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | I | வாடகை கட்டடம் | 2 | 13,10,000 | 26,20,000 | 6,55,000 |
| 2 | II | மாநகராட்சி கட்டடம் | 1 | 10,10,000 | 10,10,000 | 2,52,500 |
| 3 | III | மாநகராட்சி கட்டடம் | 1 | 10,10,000 | 10,10,000 | 2,52,500 |
| 4 | IV | மாநகராட்சி கட்டடம் | 4 | 10,10,000 | 40,40,000 | 10,10,000 |
| | | வாடகை கட்டடம் | 4 | 13,10,000 | 52,40,000 | 13,10,000 |
| 5 | V | மாநகராட்சி கட்டடம் | 3 | 10,10,000 | 30,30,000 | 7,57,500 |
| 6 | VI | மாநகராட்சி கட்டடம் | 2 | 10,10,000 | 20,20,000 | 5,05,000 |
| 7 | VII | வாடகை கட்டடம் | 4 | 13,10,000 | 52,40,000 | 13,10,000 |
| 8 | VIII | மாநகராட்சி கட்டடம் | 2 | 10,10,000 | 20,20,000 | 5,05,000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | IX | மாநகராட்சி கட்டடம் | 5 | 10,10,000 | 50,50,000 | 12,62,500 |
| 10 | X | வாடகை கட்டடம் | 2 | 13,10,000 | 26,20,000 | 6,55,000 |
| 11 | XI | வாடகை கட்டடம் | 2 | 13,10,000 | 26,20,000 | 6,55,000 |
| 12 | XII | வாடகை கட்டடம் | 1 | 13,10,000 | 13,10,000 | 3,27,500 |
| 13 | XIII | மாநகராட்சி கட்டடம் | 2 | 10,10,000 | 20,20,000 | 5,05,000 |
| 14 | XIV | – | – | – | – | – |
| 15 | XV | மாநகராட்சி கட்டடம் | 1 | 10,10,000 | 10,10,000 | 2,52,500 |
| | | வாடகை கட்டடம் | 1 | 13,10,000 | 13,10,000 | 3,27,500 |
| **மொத்தம்** | | | **37** | | **4,21,70,000** | **1,05,42,500** |

1. 1 முதல் 15 மண்டலங்களில் செயல்பட்டு வரும் 37 காப்பங்களை (01.06.2016 முதல் 31.05.2019 வரை) ஒரு வருட காலத்திற்கு தொடர்ந்து நடத்திட அனுமதியும்,
2. இதற்கான ஒரு வருடத்திற்கான செலவினம் ரூ. 4,21,70,000/–ஐ(ரூபாய் நாலுகோடியே இருபத்தி ஒரு லட்சத்து எழுபது ஆயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யவும், மேலும் இச்செலவினம் மாநகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கவும்,
3. இச்செலவினங்களை தலைமையகத்திலேயே மேற்கொள்ளவும்,
4. இச்செலவினம் பிரிவு குறியீடு 30–35–01 மற்றும் கணக்கு குறியீடு 230–20–21–00 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்.

எனவே, மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(சுகாதாரம்) வின் கூட்டம் 11.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.28/2016ன்படி நிலைக்குழு (சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 17.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.247/2016ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.9.ந.க.எண்.இ1/10270/1/2016**
**ஆணையர் அவர்களின் 01.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.448/2016 **பொருள் எண்.20**

**மண்டலம்–9 – மெரினா கடற்கரைப் பகுதி சுத்தம் செய்தல் ராம்கி என்விரோ எஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் சுத்தம் செய்யப்பட்டு வந்தது – தற்போது மெரினா கடற்கரைப் பகுதி , பகுதி –27A என தனியாக பிரித்து துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது – 29.12.2014 அன்று நிறைவேற்றப்பட்ட மன்றத் தீர்மான எண்.632/2014ல் மாறுதல் செய்ய அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மன்றத் தீர்மானம் எண்.632/2014 நாள்.29.12.2014–ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–9ல் அமைந்துள்ள மெரினா கடற்கரைப் பகுதியை, பகுதி–27A எனப் பிரித்து, இப்பகுதியின் துப்புரவுப் பணி ராம்கி என்விரோ எஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பிரிக்கப்பட்டு தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி மெரினா கடற்கரைப் பகுதியில் குப்பை அகற்றி சுத்தம் செய்யும் பணி ராம்கி என்விரோ எஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பிரிக்கப்பட்டு தனியாக ஒப்பம் கோரி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்தகாலம் 31.07.2016 அன்று முடிவடைகிறது ராம்கி என்விரோ எஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மண்டலம்–9க்கான திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி மெரினா கடற்கரைப் பகுதியிலும் ராம்கி என்விரோ எஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனமே குப்பை அகற்றி சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ள வேண்டும் என்பதால் மீண்டும் 01.08.2016 முதல் மெரினா கடற்கரைப் பகுதியில் குப்பை அகற்றி சுத்தம் செய்யும் பணியை ராம்கி என்விரோ எஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்படைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே, மெரினா கடற்கரைப் பகுதியில் குப்பை அகற்றி சுத்தம் செய்யும் திடக்கழிவு மேலாண்மைப் பணி 01.08.2016 முதல் ராம்கி என்விரோ எஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனமே குப்பை அகற்றி சுத்தம் செய்யும் பணியை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதற்கு நிலைக்குழு(பொதுசுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு(சுகாதாரம்) வின் கூட்டம் 11.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.27/2016ன்படி நிலைக்குழு (சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 17.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.246/2016ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/3770/2015</u>**
**<u>ஆணையர் அவர்களின் 16.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.449/2016 **பொருள் எண்.21**

**<u>நிலம் மற்றும் உடைமைத் துறை – மண்டலம்–12, வார்டு–162–ல் தில்லை கங்கா நகர் 6–வது மெயின் ரோட்டில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி காலி இடம் 2014–15ம் ஆண்டு ஆலந்தூர் தொகுதி சட் டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் புதியதாக 600 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டிடம் எம்டி 573 நங்கநல்லூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம் அமைக்க இடம் வழங்க அனுமதி.</u>**

தலைவர், நங்கநல்லூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம் அவர்களின் நாள்.30.10.2015 கடிதத்தில், எம்டி 573 நங்கநல்லூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம் தற்போது தனியார் கட்டிடத்தில் இயங்கி வருவதாகவும், கட்டிடத்தில் போதிய வசதி இல்லாத காரணத்தினால் மண்டலம்12 வார்டு எண்–162–ல் தில்லை கங்கா நகர் 6வது மெயின் ரோட்டில் உள்ள சென்னை மாநகராட்சி காலி இடத்தில் 2014–15ம் ஆண்டு ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் புதியதாக 600 சதுர அடிப் பரப்பளவில் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடத்தினை குத்தகை அடிப்படையில் வழங்க கோரி கடிதம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

21.12.2015–ஆம் நாளிட்ட மாவட்ட வருவாய் அலுவலர்/உதவி ஆணையர், மண்டலம்–12 அவர்களின் கடித ந.க.எண்.ம.அ.12/2129/2012/இ1. மேற்படி கட்டிடத்திற்கான வார்டு குழு தீர்மானம் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். இருப்பினும் இக்கடிதத்துடன் வார்டு குழு தீர்மானம் இணைக்கப்படவில்லை.

இவ்வலுவலக கடிதந.க.எண்.எல்இ6/3770/2015 நாள்.29.01.2016. மூலம்மேற்படி கட்டிடத்தினை எம்டி 573 நங்கநல்லூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திற்கு மாத வாடகை அடிப்படையிலேயே வழங்க இயலும் என்பதாலும் கட்டிடத்தை கூட்டுறவு சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு வார்டு குழு தீர்மானம் மற்றும் வாடகை நிர்ணயம் செய்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

12வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.267, நாள்.26.11.2015–ன்படி 12–வது மண்டல அலுவலர் அவர்களின் கடிதத்தில் உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பில் மேற்படி கட்டிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.20/– என நிர்ணயம் செய்ய குறிப்பு பெறப்பட்டுள்ளதால், தீர்மானம் எண்.267, நாள்.26.11.2015–ன்படி வார்டுக் குழு தீர்மானம் நகல் இணைத்தும், மன்றத்தில் பொருள் சமர்ப்பிக்குமாறு 12.02.2016–ஆம் நாளிட்ட மாவட்ட வருவாய் அலுவலர்/உதவி ஆணையர், மண்டலம்–12 அவர்களின் கடித ந.க.எண்.ம.அ.12/2129/2015. கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

16.02.2016 –ஆம் நாளிட்ட துணை ஆணையர்/வமநி அவர்களின் மேற்குறிப்பின்படி 600 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டிடத்தை புலத்தணிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதன் அடிப்படையில் தனிவட்டாட்சியர்/நிமஉது அவர்களின் புலத்தணிக்கை குறிப்பு நாள். 08.03.2016–ன்படி தனிவட்டாட்சியர்/நிமஉது(தெற்கு) அவர்களால் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. புலத்தணிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புலத்தணிக்கையின் போது நிலம் மற்றும் உடைமைத் துறை சார்–ஆய்வாளர் மற்றும் உதவி பொறியாளர்,வார்டு–162 ஆகியோர் உடன் இருந்தனர். மேற்படி கட்டிடம் நகர நிலவரித் திட்டம், வருவாய் பின் தொடர் பணிகள், ஆலந்தூர் அலுவலக டவுன் சர்வே ரிஜிஸ்டர் ஆவணத்தின்படி சர்வே எண்.282, மொத்த விஸ்தீரணம் 00300.0 ச.மீ அளவில் ஷரா கலத்தில் தெரு என்றும், உள்வட்ட சாலை போக மிகுதி உள்ள சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆலந்தூர் தனிவட்டாட்சியரால் வழங்கப்பட்ட ஆவண நகல் இணைக்கப்பட்டுள்ளது. கட்டிடத்தின் அளவு நான்கு பக்கமும் சேர்த்து 450.17 ச.அடி என அளவீடு செய்யப்பட்டு புல வரைப்படம் இணைக்கப்பட்டுள்ளதாகவும், கட்டிடத்தின் முன்புறம் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது கட்டிடத்தின் பின்புறம் நெடுஞ்சாலை துறையினரால் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

கட்டிடம் மற்றும் வெளிப்புறம் அமைந்துள்ள காலியிடம் **<u>மொத்தம் 600 ச.அடி</u>**. பரப்பளவில் அமையப்பெற்றுள்ளது. கட்டிடத்தின் உள்புறம் தெற்கு மூலையில் சிறிய அளவில் கழிவறை அமைக்கப்பெற்றுள்ளது. கட்டிடத்தின் கிழக்கில் தில்லை கங்கா நகர் 28–வது தெருவும் மேற்கில் பிளாட் எண்.75 கட்டிடமும் வடக்கில் தில்லை கங்கா நகர் 6–வது பிரதான சாலையும் தெற்கில் உள்வட்ட சாலையும் அமைந்துள்ளது. இக்கட்டிடத்தை எம்டி 573 நங்கநல்லூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம் அமைக்க வாடகைக்கு கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நங்கநல்லூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம் அரசு சார்ந்த ஆவின் நிறுவனத்தை சார்ந்தது என தெரியவந்துள்ளதாகவும், வருவாய் ஆவணங்களின்படி தெரு என குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது குறித்து 12வது மண்டல அலுவலர் அவர்களை கருத்துரு கேட்டு கடிதம் அனுப்பலாம் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடித ந.க.எண்.எல்இ6/3770/2015. நாள்.23.03.2016. இத்துறையின் கடிதங்கள் மூலம் மேற்படி வருவாய் ஆவணங்களின்படி **“தெரு என”** குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது குறித்து 12வது மண்டல அலுவலர் அவர்களிடம் கருத்துரு மற்றும் விரிவான அறிக்கை கோரப்பட்டது.

08.06.2016–ஆம் நாளிட்ட மாவட்ட வருவாய் அலுவலர்/உதவி ஆணையர், மண்டலம்–12 அவர்களின் கடித ந.க.எண்.ம.அ.12/2129/2012/இ1. மேற்படி பல்நோக்கு மையக் கட்டிடமானது நகர நிலவரி திட்டம், வருவாய் பின் தொடர் பணிகள், ஆலந்தூர் அலுவலக, டவுன் சர்வே ரிஜிஸ்டர் ஆவணத்தின்படி சர்வே எண் 282, மொத்த விஸ்தீரணம் 00300.0 ச.மீ. அளவில் உள் வட்ட சாலை போக மிகுதியாக இருந்த காலி இடம் சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது என டவுன் சர்வே லேண்ட் ரெக்கார்ட் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் கட்டிடம் கட்டும் முன் அப்பகுதி தெருவாக இருந்தது. மேற்படி தெரு முழுமையாக உள்வட்ட சாலை அமைக்க எடுக்கப்பட்டுவிட்டது. உள்வட்ட சாலை அமைத்தது போக துண்டாக இருந்த 600 சதுர அடி இடத்தில் சமூக விரோத சக்திகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, பொது மக்களுக்கு மிகவும் இடைஞ்சலாகவும், சமூக அச்சுறுத்தலாக இருந்தது. அப்பகுதியில் உள்ள பொது நல சங்கங்கள், பொது மக்கள், அப்பகுதியின் மாநகர மன்ற உறுப்பினர் ஆகியோர் அப்பகுதியினை மேற்படி சமூக விரோத சக்திகளிடமிருந்து மீட்டெடுத்து அப்பகுதியில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் கட்டிடம் அமைக்க கோரிக்கை விடுத்தனர். மேற்படி இடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பாக பொது மக்கள் பயன்படும் வகையில் பல்நோக்கு மைய கட்டிடம் அமைக்க ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களுக்கு பரிந்துரை வழங்கினார் என்றும், மேற்படி, குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி, உள்வட்ட சாலை அமைத்தது போக மீதம் உள்ள 600 சதுர அடி நில வகைப்பாட்டின்படி சாலை அமைக்க இயலாத நிலையில் இப்பணிக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையின் பேரில் இணை ஆணையர், தெற்கு வட்டார அலுவலகம் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன் அடிப்படையில் இந்த பல்நோக்கு மைய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ள விளக்கத்தினை ஏற்று மேல்நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வலுவலக கடிதம் எல்இ6/3770/2015, நாள். 08.07.2016. இத்துறையின் கடிதம் மூலம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையின்பேரில் அனுமதி பெறப்பட்டதாக தெரிவிக்கும் கடிதம் மற்றும் அதன் தொடர்பான விவரங்கள் கோரப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர்/உதவி ஆணையர், மண்டலம்–12 அவர்களின் கடித.ந.க.எண்.ம.அ.12/2129/2012/இ1, நாள். 26.07.2016. மாவட்ட வருவாய் அலுவலர்/உதவி ஆணையர், பல்நோக்கு மையக் கட்டிடத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து கூடுதல் இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் வழங்கிய நிதி இசைவு கடிதத்தின் நகலினை வழங்கியுள்ளார்.

எனவே, மேற்படி பல்நோக்கு கட்டிடம் வருவாய் ஆவணங்களின்படி **"தெரு"** என குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு வார்டுக் குழு தீர்மானம் பெறப்பட்டுள்ளதாலும், தற்போது பயன்பாடற்று உபயோகம் இல்லாமல் இருந்த மண்டலம்–12, வார்டு–162–ல் தில்லை கங்கா நகர் 6–வது மெயின் ரோட்டில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் 2014–15–ஆம் ஆண்டு ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 600 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடத்திற்கு கீழ்க்கண்ட இனங்களின் அடிப்படையில் நங்கநல்லூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மேற்படி நிறுவனத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.20/– என நிர்ணயம் செய்ய குறிப்பு பெறப்பட்டுள்ளதின்படி (600X20)=ரூ12,000/– மாத வாடகை மற்றும் மாதம் ஒன்றுக்கு 15% சேவை வரி ரூ.1,800/–ம், ஆக மொத்தம் 12000 + 1800=ரூ.13,800/–ம் 12 மாத முன்பணமாக ரூ.1,44,000/– யையும் செலுத்த வேண்டும் என்றும்,
2. கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவிருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் நங்கநல்லூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.8.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.244/2016, நாள்.17.08.2016ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/20062/2016**
**ஆணையர் அவர்களின் 09.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.450/2016 **பொருள் எண்.22**

**கூடுதல் மாநகர மருத்துவ அலுலவர் பதவிக்கான தெரிவு பட்டியல்**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையில் கூடுதல் மாநகர மருத்து அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 01 | பதவியின் பெயர் | கூடுதல் மாநகர மருத்துவ அலுவலர், வகுப்பு–1B |
| 02 | மைய நாள் | 01.03.2016 |
| 03 | ஊதிய விகிதம் | ரூ.15600–39100+6600தர ஊதியம் |
| 04 | ஊட்டப்பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | **துணை மாநகர மருத்துவ அலுவலர்:**<br>1. Must have put in not less than five years of service in one or more categories as Medical Officer/Assistant Surgeon or Anaesthetist in the Greater Chennai Corporation and<br>2. A pass in Account Test for Executive Officers and Medical Code Test conducted by the TNPSC. |
| 05 | காலிப்பணியிட விவரம் | **1.** அனுமதிக்கப்பட்ட பணியிடம் - 02<br>**மொத்தம்** - 02<br>(அ) தற்காலிக பணியிடம் - 00<br>(ஆ) நிரந்தர பணியிடம் - 02<br>2. மைய நாளில் பணியில் உள்ளவர் - 01<br>மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் - 01<br>01.03.2016 முதல் 28.02.2017 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் - 00<br>3. பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் - 00<br>4. எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிட ஒதுக்கீடு சதவீதம் ஏதுமில்லை. - 00<br>5. மொத்தம் காலிப்பணியிடம் - 01 |
| 06 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? இல்லையெனில் காரணம். | கடைசியாக 01.03.2015ஐ மைய நாளாக கொண்டு கூடுதல் மாநகர மருத்துவ அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, அத்தெரிவுப்பட்டியலில் தகுதி வாய்ந்த நபர்கள் எவரும் இல்லை என்பதால் இன்மை பட்டியல் வெளியிடப்பட்டது. |

7. பணிமூப்பின்படி துணை மாநகர மருத்துவ அலுவலர்களின் விவரம்:

| **வ. எண்.** | **பெயர் திருவாளர்கள்** | **தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள்** | **தெரிவுப் பட்யலில் சேர்க்க லாமா ?** | **மந்தன அறிக்கை விவரம்** | **தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் தவிர்ப்பதற்கான காரணம் (ஆட்சேபனை ஏதேனும் இருப்பின்)** |
|---|---|---|---|---|---|
| **1.** | டாக்டர். பி.கே.நிர்மலா | **14.02.2011** | இல்லை | இல்லை | தனியர் தற்காலிகமாக கூடுதல் மாநகர மருத்துவ அலுவலர் பதவிக்கு விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2.** | டாக்டர். எம்.பி.அன்னபூர்ணா | **12.09.2012** | ஆம் | **09.04.08**முதல் **30.09.10**வரை (சிறந்த பணி) **15.11.10**முதல் **06.06.11**வரை (மிக நன்று) **27.07.11**முதல் **09.04.12**வரை (மிக நன்று) **20.03.12**முதல் **01.07.13**வரை (நன்று) **02.07.13** முதல் **30.11.14** வரை (நன்று) **01.12.14** முதல் **04.05.15** வரை (மிக நன்று) **05.05.15** முதல் இதுநாள் வரை (மிக நன்று) | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி பதவி உயர்வுக்கு முழு தகுதிகள் பெற்றுள்ளார். தனியரின் பெயரை **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க தகுதியுடையவராகிறார்.** |

அரசாணை எண்.**181**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.**3**) துறை, நாள்:**06.10.2009**ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு–**1B**ன் கீழ் வரும் பதவிகளை பணி நியமனம் செய்து கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அதிகார பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அ) கூடுதல் மாநகர மருத்துவ அலுவலர் பதவிக்கு **2016–17** ஆம் ஆண்டிற்கு **01.03.2016**ஐ மைய நாளாக கொண்டு, கீழ்கண்ட **1** துணை மாநகர மருத்துவ அலுவலர் பெயரைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

| **வ. எண்.** | **பெயர்** | **துணை மாநகர மருத்துவ அலுவலர் பதவியில் சேர்ந்த நாள்** |
|---|---|---|
| **1** | டாக்டர்.எம்.பி.அன்னபூர்ணா | **12.09.2012** |

ஆ) மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ளவருக்கு ரூ.**15600–39100+6600**தர ஊதியம் என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தில் பதவி உயர்வு வழங்கி பணியமர்த்தவும்,

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/25889/2016**
**ஆணையர் அவர்களின் 10.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.451/2016 **பொருள் எண்.23**

**பணிதுறப்பு**

டாக்டர்.A.J.தமிழ்மணி, மருத்துவ அலுவலர், செம்மஞ்சேரி UPHC அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 22.09.2010 முதல் பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் தொற்றுநோய் மருத்துவமனையில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்தார். தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த காலம் 5 வருடம் 6 மாதங்கள் ஆகும்.

10.03.2016 நாளிட்ட கடிதத்தில், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக 07.03.2016 அன்று ஒரு மாத அறிவிப்பு கொடுத்து பணிதுறப்பு கடிதம் அளித்து 06.04.2016 பிற்பகல் முதல் தன்னை பெருநகர சென்னை மாநகராட்சி பணிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டு, தன்னிச்சையாக விலகிக்கொண்டார்.

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 22.09.2010 முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது.

டாக்டர்.A.J.தமிழ்மணி, மருத்துவ அலுவலர், செம்மஞ்சேரி UPHC அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று பெருநகர விழிப்புத்துறையின் 08.07.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இயக்குநர், விழிப்பு மற்றும் உழல்தடுப்புப் பிரிவு, அவர்களின் 28.07.2016 நாளிட்ட கடிதத்தில், விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் பணிபுரிந்த துறை மற்றும் மண்டலங்களில் குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், மண்டல அலுவலர்–15 அவர்களால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த துறை / மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணங்கள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் 02.08.2016 நாளிட்ட கடிதத்தில், தனியர் மருத்துவ அலுவலராக சுகாதாரத்துறையில் பணிபுரிந்த காலங்களில் 2010–11 ஆம் ஆண்டு முதல் 2013–14 ஆம் ஆண்டு வரையுள்ள தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி, நிலுவை ஏதுமில்லையெனவும், மேலும் 2014–15 ஆம் ஆண்டு முதல் 2016–17 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் தனியரை சார்ந்தது என பின்னர் தெரியவரும்பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால், தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டல அலுவலர்–15 அவர்களின் பரிந்துரையின்படியும் மற்றும் தனியரின் பணிப்பதிவேட்டினை ஆராய்ந்ததின் அடிப்படையிலும், டாக்டர்.A.J.தமிழ்மணி, மருத்துவ அலுவலர், செம்மஞ்சேரி UPHC அவர்கள் மீது 2014–15 முதல் 2016–17 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதி தணிக்கையின் அறிக்கை வெளியிடப்படாத நிலையில், நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி, அத்தொகைகளை தனியருக்கு வழங்கப்படும் பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தனியரை 06.04.2016 அன்று பிற்பகல் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலிருந்து பணிவிலகலில் சென்றுவிட்டவராக அறிவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/25631/2016**
**ஆணையர் அவர்களின் 09.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.452/2016 **பொருள் எண்.24**

**திரு.டி.சண்முகம், உதவி வருவாய் அலுவலர் பழைய மண்டலம்–2 அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு தற்காலிக பணிநீக்க காலம் வரன்முறைப்படுத்தப்பட்டு 30.11.2008 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்ததமைக்கு பின்னேற்பு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, பழைய மண்டலம்–2 வார்டு எண். 70ல் பிரைட் ஹோட்டல் வளாக சொத்துக்கு சொத்துவரி குறைவாக விதிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட காரணமாக இருந்ததற்காக, மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறை அளித்த அறிக்கையின் அடிப்படையில், திரு.ட்டி.சண்முகம், உதவி வருவாய் அலுவலர், பழைய மண்டலம்–2 புதிய மண்டலம்–5 அவர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுபாடு மற்றும் மேல் முறையீடு) விதிகள் 1970 பிரிவு எண்.10(பி)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு, 30.11.2008 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்படாமல் 30.11.2008 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி நிறுத்திவைக்கப்பட்டார்.

05.04.2016 நாளிட்ட ஆணையின்படி, தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு, இறுதியாணை பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 30.11.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் அனுமதிக்கப்பட்டார். மேலும், தனியர் தற்காலிக பணிநீக்கத்திலிருந்த 29.11.2008 மற்றும் 30.11.2008 ஆகிய தற்காலிக பணிநீக்க நாட்களை, அடிப்படை விதி 54–B(10)ன்படி பணிக்காலமாக வரன்முறைப்படுத்தி 26.05.2016 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

T.சண்முகம், உதவி வருவாய் அலுவலர், பழைய மண்டலம்–2 புதிய மண்டலம்–5 அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் 25.03.1975 முதல் கீழ்நிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்தார். இவருடைய பிறந்த தேதி 08.11.1950, வயது முதிர்வு ஓய்வு நாள்: 30.11.2008.

தனியருக்கு உதவி வருவாய் அலுவலர் பதவியில் 07.09.2006 முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் கடன் ஏதும் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் 22.07.2016 நாளிட்ட குறிப்பில், தனியர் உரிமம் ஆய்வாளர், வரி மதிப்பீட்டாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலராக துறைகள் / மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 1996–97 முதல் 2008–09 வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி, இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மொத்தம் ரூ.55,42,840/– உள்ளடக்கிய 9 தணிக்கைத்தடை பத்திகள் கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது எனவும், மேற்கண்ட கூட்டுப்பொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.13,65,610/– உள்ளடக்கிய 9 தணிக்கைத்தடை பத்திகள் தனிப்பொறுப்பில் நிலுவை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின், தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன் / ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20/– முத்திரை தாளில் தனியர் சம்மத கடிதம் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால், தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே, வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் பரிந்துரையின்படியும் மற்றும் தனியரின் பணிப்பதிவேட்டினை ஆராய்ந்ததின் அடிப்படையிலும், T.சண்முகம், உதவி வருவாய் அலுவலர், பழைய மண்டலம்–2 புதிய மண்டலம்–5 அவர்கள் **26.05.2016** நாளிட்ட ஆணையின் வாயிலாக **30.11.2008** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு விடுவிக்கப்பட்ட நிகழ்விற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறவும், **22.07.2016** நாளிட்ட நிதி ஆலோசகர் அவர்களின் குறிப்பின் அடிப்படையில், நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கியும் மற்றும் தனியர் மீது தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ள ரூ.**13,65,610/–**னை செலுத்துவதற்குட்பட்டும், அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், தனியர் பணிபுரிந்த துறை / மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணங்கள் நிலுவை குறித்த சான்றுகள் பெறப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியர் **30.11.2008** பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் சென்றமையினை அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 27880 / 2016</u>**
**<u>ஆணையர் அவர்களின் 12.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.453/2016 **பொருள் எண்.25**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வா) எண்.164, தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (நிர்வாகம்.1)த்துறை, நாள்: 21.07.2016ன்படி, திரு.பா.பாலசுப்பிரமணியன், உதவி இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர் (அயற்பணி), சேலம் மாநகராட்சிஅவர்கள், துணை இயக்குநராக தற்காலிக பதவி உயர்வு பெற்று, பெருநகர சென்னை மாநகராட்சியில் துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலராக அயற்பணியில் 08.08.2016 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவல் மற்றும் பதிவிற்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/27847/2016</u>**
**<u>ஆணையர் அவர்களின் 12.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.454/2016 **பொருள் எண்.26**

**<u>பணியமைப்பு</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, ஆர்.ஒ.சி.எண்.1977/2016/சி1, நாள்: 01.08.2016ன்படி, திரு.எஸ்.ராமமூர்த்தி, நகராட்சி ஆணையர், நாகர்கோவில், அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்–9ல் மண்டல அலுவலராக அயற்பணியில் **08.08.2016** முற்பகல் முதல் பணியேற்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவல் மற்றும் பதிவிற்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/24602/2016**
**ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.455/2016 **பொருள் எண்.27**

**கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது:–

<table>
<tr><td>01</td><td>பதவியின் பெயர்</td><td colspan="3">கூடுதல் மாநகர சுகாதார அலுவலர், வகுப்பு–1B</td></tr>
<tr><td>02</td><td>மைய நாள்</td><td colspan="3">01.04.2016</td></tr>
<tr><td>03</td><td>ஊதிய விகிதம்</td><td colspan="3">ரூ.15600–39100+6600தர ஊதியம்</td></tr>
<tr><td>04</td><td>ஊட்டப்பதவியின் பெயர் மற்றும் தகுதிகள்</td><td colspan="3">மண்டல சுகாதார அலுவலர்:<br>1. MBBS Degree with Diploma in Public Health.<br>2. A pass in Account Test for Executive Officer.<br>3. Must have served as Zonal Health Officer/Superintendent Communicable Disease Hospital at least for a period of 2 years.</td></tr>
<tr><td rowspan="9">05</td><td rowspan="9">காலிப்பணியிட விவரம்</td><td>1. அனுமதிக்கப்பட்ட பணியிடம்</td><td>-</td><td>04</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>-</td><td>04</td></tr>
<tr><td>(அ) தற்காலிக பணியிடம்</td><td>-</td><td>00</td></tr>
<tr><td>(ஆ) நிரந்தர பணியிடம்</td><td>-</td><td>04</td></tr>
<tr><td>2. மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் 01.04.2016 முதல் 31.03.2017 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம்</td><td>-</td><td>01</td></tr>
<tr><td>3. பதவி உயர்வு வழங்குவதால் பட்டியலாண்டில் ஏற்பட்ட / ஏற்படவுள்ள காலிப்பணியிடம்</td><td>-</td><td>00</td></tr>
<tr><td>4. எதிர்பாராமல் ஏற்படவுள்ள காலிப்பணியிடம்</td><td>-</td><td>00</td></tr>
<tr><td>5. மொத்தம் காலிப்பணியிடம்</td><td>-</td><td>01</td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>06</td><td>கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? இல்லையெனில் காரணம்.</td><td colspan="3">கடைசியாக 01.04.2015ஐ மைய நாளாக கொண்டு கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு அத்தெரிவுப்பட்டியலில் மூப்புநிலை அடிப்படையில் இடம்பெற்ற அலுவலருக்கு கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது.</td></tr>
</table>

**01.08.2016** நாளிட்ட மாநகர நல அலுவலர் (பொ) அவர்களின் குறிப்பில், கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் காலிப்பணியிடத்தை மண்டல சுகாதார அலுவலர் பதவியில் மூப்பு நிலையில் உள்ளவருக்கு பதவி உயர்வு வழங்கி நிரப்பிட, அதற்கான பணிமூப்பு நிலை விவரம் பின்வருமாறு:

| Sl. No. | Name | Name of the Post | Date of Joining | Scale of Pay | Grade Pay |
|---|---|---|---|---|---|
| 1. | Dr.S.Mahalakshmi | ZHO | 30.05.2008 | 15600-39100 | 5700 |
| 2. | Dr.Lakshmi Devi | ZHO | 20.05.2008 | 15600-39100 | 5700 |
| 3. | Dr.Suganya Devi | ZHO | 22.05.2008 | 15600-39100 | 5700 |
| 4. | Dr.S.Malliga | ZHO | 22.05.2008 | 15600-39100 | 5700 |
| 5. | Dr.M.Raja | ZHO | 08.02.2010 | 15600-39100 | 5700 |
| 6. | Dr.Priyadarshini | ZHO | 28.08.2014 | 15600-39100 | 5700 |

01.08.2016 நாளிட்ட மாநகர நல அலுவலர் (பொ) அவர்களின் கடிதத்தில், டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, 15.12.1997 அன்று மருத்துவ அலுலராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றும், இவரது மாவட்ட வேலை வாய்ப்பு பதிவு எண்.91F 05774 SF 16.08.1991 எனவும், தனியர் மன்றத் தீர்மான எண்.58/2008 ன்படி, தற்காலிக உதவி சுகாதார அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டு, உதவி சுகாதார அலுவலராக 30.05.2008 முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், அரசாணை எண்.(ப) எண்.195 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.) துறை நாள்.20.05.2009 ன்படி, டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, அவர்களுக்கு உதவி சுகாதார அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டு அப்பணியில் சேர்ந்த நாள் முதல் அரசு உறுதியாக்கம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது 01.04.2016ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் மேற்குறிப்பிட்டுள்ள மண்டல சுகாதார அலுவலர் பதவியில் மூப்புநிலை வரிசை எண்.1ல் உள்ள டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, அவர்களுக்கு, கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் பதவி உயர்வு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

7. பணிமூப்பின்படி, டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, மண்டல சுகாதார அலுவலர் அவர்களின் விவரம்:–

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் | தெரிவுப் பட்டியலில் சேர்க்க லாமா ? | மந்தன அறிக்கை விவரம் | தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் தவிர்ப்பதற்கான காரணம் (ஆட்சேபனை ஏதேனும் இருப்பின்) |
|---|---|---|---|---|---|
| 1 | டாக்டர். எஸ்.மகாலட்சுமி | 30.05.2008 | ஆம் | 21.07.07 முதல் 24.09.08 வரை (சிறந்த பணி)<br>25.09.08 முதல் 30.06.09 வரை (சிறந்த பணி)<br>01.07.09 முதல் 30.06.11 வரை மேற்படிப்பு பயில சென்றதால் மந்தண அறிக்கை சமர்ப்பிக்க வில்லை<br>27.07.11 முதல் 09.04.12 வரை (சிறந்த பணி)<br>24.05.12 முதல் 30.09.12 வரை (சிறந்த பணி)<br>15.10.12 முதல் 02.07.13 வரை (சிறந்த பணி)<br>03.07.13 முதல் 30.04.15 வரை (சிறந்த பணி)<br>01.05.15 முதல் 11.09.15 வரை (மிக நன்று)<br>15.09.15 முதல் இதுநாள்வரை (மிக நன்று) | இவர் வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின்படி பதவி உயர்வுக்கு முழு தகுதிகள் பெற்றுள்ளார். தனியரின் பெயரை **இத்தெரிவுப் பட்டியலில் சேர்க்க தகுதியுடைய வராகிறார்.** |

அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:06.10.2009ன்படி சென்னை மாநகராட்சியில் வகுப்பு–1Bன் கீழ் வரும் பதவிகளை பணி நியமனம் செய்துக் கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அதிகார பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே,

அ) 01.04.2016ஐ மைய நாளாக கொண்டு கீழ்கண்ட ஒரு மண்டல சுகாதார அலுவலரின் பெயரைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

| **வ. எண்.** | **பெயர்** | **மண்டல சுகாதார அலுவலர் பதவியில் சேர்ந்த நாள்** |
|---|---|---|
| 1 | டாக்டர்.எஸ்.மகாலட்சுமி | 30.05.2008 பிற்பகல் |

ஆ) மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ளவருக்கு ரூ.15600–39100+6600தர ஊதியம் என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தில் பதவி உயர்வு வழங்கி பணியமர்த்தவும்,

மேற்கண்ட இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்7/4756/2013**
**ஆணையர் அவர்களின் 17.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.456/2016 **பொருள் எண்.28**

**இயந்திர பொறியியல் துறை பணிபுரியும் பணியாளர்களுக்கான (Bye-laws) துணை விதிகளில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி**

26.08.2010 நாளிட்ட அரசாணையில் தொழில் நுட்ப பணியாளர்களின் (I.T.I. சான்றிதழ் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில்) பதவி மற்றும் ஊதிய விகிதங்கள் மற்றும் பெயர்கள் மாற்றியமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், அரசாணையில் செயல் திறனற்றவர் (Unskilled) களை பாதுகாக்க வேண்டும் என்றும், அப்பதவியில் பணியாற்றுபவர்களின் காலி பணியிடம் ஏற்படும் போதெல்லாம் அவற்றை நிரப்பாமல் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்றும், வருங்காலத்தில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் செயல் திறன் மிக்க உதவியாளர் நிலை–II (Skilled Assistant Grade-II) S.S.L.C. Passed with I.T.I சான்றிதழ் பெற்றவர்களை Entry level post-ல் நியமித்தல் வேண்டும் என்றும், அதனடிப்படையில் அனைத்து துறை / உள்ளாட்சி துறை தலைவர்கள் தற்பொழுதுள்ள பணி விதிகளில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டியிருப்பின் அந்த வேண்டுகோளை அந்தந்த தலைமை செயலக துறைகள் மூலம் அரசுக்கு அனுப்ப வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

22.07.2013 நாளிட்ட அரசாணை நிலை எண்.325, நிதித்துறை (ஊதியக்குழு) நாள் 22.07.2013ல் தொழில் திறனுடைய உதவியாளர் நிலை–II (Skilled Asst. Grade-II) பதவிக்கு ஊதிய விகிதம் 5200-20200+2000ல் இருந்து 5200–20200+2400 என்ற ஊதிய விகிதமாக மாற்றம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இயந்திர பொறியியல் துறையில் இந்நாள் வரை தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படாமல் உள்ளதாகவும், சம்பந்தப்பட்ட நிர்வாகம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், தம்முடன் பணிபுரிந்த பணியாளர்களுக்கு பதவி உயர்வு மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது எனவும், தற்போதுள்ள பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்காமல் தாமதப்படுத்துவதாகவும், காலி பணியிடங்கள் நிரப்ப கோரப்பட்டுள்ளதுடன், உதவி மோட்டார் மெக்கானிக், மோட்டார் மெக்கானிக், தலைமை மோட்டார் மெக்கானிக் போன்ற பதவிகளுக்கு 2002ல் தயாரிக்கப்பட்ட மூப்பு நிலை பட்டியலின்படி பதவி உயர்வு வழங்குமாறு பல்வேறு சங்கங்களால் நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இயந்திர பொறியியல் துறையில் பணிபுரியும் மூன்றாம் மற்றும் நான்காம் நிலை பணியாளர்களுக்கு கடந்த 2006க்கு பின்பு அரசாணையின்படி எந்தவிதமான பதவி உயர்வுகளும் இல்லாமல் ஒரே பதவியில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை முடித்தவர்களாக பணிபுரிந்து வருகிறார்கள். இதனால் பல தொழிலாளர் சங்களிலிருந்து புகார் மனுக்கள் தொடர்ந்து வந்தவண்ணமாக உள்ளது.

இதன் மூலம் பணிந்து சமர்ப்பிப்பது யாதெனில், மேற்கண்ட அரசாணையின் படி பணி விதிகளில் திருத்தம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கவும், இதற்கான வரைவுத் திருத்தம் மேற்கொள்ள அரசின் அனுமதி கோரப்பட வேண்டும். ஆனால், இயந்திர பொறியியல் துறையில் பணிபுரியும் மூன்றாம் மற்றும் நான்காம் நிலை பணியாளர்களுக்கு 2009ல் துணை விதிகள் ஏதும் இல்லை.

ஆகவே, இயந்திர பொறியியல் துறையில் பணிபுரியும் சார்நிலை பணியாளர்களுக்கு துணை விதிகள் இது நாள் வரை ஏதும் இல்லாததால் ஏற்கனவே துணை விதிகளில் இருந்த பதவிகளான பிளாக்ஸ்மித்,டீசல் மெக்கானிக் லோடர் ஆபரேடர்,டிரில்லர்,கிரைண்டர் மற்றும் உதவி டீசல் மெக்கானிக் ஆகிய (6) ஆறு பதவிகள் நீக்கம் செய்யப்பட்டு கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

**துணை விதிகள்**

**சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் வகுப்பு–3 மற்றும் 4ம் நிலை சார்நிலைப் பணியாளர்களின் துணை விதிகள்–2014**

**3–ம் நிலை பணியாளர்கள்**

| வ. எண். | பதவியின்பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் தகுதிகள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| I | **மேற்பார்வையாளர்** **(Supervisor)**<br>1. பிரஸ் ஃபோர் மேன் (Press Fore Man) | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதி பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் | 1. 10ம் வகுப்பு தேர்ச்சி.<br>2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப பொறியியல் சான்றிதழ் பட்டம்/பட்டயம் (மெக்கானிக்கல்) | **நடைமுறையில் உள்ளது**<br>4500–125–7000<br>**திருத்தப்பட்டது**<br>5200–20200+நிலை ஊதியம்–ரூ. 2800<br>**ஒரு நபர் ஊ.கு** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மூலம்<br><br>2. நேரடி நியமனம் | பிரிண்டிங் டெக்னாலஜி)<br>3. மேற்படி கல்வி தகுதிக்கு இணையாக அங்கீகரிக்கப்பட்ட பிரிதொரு கல்வித் தகுதி | **<u>பரிந்துரை</u>**<br>**9300–34800+4200**<br>**<u>நிர்ணயிக்கப்பட்ட நாள்</u>**<br>ஒவ்வோராண்டும் மார்ச் முதல் நாள். |
| | 2. ப்ரூப் ரீடர் (Proof Reader) | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதி பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br>2. நேரடி நியமனம் | 1. 10ம் வகுப்பு தேர்ச்சி.<br><br>2. தமிழ் நாடு அரசின் தொழில்நுட்ப இயக்குநரால் நடத்தப்படும் ப்ரூப் ரீடருக்கான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | **<u>நடைமுறையில் உள்ளது</u>**<br>**4500–125–7000**<br>**<u>திருத்தப்பட்டது</u>**<br>**5200–20200**+நிலை ஊதியம்–ரூ. **2800**<br>**<u>ஒரு நபர் ஊ.கு பரிந்துரை</u>**<br>**9300–34800+4200**<br>**<u>நிர்ணயிக்கப்பட்ட நாள்</u>**<br>ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள். |
| **II** | **<u>தொழில் திறனுடைய உதவியாளர் நிலை – I</u>**<br>**<u>Skilled Asst. Grade-I</u>**<br>1. ரிவிட்டர் ஆர்டீசியன்<br>2.வெல்டர் ஆர்டீசியன்<br>3. பிட்டர் ஆர்டீசியன்<br>4. டிங்கர் ஆர்டீசியன்<br>5. டர்னர் ஆர்டீசியன்<br>6. கார்பெண்டர் ஆர்டீசியன்<br>7. லெட்டர் பெயின்டர் ஆர்டீசியன் (Letter Painter Artisan)<br>8. மிஷின் ஆப்ரேட்டர் (Machine Operator) | 1. நேரடி நியமனம்<br><br>2. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் 2 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வின் மூலம் | 10ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் ITI – தேர்ச்சி<br><br>1) 10ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் ITI – தேர்ச்சி, தொழில் திறனுடைய உதவியாளர் நிலை 2 **(Skilled Asst. Grade –II)ல்** சம்மந்தப்பட்ட பதவியில் 2 ஆண்டு முன் அனுபவம்.<br><br>2) கீழ் நிலை பதவியில் பதவியில் 10 ஆண்டு பணி முடித்து, **Skilled - Asst. Grade–IIல்** சம்மந்தப்பட்ட பதவியில் 5 ஆண்டு முன் அனுபவம். | **<u>நடைமுறையில் உள்ளது</u>**<br><br>**4000–100–6000**<br>**<u>திருத்தப்பட்டது</u>**<br>**5200–20200**+நிலை ஊதியம்–ரூ. **2400**<br>**<u>ஒரு நபர் ஊ.கு பரிந்துரை</u>**<br>**5200–20200+2600**<br>**<u>நிர்ணயிக்கப்பட்ட நாள்</u>**<br><br>ஒவ்வோராண்டும் ஜூலை முதல் நாள். |
| **III** | **<u>தொழில் திறனுடைய உதவியாளர் நிலை – II</u>**<br>**<u>Skilled Asst.Grade-II</u>**<br>1. டிங்கர் (Tinker)<br>2. பெயின்டர் (Painter)<br>3. லெட்டர் பெயின்டர் (Letter Painter)<br>4. வார்னீஷ் மேன் (Varnish Man) | 1. நேரடி நியமனம்<br>2. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் 2 ஆண்டு பணி | 1. 10ஆம் வகுப்பு தேர்ச்சி சம்பந்தப்பட்ட துறையில் ITI சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் (அரசாணை எண்.338, | **<u>நடைமுறையில் உள்ளது</u>**<br>**3050–75–3950–80–4590**<br>**<u>திருத்தப்பட்டது</u>** |

| | | | | |
|---|---|---|---|---|
| | 5. மிஷின் மைன்டர் (Machine Minder)<br>6. கலர் பிரின்டர் (Colour Printer)<br>7. பைன்டர் (Binder)<br>8. பென்ரூலர் (Pen Ruler)<br>9. லேயர் ஆன் (Layer On)<br>10. கம்போசிடர் (Compositor)<br>11. ரிவிட்டர் (Revitter)<br>12. வெல்டர் (Welder)<br>13. கார்பெண்டர் (Carpenter)<br>14. பிட்டர் (Fitter)<br>15. டர்னர் (Turner)<br>16. மோட்டார் மெக்கானிக் (Motor Mechanic)<br><br>17. ஆட்டோ எலக்ட்ரிஷன் (Auto Electrician) | முடித்தவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br>3. கீழ்நிலைப் பதவிகளில் (பணிமனையில் பணிபுரியும் தொழிலாளர், அச்சகத்தில் பணிபுரியம் தொழிலாளர்கள் மற்றும் கிளினர்) 15 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br>4. கிளினர் பதவியில் 10 ஆண்டு (ம) உதவி மோட்டார் மெக்கானிக் பதவியில் 5 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வின் மூலம், | நிதித்துறை (ஊகு) நாள் 26.08.2010ன் படி இனி வரும் காலங்களில் பயிற்சி திறனுள்ள உதவியாளர்கள் (Skilled Asst. Grade-II) I.T.I. சான்றிதழ் பெற்றவர்களை Entry level post நியமித்தல் வேண்டும்)<br>2. இருப்பினும் இயந்திர பொறியியல் துறையில் பணிபுரியும் கீழ்நிலை பதவியில் (பணிமனை / அச்சகத்தில்) உள்ள தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு ஏதும் இல்லை என்பதால் பணியாளர்களின் நலன் கருதி கீழ்நிலை பதவிகளில் 15 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு அவரவர் பதவிக்கு ஏற்றார் போல் டிரேட் டெஸ்ட் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பதவி உயர்வு வழங்கலாம்.<br>3. கிளினர்களுக்கு பதவி உயர்வு ஏதும் இல்லை என்பதால், பணியாளர்களின் நலன் கருதி கிளினர் பதவியில் 10 ஆண்டு பணி முடித்தவர்கள், உதவி மோட்டார் மெக்கானிக் பதவியில் 5 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு மோட்டார் மெக்கானிக் பதவி உயர்வு வழங்கலாம். | 5200–20200+நிலை ஊதியம்–ரூ. 1900<br>**<u>ஒரு நபர் ஊ.கு பரிந்துரை</u>**<br>5200–20200+நிலை ஊதியம்–ரூ. 2000<br>**( அரசாணை நிலை எண்.325 நிதித்துறை (ஊதியக்குழு) நாள் 22.07.2013)**<br>5200–20200+2400<br>**<u>நிர்ணயிக்கப்பட்ட நாள்</u>**<br>ஒவ்வோராண்டும் மார்ச் முதல் நாள். |

| | | | | |
|---|---|---|---|---|
| **IV** | தொழில் திறனற்ற பணியாளர்–Unskilled<br>1. உதவி இயந்திரப்பழுதாளர் (Asst. Motor Mechanic) | கீழ்நிலைப் பதவிகளில் (தொழிலாளர் மற்றும் கிளினர்) 10 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வின் மூலம் | தற்பொழுதுள்ள பணியாளர்கள் காலியாகும் போது அதனை நிரப்பாமல் (அரசாணை எண்.338, நிதித்துறை (ஊகு) நாள் 26.08.2010ன் படி இனி வரும் காலங்களில் பயிற்சி திறனுள்ள உதவியாளர்கள் (Skilled Asst. Grade-II) I.T.I. சான்றிதழ் பெற்றவர்களை Entry level post நியமித்தல் வேண்டும்) இருப்பினும் இயந்திர பொறியியல் துறையில் பணிபுரியும் கீழ்நிலை பதவியில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் கிளினர்களுக்கு பதவி உயர்வு ஏதும் இல்லை என்பதால், பணியாளர்களின் நலன் கருதி கீழ்நிலை பதவிகளில் 10 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வு வழங்கலாம். | **நடைமுறையில் உள்ளது**<br>2610–60–3150–65–3540<br>**திருத்தப்பட்டது**<br>4800–10000+நிலை ஊதியம்–ரூ. 1400<br>**ஒரு நபர் ஊ.கு பரிந்துரை**<br>5200–20200+1900<br>**நிர்ணய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் நாள்** |
| | 2. டயர் மேன் (Tyre Man) | 1. நேரடி நியமனம்<br>2. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் 2 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வின் மூலம் | 1. 10ம் வகுப்பு தேர்ச்சி<br>2. தமிழ் எழுத படிக்க தெரிய வேண்டும்<br>3. கீழ்நிலை பதவிகளில் 10 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வு மூலம் | **நடைமுறையில் உள்ளது**<br>3050–75–3950–80–4590<br>**திருத்தப்பட்டது**<br>5200–20200+நிலை ஊதியம்–ரூ. 1900<br>**நிர்ணய நாள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் முதல் நாள்** |
| **V** | 1. ஓட்டுநர் (Driver) | 1. கீழ்நிலைப் பதவிகளில் 2 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br>2. நேரடி நியமனம் | 1. 8ம் வகுப்பு தேர்ச்சி, கனரக வாகன ஓட்டுநர் உரிமம்<br>2. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி, கனரக வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் தமிழ் நாடு அரசு சாலை போக்குவரத்து (I.R.T) நிறுவனத்தின் மூலம் ஓட்டுநர் பயிற்சி பெற்றிருத்தல் | **நடைமுறையில் உள்ளது**<br>3200–85–4900<br>**திருத்தப்பட்டது**<br>5200–20200+நிலை ஊதியம்–ரூ. 2000<br>**ஒரு நபர் ஊ.கு பரிந்துரை**<br>5200–20200+2400<br>**நிர்ணய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் நாள்** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேண்டும். | |
| VI | நேரக்காப்பாளர் (Time Keeper) | 1. கீழ்நிலைப் பதவிகளில் 2 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br><br>2. நேரடி நியமனம் | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | **நடைமுறையில் உள்ளது**<br>2650–60–3150–65–3540<br>**திருத்தப்பட்டது**<br>4800–10000+நிலை ஊதியம்–ரூ. 1650<br>**நிர்ணய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் நாள்.** |
| VII | பெட்ரோல் பங்க் ஆப்ரேட்டர் (Petrol Bunk Operator) | 1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாண் பருவம் 2 ஆண்டுகள் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்<br><br>2. நேரடி நியமனம் | 10ஆம் வகுப்பு தேர்ச்சி , தமிழில் எழுதப்படிக்க தெரிய வேண்டும். | **நடைமுறையில் உள்ளது**<br>2610–60–3150–65–3540<br>**திருத்தப்பட்டது**<br>4800–10000+நிலை ஊதியம்–ரூ. 1400<br>**நிர்ணய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் நாள்.** |

| **4ம் நிலை பணியாளர்கள்** | | | | |
|---|---|---|---|---|
| VIII | துலக்குநர் (Cleaner) | பணிக்காலத்தில் காலஞ்சென்றவர்களின் வாரிசுதாரர்களை நியமனம் செய்தல் (அல்லது) நேரடி நியமனம்<br><br>இந்த பணியாளர்கள் விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில், இப்பதவிக்கு இணையான ஊதிய விகிதத்தில் உள்ள பதவிகளில் பதவி மாற்றம் செய்யலாம் | 8ம் வகுப்பு தேர்ச்சி, தமிழில் எழுதப்படிக்க தெரிய வேண்டும். | **நடைமுறையில் உள்ளது**<br>2550–55–2660–60–3200<br>**திருத்தப்பட்டது**<br>4800–10000+நிலை ஊதியம்–ரூ. 1300<br>**நிர்ணய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் நாள்** |
| IX | தொழிலாளி (Thozhilali) | | 8ம் வகுப்பு தேர்ச்சி , தமிழில் எழுதப்படிக்க தெரிய வேண்டும். | |
| X | துப்புரவு பணியாளர் (Sanitary Worker) | | தமிழில் எழுதப்படிக்க தெரிய வேண்டும். | |
| XI | காவலாளி (Watch Man) | | 8ஆம் வகுப்பு தேர்ச்சி, தமிழில் எழுதப்படிக்க தெரிய வேண்டும். | |
| XII | லஸ்கர் (Lascar) | | 8ம் வகுப்பு தேர்ச்சி (அ) தேர்ச்சியின்மை, தமிழில் எழுதப்படிக்க தெரிய வேண்டும். | |
| XIII | பெருக்குபவர் (Sweeper) | | தமிழில் எழுதப்படிக்க தெரிய வேண்டும். | |

எனவே, இயந்திர பொறியியல் துறையில் பணிபுரியும் 3ம் நிலை தொழில் நுட்ப பணியாளர்கள், 3ம் மற்றும் 4ம் நிலை சார்பு நிலை பணியாளர்களுக்கு பதவி உயர்வு ஏதும் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டும், சங்கங்களின் கோரிக்கையினை ஏற்றும், அரசாணை எண்.338 மற்றும் 325ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதத்திற்கு ஏற்ப 3ம் நிலை தொழில் நுட்ப பதவிகளுக்கு ஊதியத்தினை முறைப்படுத்தியும், பெயர் மாற்றம் செய்தும், 3ம் மற்றும் 4ம் நிலை பதவிகளுக்கான துணை விதிகள் நிர்ணயம் செய்ய அரசின் அனுமதி பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம்  அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.4ந.க.எண்/5579/2016**

**ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.457/2016 **பொருள் எண்.29**

**மண்டலம்–4 பகுதி –9,10,11 க்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 742 துப்புரவு பணியாளர்களை ஒரு வருடம் நியமிக்க நிர்வாக அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடக்கு வட்டார அலுவலகத்திற்கு உட்பட்ட மண்டலம்–4 (தண்டையார்பேட்டை) 23.83 சதுர கி.மீ பரப்பளவுள்ளது. இது பகுதி 9, 10, மற்றும் 11 ல், வார்டு 34முதல் 48 வரை உள்ள வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 47 பேருந்து சாலைகளும் மற்றும் 2850 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும், சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 6,57,694 ஆகும்.

தற்போது மண்டலம்–4ல் துப்புரவு பணிக்கென 972 நிரந்தர பணியாளர்களும் 530 ஒப்பந்ததாரர் மூலம் தினக்கூலி பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு மண்டலத்தின் பணியாளர்களின் தேவை குறித்து நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் கீழ் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. ஆய்வின் படி மொத்த பணியாள்களின் எண்ணிக்கை = 1714
2. தற்போது உள்ள நிரந்தர மாநகராட்சி பணியாளர்களின் எண்ணிக்கை = 972
3. தேவைப்படும் ஒப்பந்த பணியாளர்களின் எண்ணிக்கை = 742

---

**தேவைப்படும் மொத்த ஒப்பந்த பணியாளர்களின் எண்ணிக்கை = 742**

மண்டலம் –4க்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை ஆய்வின் படி 742 பேர்களை துப்புரவு பணிக்காக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணியமர்த்தலாம் என்ற கருத்தின் அடிப்படையிலும் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் மக்கள் நலன் கருதியும் நிர்வாக நலன் கருதியும் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் எந்த ஒரு தெருவும் விடுபடாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன்பின்னர் ஒருங்கிணைந்து அதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–4ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ. 320/– வீதம் ஓர் ஆண்டிற்கான கணக்கின் படி 742 பணியாளர்களுக்கு ஆகும் செலவு ரூ. 320 x 742 x365 என ஆண்டிற்கு ரூ. 8,66,65,600/– (ரூபாய் எட்டு கோடியே அறுபத்து ஆறு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து அறுநூறு மட்டும்) தொகை தேவைப்படுகிறது.

எனவே, மேற்கண்ட 742 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களை ஓர் ஆண்டு காலத்திற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணியமர்த்த வேண்டி உள்ளது.

மேலும், தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணியாட்களை நியமிக்கும் போது அவர்களுக்கான நலப்பொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலமே வழங்க வேண்டி உள்ளது.

ஒரு நபருக்கு ஒரு ஆண்டிற்கு தேவைப்டும் நலப்பொருட்களின் விவரம் பின்வருமாறு அளிக்கப்படுகின்றது.

a) ஒளிரும் ஆடை – 6 எண்ணிக்கை (60 நாட்களுக்கு ஒன்று)
b) கையுறை – 36 எண்ணிக்கை (10 நாட்களுக்கு ஒன்று)
c) முக கவசம் – 365 எண்ணிக்கை (ஒரு நாளைக்கு ஒன்று)
d) காலணி, காலுறை – 2 ஜோடி (6 மாதத்துக்கு ஒன்று)
e) துண்டு – 2 (6 மாதத்துக்கு ஒன்று)
f) சோப்பு – 24 எண்ணிக்கை (1 மாதத்திற்கு 2 வீதம்)

மேற்கண்ட நலப்பொருட்களின் அடிப்படையில் 742 துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு வருடத்துக்கு ஆகும் செலவு விவரம்.

| | | | |
|---|---|---|---|
| a | ஒளிரும் ஆடை | - 742 x 6 x ரூ.110 | ரூ. 4,89,720.00 |
| b | கையுறை | - 742 x 36 x ரூ.15 | ரூ. 4,00,680.00 |
| c | முக கவசம் | - 742 x 365 x ரூ.3 | ரூ. 8,12,490.00 |
| d | காலணி, காலுறை | - 742 x 2 x ரூ.300 | ரூ. 4,45,200.00 |
| e | துண்டு | - 742 x 2 x ரூ.100 | ரூ. 1,48,400.00 |
| f | சோப்பு | - 742 x 24 x %.17 | ரூ. 3,02,736.00 |
| **மொத்தம்** | | | **ரூ. 25,99,226.00** |

மொத்த ஒரு ஆண்டிற்கு ஆகும் செலவுத்தொகை **ரூ.25,99,226/–** மேற்படி நலப்பொருட்களுக்கு ஆகும்.

எனவே, மண்டலம் – 4, தண்டையார்பேட்டை பகுதியில் துப்புரவு பணி தொய்வில்லாமல் நடைபெற தற்காலிக ஏற்பாடாக 75 நாட்களுக்கு மின்னனு மூலம் ஒப்பம் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. இது நடைமுறைக்கு சாத்தியமில்லாதது . அவ்வப்போது மின்னனு ஒப்பம் மூலம் 75 நாட்களுக்கு ஒரு முறை ஒப்பந்ததாரரை மாற்றுவதால் நிர்வாக சிக்கல் எழுகிறது. எனவே ஒரு வருடத்திற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணியாளர்களை நியமிக்க நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.

எனவே,

1. மேற்கண்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 742 பணியாளர்கைளை பகுதி – 9,10 மற்றும் 11 க்கு ஓராண்டிற்கு பணியமர்த்தவும், (பணி ஆணை வழங்கும் தேதியிலிருந்து)
2. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.320/– வீதம் 742 பணியாளர்களுக்கு ஆகும் செலவு ஓராண்டிற்கு ரூ. 320 x 742 x365 என ஆண்டிற்கு ரூ. 8,66,65,600/– (எட்டு கோடியே அறுபத்து ஆறு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து அறுநூறு மட்டும்) ஆகும், இதனை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமிக்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மற்றும் அதற்கு தேவையான தோராய செலவினம் ரூ. 8,66,65,600/– (எட்டு கோடியே அறுபத்து ஆறு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து அறுநூறு மட்டும்)ற்கு மன்றத்தின் மூலம் நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. துப்புரவு பணிக்காக பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு ஒரு ஆண்டிற்கு வழங்கப்பட வேண்டிய நலப்பொருட்கள்.
   a) ஒளிரும் ஆடை – 6 எண்ணிக்கை (60 நாட்களுக்கு ஒன்று)
   b) கையுறை – 36 எண்ணிக்கை (10 நாட்களுக்கு ஒன்று)
   c) முக கவசம் – 365 எண்ணிக்கை (ஒரு நாளைக்கு ஒன்று)
   d) காலணி, காலுறை – 2 ஜோடி (6 மாதத்துக்கு ஒன்று)
   e) துண்டு – 2 (6 மாதத்துக்கு ஒன்று)
   f) சோப்பு – 24 எண்ணிக்கை (1 மாதத்திற்கு 2 வீதம்)

   இவற்றை பெருநகர சென்னை மாநகராட்சியே வழங்க ஒப்புதல்அளிக்கவும்,
4. இந்த நலப்பொருட்களுக்கு ஆகும் செலவு தொகையான **ரூ.25,99,226/–** (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து இருநூற்று இருபத்து ஆறு மட்டும்)ற்கு நிர்வாக அனுமதி வழங்கவும்,
5. இப்பணிக்கான தொகையை கணக்கு குறியீட்டு எண்.40–41–03 கணக்கு தலைப்பு எண் 230–15–01–00 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு(சுகாதாரம்) வின் கூட்டம் 11.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.29/2016ன்படி நிலைக்குழு (சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 17.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.252/2016ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>தி.க.மே.து.பொ.ப.சா.ந.க.எண்.அ3/56/2016</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.458/2016 **பொருள் எண்.30**

**<u>திடக்கழிவு மேலாண்மை துறை – திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான எச்.டி.பி.இ.குப்பை தொட்டிகள் (80 லிட்டர் கொள்ளளவு) (Tricycle Bins, 80 litre capacity) 15,000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய மின்னனு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பெறப்பட்டன - குறைந்த விலைப்புள்ளிதாரர் திருவாளர் மாரிசன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்பதற்கு அனுமதி</u>**

முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் 12.2.2016 அன்று நடந்த மாநில 3–வது உயர்மட்டக்குழுவின் கூட்ட நடவடிக்கையின் சுருக்கத்தில் (Minutes of Meeting) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பெரு நகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்ய கீழ்கண்டவாறு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| S. No | Components | Numbers | Estimated Amount (in lakhs) |
|---|---|---|---|
| 1. | Compactor Bins (1100 litre) | 2000 | 420.00 |
| 2. | Tricycles | 500 | 85.00 |
| 3 | Roto Moulded Bins | 2000 | 42.00 |
| 4 | Tricycle Bins | 15000 | 150.00 |
| 5 | Bio Methanation plants | 5 | 500.00 |
| | Total | 19505 | 1197.00 |

திடக்கழிவு மேலாண்மை துறையில் எச்.டி.பி.இ.குப்பை தொட்டிகள் (80 லிட்டர் கொள்ளளவு) (Tricycle Bins, 80 litre capacity) 15000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய ஒப்பந்தங்கள் கோருவதற்கு மன்ற தீர்மான எண்.347/2016 நாள் 30.6.2016–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதன்படி எச்.டி.பி.இ.குப்பை தொட்டிகள் (80 லிட்டர் கொள்ளளவு) (Tricycle Bins, 80 litre capacity) 15000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய குறுகிய கால மின்னனு ஒப்பந்தங்கள் கோரப்பட்டன. ஒப்பந்த அறிக்கையின் விளம்பரம் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் மற்றும் தமிழ் நாளிதழ் நாள் 7.7.2016 அன்று வெளியிடப்பட்டன. ஒப்பந்த நாள் 29.7.2016 அன்று மின்னனு ஒப்பந்தங்கள் திறக்கப்பட்டன. இதில் ஐந்து ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். விவரங்கள் கீழ்வருமாறு :

1. திருவாளர் ரவி மெட்டல் வொர்க்ஸ்
2. திருவாளர் மாரிசன் கெமிக்கல்ஸ்
3. திருவாளர் சாந்தி மெட்டல் மார்ட்
4. திருவாளர் எஸ்.எம்.வி கெமிக்கல்ஸ்
5. திருவாளர் ஸ்ரீ சவி சக்தி எண்டர் பிரைசஸ்

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் திருவாளர் மாரிசன் கெமிக்கல்ஸ் மற்றும் திருவாளர் எஸ்எம்வி கெமிக்கல்ஸ் நிறுவனங்கள் மட்டுமே ஒப்ப வைப்பு தொகை வரைவோலை (அசல்) சமர்ப்பித்தார்கள். மற்ற மூன்று ஒப்பந்ததாரர்களான திருவாளர் ரவி மெட்டல் வொர்க்ஸ், திருவாளர் சாந்தி மெட்டல் மார்ட் மற்றும் திருவாளர் ஸ்ரீ சவி சக்தி எண்டர் பிரைசஸ் நிறுவனங்கள் ஒப்ப வைப்பு தொகை வரைவோலை (அசல்) சமர்ப்பிக்கவில்லை.

ஐந்து ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததில் திருவாளர் ரவி மெட்டல் வொர்க்ஸ், திருவாளர் சாந்தி மெட்டல் மார்ட் மற்றும் திருவாளர் ஸ்ரீ சவி சக்தி எண்டர் பிரைசஸ் நிறுவனங்கள் ஒப்ப வைப்பு தொகையை (அசல்) சமர்ப்பிக்காததால் விலைப்புள்ளியை திறப்பதற்கு தகுதியற்றவராகிறார்கள். மற்ற ஒப்பந்ததாரர்களான திருவாளர் மாரிசன் கெமிக்கல்ஸ் மற்றும் திருவாளர் எஸ்.எம்.வி கெமிக்கல்ஸ் நிறுவனங்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் ஒப்பந்த படிவத்தின்படி இருந்ததால் விலைப்புள்ளிகளை திறப்பதற்கு தகுதியுள்ளவராகிறார்கள்.

எனவே திருவாளர் மாரிசன் கெமிக்கல்ஸ் மற்றும் திருவாளர் எஸ்எம்வி கெமிக்கல்ஸ் நிறுவனங்களின் விலைப்புள்ளிகளை **5.8.2016** அன்று திறக்கப்பட்டன. விவரங்கள்கீழ் வருமாறு :

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | விலை விவரம் ஒன்றின் விலை | மொத்த தொகை | மதிப்பீட்டு தொகையுடன் அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| **1** | திருவாளர் மாரிசன் கெமிக்கல்ஸ் | ரூ.**1080/–** (வரிகள் உட்பட) | ரூ.**1,62,00,000/–** | (+) **8%** அதிகம் |
| **2** | எஸ்.எம்.வி கெமிக்கல்ஸ் | ரூ.**1150/–** (வரிகள் உட்பட) | ரூ.**1,72,50,000/–** | (+) **15%** அதிகம் |

விலைப்புள்ளிகளை ஒப்பிடுகையில் திருவாளர் மாரிசன் கெமிக்கல்ஸ் நிறுவனம் எச்.டி.பி.இ.குப்பை தொட்டி (**80** லிட்டர் கொள்ளளவு) (Tricycle Bins, 80 litre capacity) ஒன்றின்விலை ரூ.**1080/–** என குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். இந் நிறுவனத்தை விலை குறைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இந் நிறுவனத்தின் **9.8.2016** நாளிட்ட கடிதத்தில் மூலப்பொருட்களின் விலை, தொழிலாளர்களின்கூலி மற்றும் போக்குவரத்து செலவு ஆகியவைகள்உயர்ந்துள்ளதால் விலையை குறைக்க இயலவில்லை எனவும் இருப்பினும் மாநகராட்சிக்காக குப்பை தொட்டி ஒன்றின்விலை ரூ.**1060/–** என இறுதி விலையாக அளித்துள்ளார்கள். இவ் விலைப்புள்ளியை மதிப்பீட்டு தொகையுடன் ஒப்பிடும் பொழுது (+) **6** சதவீதம் அதிகமாக உள்ளது. தற்போது வெளிச்சந்தையில் எச்.டி.பி.இ.குப்பை தொட்டி (**80** லிட்டர் கொள்ளளவு) (Tricycle Bins, 80 litre capacity) ஒன்றின் குறைந்தபட்ச விலை ரூ.**1200/–** ஆக உள்ளது. வெளிச்சந்தையின் விலையுடன்ஒப்பிடும் பொழுது ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி (–) **11.66** சதவீதம் குறைவாக உள்ளது. எனவே இந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

திருவாளர் மாரிசன் கெமிக்கல்ஸ் அளித்துள்ள எச்.டி.பி.இ.குப்பை தொட்டி (**80** லிட்டர் கொள்ளளவு) (Tricycle Bins, 80 litre capacity) ஒன்றின்விலை ரூ.**1060/–** வீதம் **15000** எண்ணிக்கைக்கு ரூ.**1,59,00,000/–**ற்கு கொள்முதல் செய்ய உயர்மட்ட ஒப்பகுழுவின் **12.8.2016** நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே,

1. குறைந்த விலைப்புள்ளிதாரர் திருவாளர் மாரிசன் கெமிக்கல்ஸ் அளித்துள்ள எச்.டி.பி.இ.குப்பை தொட்டி (**80** லிட்டர் கொள்ளளவு) (Tricycle Bins, 80 litre capacity) ஒன்றின்விலை ரூ.**1060/–**ஐ (வரிகள் உட்பட) ஏற்கவும் மற்றும் **15000** எண்ணிக்கைக்கான தொகை ரூ.**1,59,00,000/–**ற்கு இந் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும்;
2. இந்நிறுவனத்திடமிருந்து மொத்த ஒப்பந்த தொகையில் **2** சதவீதம் காப்பீடு தொகையாக பெறவும் மற்றும் முறைப்படி உடன்படிக்கை செய்து கொள்ளவும்;

**3.** இந்த செலவினத்தை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சென்னை மாநகராட்சி நிதிகளின் பங்கீட்டு விகிதங்களின்படி மேற்கொள்ளவும்;

மேற்கண்ட **1** முதல் **3** வரையுள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் **16.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**238/2016**ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் **17.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**254/2016**ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>சி.தி.து.ந.க.எண்.பி1/0709/2016</u>**
**<u>ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.459/2016 **பொருள் எண்.31**

**<u>மண்டலம் –9, வார்டு –114, 116,125 (ம) 126ல் உள்ள மெரினா காமராஜர் சாலை மேற்குப் பகுதியில் அகில இந்திய வானொலி நிலையம் முதல் ஆசிரியர் பயிற்சி மைய வாயில் வரை (பகுதி – I) – ஆசிரியர் பயிற்சி மைய வாயில் முதல் பார்த்தசாரதி கோயில் நுழைவாயில் வரையில் (பகுதி – II) – பார்த்தசாரதி கோயில் நுழைவாயில் முதல் மாநில கல்லூரி வரை (பகுதி – III), மாநில கல்லூரி முதல் சுவாமி சிவானந்தா சாலை வரையில் (பகுதி – IV) அமைந்துள்ள பழைய சுற்றுச் சுவர்களை அகற்றி வரலாற்று தூண்கள் மற்றும் நடைபாதை அமைக்கும் பணிக்காக 01.04.2016 முதல் 29.07.2016 வரை பணிக்கால நீட்டிப்பிற்கு பின்னேற்பு அனுமதியும், 31.10.2016 வரை பணிக்கால நீட்டிப்பு வழங்க அனுமதி</u>**

மண்டலம்–9, வார்டு – 114,116, 125 (ம) 126ல் உள்ள மெரினா காமராஜர் சாலை மேற்குப் பகுதியில் அகில இந்திய வானொலி நிலையம் முதல் ஆசிரியர் பயிற்சி மைய வாயில் வரை (பகுதி–I), ஆசிரியர் பயிற்சி மைய வாயில் முதல் பார்த்தசாரதி கோயில் நுழைவாயில் வரையில் (பகுதி–II) மற்றும் பார்த்தசாரதி கோயில் நுழைவாயில் முதல் மாநில கல்லூரி வரை (பகுதி–III), மாநில கல்லூரி முதல் சுவாமி சிவானந்தா சாலை வரையில் (பகுதி–IV) அமைந்துள்ள பழைய சுற்றுச் சுவர்களை அகற்றி வரலாற்று தூண்கள், சி.ஐ கிரில் மற்றும் சி.ஐ வாயிற் கதவுகள் கொண்டு புதுப்பித்து, கிரானைட் கற்கள் மற்றும் கிரானைட் பில்லர், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கைப்பிடி மூலம் நடைபாதை அமைக்கும் பணிக்காக திருவாளர்கள். ஆர். கிருஷ்ண மூர்த்தி ஆண்டு கோ அவர்களுக்கு 31.03.2016 வரை பணிக்கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

பகுதி–1 பிரிவில் உள்ள இராணி மேரி கல்லூரிச் சாலையின் நடைபாதை ஒரே சீராக 5.0மீ அகலமாக அமைக்கவும், கல்லூரியின் முன் அமைந்துள்ள பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நிறுத்த தனிவழி (Busbay) அமைப்பதற்கும் உயர் கல்வி துறை செயலர் மற்றும் கல்லூரி முதல்வர் அவர்களுக்கு கடிதம் அனுப்பட்டது. ஆனால் இக்கல்லூரியில் ஏற்கனவே உள்ள நடைபாதை அளவில் சுற்றுச்சுவர் அமைக்குமாறு ஜனவரி மாதம் இறுதியில் வாய்மொழி மூலமாக அனுமதி பெறப்பட்டு பணி தொடங்கப்பட்டது. பேருந்து நிறுத்த தனிவழி (Busbay) அமைக்க 28.07.2016 அன்று செயலர், உயர்கல்வி துறையின் மூலம் வாய்மொழி அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2016ன் வாக்குகள் எண்ணும் பணி இக்கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டதால் ஏப்ரல் 2016, மே 2016 ஆகிய மாதங்களில் பணியை தொடர இயலாத நிலை ஏற்பட்டது. இப்பணியானது தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2016 காரணமாக பிப்ரவரி 2016, மார்ச் 2016, ஏப்ரல் 2016, மே 2016 மாதங்களில் தொடர்ச்சியாக செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. மேலும், மே 2016, ஜூன் 2016 மற்றும் ஜூலை 2016 மாதங்களில் ஏற்பட்ட மழையின் காரணமாகவும் இப்பணியில் தொய்வு ஏற்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமைச் செயலகத்திற்கு செல்லும் வழியாக காமராஜர் சாலை இருப்பதாலும், மிக முக்கிய பிரமுகர்கள் செல்லும் பாதையாக இருப்பதாலும் பாதுகாப்பு காரணமாக பகல் நேரத்தில் பணியினைச் செய்யவும், கனரக இயந்திரங்கள் இயக்கவும் போக்குவரத்து காவல் துறையினரால் அனுமதி மறுக்கப்பட்டு இரவில் மட்டுமே பணிகள் மேற்கொள்ள வேண்டிய சிரமம் இருப்பதால் உரிய காலத்தில் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் பொருட்டு மேற்காணும் பணிக்கு பணிக்கால நீட்டிப்பு வழங்குவது அவசியமாகும்.

திரு.ஆர்.கிருஷ்ண மூர்த்தி ஆண்டு கோ அவர்கள், மேற்கூறிய காரணங்களால் பணிக்காலத்தை மேலும் 8 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யுமாறு 25.03.2016 அன்று கடிதம் அளித்துள்ளார். இக்கடிதத்தினை பரிசீலனை செய்யப்பட்டதில் அக்டோபர் 2016 வரை கால நீட்டிப்பு வழங்குவது அவசியமாகும் என தீர்மானிக்கப்பட்டு அக்டோபர் 2016 வரைக்குள் பணியினை முடிக்கப்படவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் ஒப்பந்த விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்த கால நீட்டிப்பு காலத்தில் செய்யப்படும் பணிகளுக்கு ஒப்பந்ததாரருக்கு விலை ஏற்றம் (Price Escalation) வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனைக்குப்பட்டு இப்பணியை அக்டோபர் 2016 வரை பணிக்கால நீட்டிப்பு வழங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே, மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டு, ஒப்பந்ததாரருக்கு அக்டோபர் 2016க்குள் பகுதி–I, பகுதி–II, பகுதி–III மற்றும் பகுதி–IV ஆகிய பணிகள் முடிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குபட்பட்டு, பணிகளை முழுமையாக முடிக்க 01.04.2016 முதல் 29.07.2016 வரை பணிக்கால நீட்டிப்பிற்க்கு பின்னேற்பு அனுமதியும் 31 .10. 2016 வரை பணிக்கால நீட்டிப்பு வழங்க சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி 78(பி) ன் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 16.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.237/2016ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 17.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.253/2016ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/4298/2011**
**ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.460/2016 **பொருள் எண்.32**

**இயந்திர பொறியியல் துறை – கடந்த 2011ம் ஆண்டு சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தும் பணிக்காக 10 மண்டலங்களில் இருந்து 15 மண்டலங்களாகப்பட்டதால் – 14 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட பெரிய வகை காம்பெக்டாகள் வாங்க ஒப்பம் கோரப்பட்டு – குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள் Antony Motors Pvt. Ltd. நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு – 43 வாகனங்கள் 4 ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்யப்பட்டது – வாகனங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி 4 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் (செப்டம்பர்–2016 முதல் டிசம்பர்–2016 வரை) உள்ளது – இந்த வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி டிசம்பர்–2016 வரை நீட்டிப்பு செய்ய அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சியில் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதால் 2011 ஆம் ஆண்டு ஏற்கனவே இருந்த 10 மண்டலங்கள் 15 மண்டலங்களாக பிரிக்கப்பட்டது. விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் தரமான துப்ரபவு பணியை மேற்கொள்ள வேண்டி இயந்திரப் பொறியியல் துறை மூலமாக குப்பைகளை அகற்றுவதற்காக 43 எண்ணிக்கையிலான 14 கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட பெரிய வகை காம்பாக்டர் வாகனங்கள் கொள்முதல் செய்ய ஒப்பம் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள் Antony Motors Pvt. Ltd. நிறுவனத்திடமிருந்து கடந்த ஆகஸ்ட்டு–2012 முதல் டிசம்பர்–2012 வரை கொள்முதல் செய்யப்பட்டு, (O & M ) துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இந்த வாகனங்கள் மண்டலம்–1,2,4,5,7,8,11,12,14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களில் துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்ட நாள் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலமான நான்கு ஆண்டுகள் முடிவுறும் நாள் குறித்த விவரங்கள் கீழ் வருமாறு.

| வ. எண். | ஒப்படைக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | வாகனம் ஒப்படைக்கப்பட்ட நாள் | ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து 4 ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடையும் நாள் |
|---|---|---|---|
| 01. | 10 | 30.08.2012 | 30.08.2016 |
| 02. | 10 | 31.08.2012 | 31.08.2016 |
| 03. | 2 | 01.09.2012 | 01.09.2016 |
| 04. | 4 | 07.10.2012 | 07.10.2016 |
| 05. | 4 | 11.10.2012 | 11.10.2016 |
| 06. | 5 | 05.12.2012 | 05.12.2016 |
| 07. | 3 | 12.12.2012 | 12.12.2016 |
| 08. | 5 | 22.12.2015 | 22.12.2016 |

மேற்கண்ட 43 காம்பேக்டர் வாகனங்கள் ஹைட்ராலிக் உபகரணங்கள் பொருத்தப்பட்ட சிறப்பு திறன் கொண்ட வாகனங்கள் ஆகும். இந்த வாகனங்களை பராமரிக்க ஹைட்ராலிக் உபகரணங்கள் பற்றிய தொழில் திறன் கொண்ட பழுதாளர்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் மற்றும் இந்த வாகனத்தினை இயக்குவதற்கு போதுமான ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால், இந்த வாகனங்களை இயக்கி பராமரிக்க ஒப்பந்தாரர் நியமனம் செய்ய வேண்டியுள்ளது. தற்போது உள்ளாட்சி தேர்தல் நடைபெற இருப்பதாலும் மற்றும் பருவ மழையை எதிர் நோக்கி இருப்பதாலும், உடனே புதிய ஒப்பந்தாரர் நியமனம் செய்ய இயலாத நிலை உள்ளது.

இவ்வாறு 43 வாகனங்கள் வெவ்வேறு தினங்களில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடைகிறது. இதனால் இந்நிறுவனத்தின் ஒப்ப காலம் முடிவடையும் போது அனைத்து வாகனத்தையும் வெவ்வேறு தேதிகளில் பெற்றுக் கொள்வது கடினமாகும் மற்றும் 43 வாகனத்திற்கும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கென ஒரே நேரத்தில் புதிய ஒப்பம் கோருவது எளியதாக இருக்கும்.

இத்தருவாயில் திருவாளர்கள் Antony Motors Pvt. Ltd. நிறுவனதார் தனக்கு வழங்கப்பட்ட பணி ஆணையின்படி, **43** காம்பாக்டர் வாகனங்களுக்கு **4** ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடையும் தருவாயில் அனைத்து வாகனங்களுக்கும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை **31.12.2016** வரை தற்போது **4**ம் ஆண்டிற்கான விலை புள்ளியில் பணி செய்திட பணி நீட்டிப்பு ஆணை வழங்குமாறு கடிதத்தின் மூலம் கோரியுள்ளார். தற்போது இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான **4**வது ஆண்டிற்கான விலைப்புள்ளி கீழ்வருமாறு.

| **இயக்குதல் பணி** | 4வது வருடம் / ஒரு ஷுப்ட்டு (2 நடைக்கு) | **பராமரிப்பு பணி** | 4வது வருடம் / நாள் ஒன்றுக்கு |
|---|---|---|---|
| | ரூ.**1186.30/–** | | ரூ.**400/–** |

தமிழ் நாடு அரசு ஒளிமறைவில்லா ஒப்ப விதியில் **14** பிரிவு **9**ல் ஒப்பந்த பணியில் **25** சதவீதம் நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பேருந்து சாலைகளில் பகல் நேரங்களில் துப்புரவு பணி மேற்கொள்ளும்போது போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படுவதால், மேற்கண்ட **43** காம்பேக்டர் வாகனங்களை கொண்டு **2**வது ஷுப்ட்டாக இரவு நேரத்தில் துப்புரவு பணியில் ஈடு படுத்தலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

**43** காம்பேக்டர் வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்காக **31.12.2016** வரை நீட்டிப்பு செய்வதனால் ஏற்படும் செலவீனம் ரூ.**1,00,67,311/–** என கணக்கிடப்படுகிறது. மன்றத்தீர்மானம் எண்.**55/2012**, நாள் **22.02.2012**ல் **75** வாகனங்களுக்கு **4** வருட இயக்குதலுக்கு மொத்த தொகை ரூ.**12,16,87,350/–**க்கும் பராமரிப்பு பணிக்கு மொத்த தொகை ரூ.**3,55,87,500/–**க்கும் ஆணை பெறப்பட்டுள்ளது. இதன்படி **43** வாகனங்களுக்கான **4**வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான மொத்த தொகை ரூ.**6,97,67,414/–** ஆகும். இந்த செயற்குறிப்பில் குறிப்பிட்டுள்ள தோராய மதிப்பீட தொகை ரூ.**1,00,76,311/–**ஆனது **4** ஆண்டு இயக்குதல் மற்றம் பராமரிப்பு பணிகளுக்காக மொத்த தொகையில் **14** சதவீதம் மட்டுமே ஆகும். இத்தொகை மொத்த ஒப்பத்தொகையில் **25** சதவீதம் குறைவானதாகவே உள்ளதால் தமிழ் நாடு அரசு ஒளிமறைவில்லா ஒப்ப விதியின்படி ஏற்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இயக்குதல் செலவீனத்தினை கணக்கு எண்.**230–80–03–00**லும், பராமரிப்பு செலவீனத்தினை கணக்கு எண்.**230–20–14–02**லும் சம்பந்தப்பட்ட வட்டார அலுவலகத்தில் இயந்திர பொறியியல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

திருவாளர்கள் Antony Motors Pvt. Ltd. நிறுவனத்தாரிடம் **4** ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்யப்பட்ட **14** கனமீட்டர் கொள்ளவு கொண்ட **43** காம்பாக்டர் வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடையும் தருவாயில், இவ்வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி **31.12.2016** வரை கால நீட்டிப்பு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

**01.** இந்த **43** காம்பேக்டர் வாகனங்களை கொண்டு **2**வது ஷுப்ட்டாக இரவு நேரத்தில் துப்புரவு பணியில் ஈடுத்தவும்,

**02.** பணி ஆணையின்படி இயக்குதல் பணிக்கென **4**வது ஆண்டில் வழங்கப்பட்ட தொகையான ஒரு ஷுப்ட்டுக்கு (**2** நடை) ரூ.**1,186.30** வீதம், கால நீட்டிப்பு செய்யப்பட்ட நாளான **31.12.2016** வரை ரூ.**86,14,910.6/–** மதிப்பீட்டில் மேற்கொள்ளவும்,

**03.** பணி ஆணையின்படி பராமரிப்பு பணிக்கென **4**வது ஆண்டில் வழங்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.**400/–** வீதம், கால நீட்டிப்பு செய்யப்பட்ட நாளான **31.12.2016** வரை ரூ.**14,52,400/–** மதிப்பீட்டில் மேற்கொள்ளவும்,

**04.** இயக்குதல் செலவீனத்தினை கணக்கு எண்.**230–80–03–00**லும், பராமரிப்பு செலவீனத்தினை கணக்கு எண்.**230–20–14–02**லும் சம்பந்தப்பட்ட வட்டார அலுவலகத்தில் இயந்திர பொறியியல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட **1** முதல் **4** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் **16.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**234/2016**ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் **17.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**249/2016**ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/4299/2012**
**ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.461/2016** **பொருள் எண்.33**

**இயந்திர பொறியியல் துறை – கடந்த 2011ம் ஆண்டு சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தும் பணிக்காக 10 மண்டலங்களில் இருந்து 15 மண்டலங்களாகப்பட்டதால் – 6 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட சிறிய வகை காம்பெக்டாகள் வாங்க ஒப்பம் கோரப்பட்டு – குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள் T.P.S. Infra Structure Ltd. நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு – 45 வாகனங்கள் 4 ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்யப்பட்டது – வாகனங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி 4 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் உள்ளது – இந்த வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி டிசம்பர்–2016 வரை நீட்டிப்பு செய்ய அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சியில் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதால் 2011ஆம் ஆண்டு ஏற்கனவே இருந்த 10 மண்டலங்கள் 15 மண்டலங்களாக பிரிக்கப்பட்டது. விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் தரமான துப்ரபவு பணியை மேற்கொள்ள வேண்டி இயந்திரப் பொறியியல் துறை மூலமாக குப்பைகளை அகற்றுவதற்காக 45 எண்ணிக்கையிலான 6 கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட சிறிய வகை காம்பாக்டர் வாகனங்கள் கொள்முதல் செய்ய ஒப்பம் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள் T.P.S. Infra Structure Ltd. நிறுவனத்திடமிருந்து கடந்த ஆகஸ்ட்டு–2012 முதல் டிசம்பர்–2012 வரை கொள்முதல் செய்யப்பட்டு, துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இந்த வாகனங்கள் மண்டலம்–1,2,4,5,7,8,11,12,14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களில் துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்ட நாள் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலமான நான்கு ஆண்டுகள் முடிவுறும் நாள் குறித்த விவரங்கள் கீழ் வருமாறு.

| வ. எண். | ஒப்படைக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | வாகனம் ஒப்படைக்கப்பட்ட நாள் | ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து 4 ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடையும் நாள் |
|---|---|---|---|
| 01. | 6 | 13.08.2012 | 13.08.2016 |
| 02. | 4 | 24.08.2012 | 24.08.2016 |
| 03. | 4 | 03.09.2012 | 03.09.2016 |
| 04. | 4 | 07.11.2012 | 07.11.2016 |
| 05. | 4 | 16.11.2012 | 16.11.2016 |
| 06. | 4 | 16.11.2012 | 16.11.2016 |
| 07. | 2 | 23.11.2012 | 23.11.2016 |
| 08. | 2 | 30.11.2012 | 30.11.2016 |
| 09. | 1 | 05.12.2012 | 05.12.2016 |
| 10. | 3 | 06.12.2012 | 06.12.2016 |
| 11. | 2 | 10.12.2012 | 10.12.2016 |
| 12. | 2 | 11.12.2012 | 11.12.2016 |
| 13. | 1 | 13.12.2012 | 13.12.2016 |
| 14. | 2 | 19.12.2012 | 19.12.2016 |
| 15. | 1 | 20.12.2012 | 20.12.2016 |
| 16. | 2 | 24.12.2012 | 24.12.2016 |
| 17. | 1 | 19.01.2013 | 19.01.2017 |

மேற்கண்ட 45 காம்பேக்டர் வாகனங்கள் ஹைட்ராலிக் உபகரணங்கள் பொருத்தப்பட்ட சிறப்பு திறன் கொண்ட வாகனங்கள் ஆகும். இந்த வாகனங்களை பராமரிக்க ஹைட்ராலிக் உபகரணங்கள் பற்றிய தொழில் திறன் கொண்ட பழுதாளர்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் மற்றும் இந்த வாகனத்தினை இயக்குவதற்கு போதுமான ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால், இந்த வாகனங்களை இயக்கி பராமரிக்க ஒப்பந்தாரர் நியமனம் செய்ய

வேண்டியுள்ளது. தற்போது உள்ளாட்சி தேர்தல் நடைபெற இருப்பதாலும் மற்றும் பருவ மழையை எதிர் நோக்கி இருப்பதாலும், உடனே புதிய ஒப்பந்தாரர் நியமனம் செய்ய இயலாத நிலை உள்ளது.

இவ்வாறு 45 வாகனங்கள் வெவ்வேறு தினங்களில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடைகிறது. இதனால் இந்நிறுவனத்தின் ஒப்ப காலம் முடிவடையும் போது அனைத்து வாகனத்தையும் ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்ள இயலாது மற்றும் 43 வாகனத்திற்கும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கென ஒரே நேரத்தில் புதிய ஒப்பம் கோர இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது.

இத்தருவாயில் திருவாளர்கள் T.P.S. Infra Structure Ltd. நிறுவனதார் தனக்கு வழங்கப்பட்ட பணி ஆணையின்படி, 43 காம்பாக்டர் வாகனங்களுக்கு 4 ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடையும் தருவாயில் அனைத்து வாகனங்களுக்கும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை 31.12.2016 வரை தற்போது 4ம் ஆண்டிற்கான விலை புள்ளியில் பணி செய்திட பணி நீட்டிப்பு ஆணை வழங்குமாறு கடிதத்தின் மூலம் கோரியுள்ளார். தற்போது இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான 4வது ஆண்டிற்கான விலைப்புள்ளி கீழ்வருமாறு.

| இயக்குதல் பணி | 4வது வருடம் / ஒரு ஷிப்ட்டு (3 நடை) | பராமரிப்பு பணி | 4வது வருடம் / நாள் ஒன்றுக்கு |
|---|---|---|---|
| | ரூ.1000/– | | ரூ.400/– |

தமிழ் நாடு அரசு ஒளிமறைவில்லா ஒப்ப விதியில் 14 பிரிவு 9ல் ஒப்பந்த பணியில் 25 சதவீதம் நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பேருந்து சாலைகளில் பகல் நேரங்களில் துப்புரவு பணி மேற்கொள்ளும் போது போக்குவரத்த நெரில் அதிகம் எற்படுவதால், மேற்கண்ட 45 காம்பேக்டர் வாகனங்களை கொண்டு 2வது ஷிப்ட்டாக இரவு நேரத்தில் துப்புரவு பணி ஈடு படுத்தலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

45 காம்பேக்டர் வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்காக 31.12.2016 வரை நீட்டிப்பு செய்வதனால் ஏற்படும் செலவீனம் ரூ.68,16,000/– என கணக்கிடப்படுகிறது. மன்றத்தீர்மானம் எண்.56/2012 நாள்:22.02.2012ல் 45 வாகனங்களுக்க்கான 4வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான மொத்த தொகை ரூ.7,39,12,500/– ஆகும். இந்த செயற்குறிப்பில் குறிப்பிட்டுள்ள தோராய மதிப்பீட தொகை ரூ.68,16,000/–ஆனது 4 ஆண்டு இயக்குதல் மற்றம் பராமரிப்பு பணிகளுக்காக மொத்த தொகையில் 9.22 சதவீதம் மட்டுமே ஆகும். இத்தொகை மொத்த ஒப்பத்தொகையில் 25 சதவீதம் குறைவானதாகவே உள்ளதால் தமிழ் நாடு அரசு ஒளிமறைவில்லா ஒப்ப விதியின்படி ஏற்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இயக்குதல் செலவீனத்தினை கணக்கு எண்.230–80–03–00லும், பராமரிப்பு செலவீனத்தினை கணக்கு எண்.230–20–14–02லும் சம்பந்தப்பட்ட வட்டார அலுவலகத்தில் இயந்திர பொறியியல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

திருவாளர்கள் T.P.S. Infra Structure Ltd. நிறுவனத்தாரிடம் 4 ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்யப்பட்ட 6 கனமீட்டர் கொள்ளவு கொண்ட 45 காம்பாக்டர் வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடையும் தருவாயில், இவ்வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி 31.12.2016 வரை கால நீட்டிப்பு செய்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

01. இந்த 45 காம்பேக்டர் வாகனங்களை கொண்டு 2வது ஷிப்ட்டாக இரவு நேரத்தில் துப்புரவு பணியில் ஈடுத்தவும்,
02. பணி ஆணையின்படி இயக்குதல் பணிக்கென 4வது ஆண்டில் வழங்கப்பட்ட தொகையான ஒரு ஷிப்டுக்கு (3 நடை) ரூ.1,000/–வீதம் கால நீட்டிப்பு செய்யப்பட்ட நாளான 31.12.2016 வரை ரூ.56,80,000/– மதிப்பீட்டிற்கும்,
03. பணி ஆணையின்படி பராமரிப்பு பணிக்கென 4வது ஆண்டில் வழங்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.400/–வீதம் கால நீட்டிப்பு செய்யப்பட்ட நாளான 31.12.2016 வரை ரூ.11,36,000/– மதிப்பீட்டிற்கும்,
04. இயக்குதல் செலவீனத்தினை கணக்கு எண்.230–80–03–00லும், பராமரிப்பு செலவீனத்தினை கணக்கு எண்.230–20–14–02லும் சம்பந்தப்பட்ட வட்டார

அலுவலகத்தில் இயந்திர பொறியியல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட **1** முதல் **4** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் **16.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**235/2016**ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் **17.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**250/2016**ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>இ.பொ.து.ந.க.எண்.எம்1/4302/2011</u>**
**<u>ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்.462/2016** **பொருள் எண்.34**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி – இயந்திர பொறியியல் துறை – கடந்த 2011ம் ஆண்டு சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தும் பணிக்காக 10 மண்டலங்களில் இருந்து 15 மண்டலங்களாகப்பட்டதால் – சிறிய வகை லோடர்கள் 27 எண்ணிக்கையில் நான்கு வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய ஒப்பம் கோரப்பட்டு – குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள் Doosan Infracore India Pvt. Ltd. நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு – 27 எண்ணிக்கையில் சிறிய வகை லோடர்கள் 4 ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்யப்பட்டது – வாகனங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி 4 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் உள்ளது – இந்த வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி டிசம்பர்–2016 வரை நீட்டிப்பு செய்ய அனுமதி</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதால் ஏற்கனவே இருந்த 10 மண்டலங்கள் 15 மண்டலங்களாக பிரிக்கப்பட்டது. மன்றத் தீர்மானத்தின்படி 27 எண்ணிக்கையில் சிறிய வகை லோடர்கள் வாங்க ஒப்பம் கோரப்பட்டது. குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள் Doosan Infracore India Pvt. Ltd. நிறுவனத்திற்கு வாகனங்கள் கொள்முதல் பணி ஆணை வழங்கப்பட்டு, பணி ஆணையினை நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டது. திருத்திய பணி ஆணை வழங்கப்பட்டு, திருவாளர்கள் Doosan Infracore India Pvt. Ltd. நிறுவனத்திடமிருந்து கடந்த ஆகஸ்ட்டு–2012 முதல் டிசம்பர்–2012 வரை கொள்முதல் செய்யப்பட்டு, தூறநணுய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இந்த வாகனங்கள் மண்டலம்–1,2,4,5,6,7,8,9,10,11,12,14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களில் தூய்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்ட நாள் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலமான நான்கு ஆண்டுகள் முடிவறும் நாள் குறித்த விவரங்கள் கீழ் வருமாறு.

| வ. எண். | ஒப்படைக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | வாகனம் ஒப்படைக்கப்பட்ட நாள் | ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து 4 ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடையும் நாள் |
|---|---|---|---|
| 1 | 3 | 7.9.2012 | 7.9.2016 |
| 2 | 3 | 8.9.2012 | 8.9.2016 |
| 3 | 2 | 10.9.2012 | 10.9.2016 |
| 4 | 1 | 13.9.2012 | 13.9.2016 |
| 5 | 2 | 14.9.2102 | 14.9.2106 |
| 6 | 1 | 15.9.2012 | 15.9.2016 |
| 7 | 4 | 17.9.2012 | 17.9.2016 |
| 8 | 1 | 18.9.2012 | 18.9.2016 |
| 9 | 1 | 21.9.2012 | 21.9.2016 |
| 10 | 2 | 24.9.2012 | 24.9.2016 |
| 11 | 2 | 25.9.2012 | 25.9.2016 |
| 12 | 1 | 28.9.2012 | 28.9.2016 |
| 13 | 1 | 11.10.2012 | 11.10.2016 |
| 14 | 1 | 15.10.2012 | 15.10.2016 |
| 15 | 1 | 7.11.2012 | 7.11.2016 |
| 16 | 1 | 1.11.2012 | 1.11.2016 |

மேற்கண்ட 27 சிறிய வகை லோடர்கள் வாகனங்கள் ஹைட்ராலிக் உபகரணங்கள் பொருத்தப்பட்ட சிறப்பு திறன் கொண்ட வாகனங்கள் ஆகும். இந்த வாகனங்களை பராமரிக்க ஹைட்ராலிக் உபகரணங்கள் பற்றிய தொழில் திறன் கொண்ட பழுதாளர்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் மற்றும் இந்த வாகனத்தினை இயக்குவதற்கு போதுமான ஓட்டுநர்கள்

இல்லாத காரணத்தினால், இந்த வாகனங்களை இயக்கி பராமரிக்க ஒப்பந்தாரர் நியமனம் செய்ய வேண்டியுள்ளது. தற்போது உள்ளாட்சி தேர்தல் நடைபெற இருப்பதாலும் மற்றும் பருவ மழையை எதிர் நோக்கி இருப்பதாலும், உடனே புதிய ஒப்பந்தாரர் நியமனம் செய்ய இயலாத நிலை உள்ளது.

இவ்வாறு 27 சிறிய வகை லோடர்கள் வெவ்வேறு தினங்களில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடைகிறது. இதனால் இந்நிறுவனத்தின் ஒப்ப காலம் முடிவடையும் போது அனைத்து வாகனத்தையும் வெவ்வேறு தேதிகளில் பெற்றுக் கொள்வது கடினமாகும் மற்றும் 27 சிறிய வகை லோடர்களுக்கும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கென ஒரே நேரத்தில் புதிய ஒப்பம் கோருவது எளியதாக இருக்கும்.

இத்தருவாயில் திருவாளர்கள் Doosan Infracore India Pvt. Ltd. நிறுவனத்தார் தனக்கு வழங்கப்பட்ட பணி ஆணையின்படி, 27 சிறிய வகை லோடர்கள் 4 ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடையும் தருவாயில் அனைத்து வாகனங்களுக்கும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை 31.12.2016 வரை தற்போது 4ம் ஆண்டிற்கான விலை புள்ளியில் பணி செய்திட பணி நீட்டிப்பு ஆணை வழங்குமாறு கடிதத்தின் மூலம் கோரியுள்ளார். தற்போது இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான 4வது ஆண்டிற்கான விலைப்புள்ளி கீழ்வருமாறு.

| **இயக்குதல் பணி** | நான்காது வருடத்தில் நாளொன்றுக்கு ஒரு ஷஃப்ட்டுக்கு (8 மணி நேரத்திற்கு) | **பராமரிப்பு பணி** | நான்காது வருடத்தில் 1800 மணி நேரத்திற்கு மேல் இயக்கப்படும் போது பராமரிப்பு பணிக்கான தொகை (நாளொன்றுக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.364/– வீதம் 8 மணி நேரத்திற்கு) |
|---|---|---|---|
| | ரூ.929,78/– | | ரூ.2,912/– |

தமிழ் நாடு அரசு ஒளிமறைவில்லா ஒப்ப விதியில் 14 பிரிவு 9ல் ஒப்பந்த பணியில் 25 சதவீதம் நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

27 சிறிய வகை லோடர்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்காக 31.12.2016 வரை நீட்டிப்பு செய்வதனால் ஏற்படும் செலவீனம் ரூ.1,28,54,582.64/– என கணக்கிடப்படுகிறது. இத்தொகை மொத்த ஒப்பத்தொகையில் 25 சதவீதம் குறைவானதாகவே உள்ளதால் தமிழ் நாடு அரசு ஒளிமறைவில்லா ஒப்ப விதியின்படி ஏற்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இயக்குதல் செலவீனத்தினை கணக்கு எண்.230–80–03–00லும், பராமரிப்பு செலவீனத்தினை கணக்கு எண்.230–20–14–02லும் சம்பந்தப்பட்ட வட்டார அலுவலகத்தில் இயந்திர பொறியியல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

01. திருவாளர்கள் Doosan Infracore India Pvt. Ltd. நிறுவனத்தாரிடம் 4 ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்யப்பட்ட 27 சிறிய வகை லோடர் வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி முடிவடையும் தருவாயில், இவ்வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி 31.12.2016 வரை கால நீட்டிப்பு செய்து வழங்கவும்,
02. பணி ஆணையின்படி இயக்குதல் பணிக்கென 4வது ஆண்டில் வழங்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ஒரு ஷஃப்ட்டுக்கு (8 மணி நேரத்திற்கு) ரூ.929.78/–வீதம் கால நீட்டிப்பு செய்யப்பட்ட நாளான 31.12.2016 வரை ரூ.50,09,654.64/– மதிப்பீட்டில் மேற்கொள்ளவும்,
03. பணி ஆணையின்படி பராமரிப்பு பணிக்கென நான்காது வருடத்தில் 1800 மணி நேரத்திற்கு மேல் இயக்கப்படும் போது பராமரிப்பு பணிக்கான தொகை (நாளொன்றுக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.364/– வீதம் 8 மணி நேரத்திற்கு) ரூ.2,912/–வீதம் கால நீட்டிப்பு செய்யப்பட்ட நாளான 31.12.2016 வரை ரூ.78,44,928/– மதிப்பீட்டில் மேற்கொள்ளவும்,
04. இயக்குதல் செலவீனத்தினை கணக்கு எண்.230–80–03–00லும், பராமரிப்பு செலவீனத்தினை கணக்கு எண்.230–20–14–02லும் சம்பந்தப்பட்ட வட்டார அலுவலகத்தில் இயந்திர பொறியியல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட **1** முதல் **4** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் **16.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**236/2016**ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் **17.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**251/2016**ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2217/2016**
**ஆணையர் அவர்களின் 17.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.463/2016** **பொருள் எண்.35**

**மழைநீர் வடிகால் துறை – மண்டலம் –8 –2015–16–ல் இயற்கை சீற்றம் காரணமாக பெரிய அளவில் பாதிக்கப்பட்ட பகுதியான வார்டு–94 மற்றும் 95ல் உள்ள வில்லிவாக்கம் சிட்கோ நகர் 2வது மெயின்ரோடு மற்றும் சிட்கோ இன்ட்ஸ்டிரியல் B-செக்டர் பகுதி –சிட்கோ நகர் 2வது மெயின்ரோடு (மசூதி) முதல் மயான பூமி மதில் சுவர் வரை உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகால்வாயை இடித்து விட்டு புதியதாக 1500x1500 மிமீ அளவில் கட்டும் பணியினை ரூ.1,64,74,000/–க்கு திருவாள்கள்.தாமஸ் அய்யாதுரை இன்ப்ரா ஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிட்டெட் அவர்களுக்கு வழங்க ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பணியாணை வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி**

1. பணியின் விவரம் :

| வ. எண் | மண்டலம் / வார்டு | பணியின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1. | 8/94 மற்றும் 95 | மண்டலம்–8 – 2015–16–ல் இயற்கை சீற்றம் காரணமாக பெரியளவில் பாதிக்கப்பட்ட பகுதியான வார்டு–94 மற்றும் 95ல் உள்ள வில்லிவாக்கம் சிட்கோ நகர் 2வது மெயின்ரோடு மற்றும் சிட்கோ இன்ட்ஸ்டிரியல் B-செக்டர் பகுதி–சிட்கோ நகர் 2வது மெயின்ரோடு (மசூதி) முதல் மயான பூமி மதில் சுவர் வரை உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகால்வாயை இடித்து விட்டு புதியதாக 1500x1500 மி.மீ அளவில் கட்டும் பணி | பழுதடைந்த மழைநீர் வடிகால் வாயை இடித்து விட்டு புதியதாக 1500x1500 மி.மீ அளவில் கட்டும் பணி | 400 மீ | ரூ.1,64,74,000/– |

2. மதிப்பீட்டின் எண் / குழுவின் மன்றத்தின் தீர்மான எண் : நிலைக்குழு (பணிகள்) (ம) நிலைக்குழு (வ.வி(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ஆணையர் அவர்களின் ஒப்புதல்.
3. திட்ட குறியீட்டு எண் : பின்னர் பெறப்படும்
4. மதிப்பீட்டின் தொகை
   - அ) பணியின் செலவீனம் : ரூ. 1,40,80,792.93
   - ஆ) மேற்பார்வை செலவினம் : ரூ. 14,08,079.29
   - இ) சிறு மேற்பார்வை செலவு : ரூ. 3,52,019.82
   - ஈ) கட்டிட தொழிலாளர் செலவு : ரூ. 1,40,807.93
   - ஈ) பிற துறையினரின் வழித்தடங்களை மாற்றி அமைக்க : ரூ. 1,40,807.93
   - எ) மற்ற எதிர்பாரா செலவு : ரூ. 3,51,492.10

   ————————

   மொத்தம் : ரூ. 1,64,74,000.00

   ————————
5. எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் :
6. ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட நாள் : 25.07.2016
7. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான

கடைசி நாள் : 25.07.2016

8. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில், உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் : தலைமை பொறியாளர் (மநீவது) (ம) சி.தி அவர்களின் அனுமதி நாள்.11.07.2016

9. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன : 3

10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன : 2

11. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்:-

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் (திரு / திருவாளர்கள்) | பணியின் அலுவலக மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | 2014 –2015 அலுவலக விலை விகிதம் விழுக்காடு அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர். தாமஸ் அய்யா துரை இன்ப்ரா ஸ்ட்ரக்ச்சர் பிரைவேட் லிமிடெட் | ரூ.1,40,80,792.93 | ரூ.1,75,09,020.00 | (+) 24.35% அதிகம் |
| 2 | திருவாளர்.ஜீனிதா கன்ஸ்டரக்சன்ஸ் | ரூ.1,40,80,792.93 | ரூ.1,83,08,887.64 | (+) 30.03% அதிகம் |

12 குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : 05.08.2016 மற்றும் 06.08.2016 ஆம் நாளிட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரர் தனது விலை பட்டியலிருந்து குறைத்து ரூ. 1,45,72,329.04 மற்றும் ரூ.1,44,89,138.24 என்ற தொகைக்கு பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.

13. இறுதி ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் : (+) 2.90% அதிகம்

14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை பதிவு நாள் : முதல் வகுப்பு

15. முன்வைப்புத் தொகை.
செலுத்தப்பட்ட விவரம் : ரூ.1,65,000
டி.டி.எண்.047222/நாள்.20.07.2016
பாங்க் ஆப் இந்தியா கொடுங்கையூர் சென்னை

16. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? : ஆம்
அ) வரவு செலவுத்திட்ட தலைப்பு : மழைநீர் வடிகால் துறை மூலதன நிதி 2015 – 2016

17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 180 நாட்கள்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்பத்தில் 3 ஒப்பங்கள் பெறப்பட்டன. இந்த 3 ஒப்பங்களும் தொழில்நுட்ப மதிப்பீடு செய்யப்பட்டதில் திருவாளர்கள். சிவராம் அண்ட் கம்பெனி தேர்வு பெறவில்லை. மற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலை கோரியுள்ள ஒப்பந்ததாரரான திருவாளர். தாமஸ் அய்யா துரை இன்ப்ரா ஸ்ட்ரக்ச்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.1,75,09,020.00 ஆகும். 2015–2016 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,40,80,792.93 உடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை (+) 24.35% அதிகமாகும். எனவே, 05.08.2016 மற்றும் 06.08.2016 அன்று இந்த ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர்

அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ. **1,44,89,138.24,** இது **2015–16**ஆம் ஆண்டு அலுவலக பணி மதிப்பீட்டினை விட (+) **2.90%** அதிகம் ஆகும். இது சந்தை விலையை விட **(–) 2.05%** குறைவாகும்.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர். தாமஸ் அய்யா துரை இன்ப்ரா ஸ்ட்ரக்ச்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்ப விலை **2015 – 2016**ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (+) **2.90%** அதிகம். இருப்பினும் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் இத்தொகை **(–) 2.05%** குறைவாக இருப்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர். தாமஸ் அய்யா துரை இன்ப்ரா ஸ்ட்ரக்ச்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ரூ. **1,44,89,138.24**க்கு வழங்குவதற்கு ஒப்பந்தபுள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **(2)**ன்படி ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழு பரிந்துரை செய்துள்ளது.

இது குறித்து இங்கு சமர்ப்பிக்கப்படுவதாவது, வருகின்ற மழைகாலத்திற்குள் இந்த பணியினை முடிக்க வேண்டிய அவசிய நிலை இருந்ததால், மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, ஒப்பங்கள் கோரப்பட்டு திருவாளர். தாமஸ் அய்யா துரை இன்ப்ரா ஸ்ட்ரக்ச்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு, மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி, இப்பணிக்கான பணியாணை வழங்கப்பட்டது.

எனவே, **2015–16**ல் மண்டலம்–**8**ல் இயற்கை சீற்றம் காரணமாக பெரியளவில் பாதிக்கப்பட்ட பகுதியான வார்டு–**94** மற்றும் **95**ல் உள்ள வில்லிவாக்கம் சிட்கோ நகர் **2**வது மெயின்ரோடு மற்றும் சிட்கோ இன்ட்ஸ்டிரியல் B-செக்டர் பகுதி–சிட்கோ நகர் **2**வது மெயின்ரோடு (மசூதி) முதல் மயான பூமி மதில் சுவர் வரை உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகால்வாயை இடித்து விட்டு புதியதாக **1500x1500** மி.மீ அளவில் கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்ட ரூ.**1,64,74,000.00** க்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதியும் மற்றும் இப்பணியினை திருவாளர். தாமஸ் அய்யா துரை இன்ப்ரா ஸ்ட்ரக்ச்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ரூ. **1,44,89,138.24**க்கு வழங்கியமைக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் **16.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**238/2016**ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் **17.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**254/2016**ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.9.ந.க.எண்.இ1/12725/2015**
**ஆணையர் அவர்களின் 16.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.464/2016** **பொருள் எண்.36**

**மண்டலம்–9, வார்டு –125 காரணீஸ்வரர் பகோடா தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள சென்னை ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, வார்டு–125, காரணீஸ்வரர் பகோடா தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் அபாயகரமாக உள்ள சென்னை ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தின் முதல் தளத்தை உயர்நீதி மன்ற உத்தரவின்படி (உயர்நீதி மன்ற வழக்கு எண். W.P.No.11666/2014, நாள். 26.04.2014) இடித்து அகற்ற 16.10.2015 நாளிட்ட உதவி கல்வி அலுவலர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே, காரணீஸ்வரர் பகோடா தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் அபாயகரமாக உள்ள சென்னை ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தின் முதல் தளத்தை மாணவ மாணவிகளின் நலன் கருதி இடித்து அகற்ற வேண்டியுள்ளது.

மேலும், 15.07.2016 நாளிட்ட கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கடிதத்தில் சென்னை ஆரம்ப பள்ளி கட்டடத்தின் முதல் தளத்தை இடிப்பதுடன், மழை வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்ற காரணிகளால் பாதிப்புக்குள்ளாகும் தரைதளத்தையும் இடிக்க மேல் நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவித்துள்ளார்.

இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | வார்டு எண்–125 | மண்டலம்–9 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–9, வார்டு–125, காரணீஸ்வரர் பகோடா தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் அபாயகரமாக உள்ள சென்னை ஆரம்பப் பள்ளிக் கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1969 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரை தளம் –250.40 ச.மீ<br>முதல் தளம்–250.40 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 2250.ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.12,351/– ஆகும் |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடித்த பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | – |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம். | அபாயகரமாக பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்/ மண்டலம்–9 |
| 10 | வார்டு குழு பரிந்துரை தீர்மான எண்/ (ம) நாள் | 9 வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.1231/2015, நாள்.26.11.2015 |

எனவே, மண்டலம்–**9**, வார்டு–**125**, காரணீஸ்வரர் பகோடா தெருவில் பீமண்ண கார்டன் தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் அபாயகரமாக உள்ள சென்னை ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதிவேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் **12.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**15/2016**ன்படி நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் **16.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**243/2016**ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.13.ந.க.எண்.சி1/5203/2016**
**ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.465/2016** **பொருள் எண்.37**

**மண்டலம்–13, வார்டு–172 கோட்டூர், புது தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் உள்ள பழுதடைந்த கலையரங்கத்தை இடிப்பதற்கு அனுமதி.**

| வ. எண். | வார்டு எண்–172 | மண்டலம்–13 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–13, வார்டு–172ல் கோட்டூர் புது தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் உள்ள பழுதடைந்த கலையரங்கம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 2004–2005 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 24.36 ச.மீ (262 சதுர அடி) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 24.36 ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ஏதும் இல்லை. |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதியதாக பள்ளிக் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–13 |
| 10 | வார்டு குழு பரிந்துரை தீர்மான எண்/ நாள் | 13வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.220, நாள்.27.07.2016 |

எனவே, மண்டலம்–13, வார்டு–172ல் கோட்டூர் புது தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் உள்ள பழுதடைந்த கலையரங்கத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் 12.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.14/2016ன்படி நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 16.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.244/2016ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.13.ந.க.எண்.சி1/5279/2016**
**ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.466/2016** **பொருள் எண்.38**

**மண்டலம்–13, வார்டு–172 ஏரிக்கரை சாலையில் உள்ள பழுதடைந்த பொது கழிப்பிடத்தை இடிப்பதற்கு அனுமதி**

| வ. எண். | வார்டு எண்–172 | மண்டலம்–13 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–13, வார்டு–172ல் ஏரிக்கரை சாலையில் உள்ள பழுதடைந்த பொது கழிப்பிட கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1985 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 31.00 ச.மீ (333 சதுர அடி) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 31.00 ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ஏதும் இல்லை. |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | – |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–13 |
| 10 | வார்டு குழு பரிந்துரை தீர்மான எண்/நாள் | 13வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.153, நாள்.18.04.2013 |

எனவே, மண்டலம்–13, வார்டு–172ல் ஏரிக்கரை சாலையில் உள்ள பழுதடைந்த பொது கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு(சுகாதாரம்) வின் கூட்டம் 11.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.30/2016ன்படி நிலைக்குழு (சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 16.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.245/2016ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>வ.து.ந.க.எண்.ஜி4/6534/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 19.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்.467/2016** **பொருள் எண்.39**

**<u>வருவாய் துறை – வாகன நிறுத்தும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு – வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்திட மின் ஒப்ப முறையில் ஒப்பம் கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது – ஒப்பந்தப் புள்ளி எவரும் வழங்கவில்லை – மறு ஒப்பந்தம் கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருதல் – அது நாள் வரை தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு கால நீட்டிப்பு வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாகனம் நிறுத்தம் செய்திட ஏதுவான **186** இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அவை முறையே வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு மின் ஒப்ப முறையில் ஒப்பம் கோருவதற்காக **29.01.2016** அன்று மாலை **3.00** மணி வரை ஒப்பம் பெறப்படும் என்றும், **29.01.2016** அன்று மாலை **3.30** மணிக்கு ஒப்பந்த புள்ளிகள் திறக்கப்படும் என்று தினசரி நாளேடுகள், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒப்பந்தப் புள்ளி செய்தி மலரில் வெளியிடப்பட்டது. அதன்படி **29.01.2016** அன்று மாலை **3.30** மணிக்கு ஒப்பந்தப் புள்ளி பெட்டி திறக்கப்பட்டதில் எவ்வித ஒப்பந்தப் புள்ளிகளும் பெறப்படவில்லை. மேலும் இணையதளத்தில் மின் ஒப்ப முறையில் ஒப்பம் ஒப்பம் கோரி எவரும் பதிவேற்றம் செய்யவில்லை. அதனை தொடர்ந்து மீண்டும் மறு மின் ஒப்பம் கோருவதற்கு **04.02.2016** நாளிட்ட ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று **09.03.2016** அன்று மாலை மின் ஒப்பம் கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தினசரி நாளேடுகள், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒப்பந்தப் புள்ளி செய்தி மலரில் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு சட்ட பேரவைக்கான தேர்தல் நாள் கடந்த **04.03.2016** அன்று தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டதால் தேர்தல் நடத்தை விதிகள் அன்று மாலை முதல் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்த காரணத்தினால் **09.03.2016** அன்று மாலை **3.30** மணிக்கு ஒப்பந்தம் திறக்கப்படாமல் தேர்தல் முடிவுற்ற நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் கடந்த **21.05.2016** அன்றுடன் முடிவுற்றதால் ஒப்பந்தப் புள்ளி பெட்டி திறக்கப்பட்டதில் எவ்வித ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படவில்லை. மேலும் இணையதளத்தில் மின் ஒப்ப முறையில் ஒப்பம் கோரி எவரும் பதிவேற்றம் செய்யப்படவில்லை, என தெரிவித்து மீண்டும் மறு ஒப்பம் கோருவதற்கு ஆணையர் அவர்களுக்கு குறிப்பு சமர்பிக்கப்பட்டதில் ஆணையர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க துணை ஆணையர்(வ(ம)நி) அவர்களின் மேற்குறிப்பில் வாகன நிறுத்தம் குறித்து தற்போது தலைமை பொறியாளர் (சிறப்பு திட்டங்கள்) மூலமாக ஜே.ஜே.எல் என்ற கலந்தாலோசகர் (Parking Management System) முறையில் தெரிவு செய்துள்ள இடங்களையும் கேட்டுப் பெற்று தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள **186** இடங்களுடன் சேர்த்து ஒப்பம் கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், தற்போது வசூலிக்கப்படும் வாகன நிறுத்தக் கட்டணம் தொகை மிகவும் குறைந்த அளவிலான தொகையே கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக வசூலிக்கப்பட்டு வருவதால் புதிய வாகன நிறுத்தக் கட்டணத்தினை நிர்ணயம் செய்து அரசின் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், தெரிவித்துள்ளார். அதன்பொருட்டு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், **04.02.2016** நாளிட்ட ஆணையர் அவர்களின் ஆணையின்படி மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு கடந்த **01.02.2016** முதல் **31.07.2016** வரை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தினர் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள ஆணை பெறப்பட்டது. அதற்கான காலம் வரும் **31.07.2016** அன்றுடன் முடிவடைய உள்ளதாலும், தெரிவிக்கப்பட்ட பணிகளை மேற்கொண்டு வாகன நிறுத்தும் இடங்களை முறைப்படுத்தி அதன்பின்னர் மின் ஒப்பம் கோருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள சிறிது கால அவகாசம் தேவைப்படுவதால், தற்போது வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் பணிகளை **(93** இடங்களில்**)** மேற்கொண்டுவரும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தினர் அப்பணிகளை வரும் **01.08.2016** முதல் **31.12.2016** வரை தொடர்ந்து வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும்

பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியுடன் கால நீட்டிப்பு செய்து ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ள கீழ்கண்ட இனங்களுக்கு ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

எனவே,

1) **31.01.2016** அன்றுடன் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் மேற்கொண்டுவந்த வாகன நிறுத்தக் கட்டண பணிக்கான ஒப்பந்தம் முடிவுற்றதால், தற்போது வாகன நிறுத்தக் கட்டணம் பணிகளை மேற்கொண்டு வரும் **93** இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணத்தினை இது நாள் வரை பின்பற்றி வந்த விதிமுறைகளின்படி பின்பற்றி வசூலிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு **01.02.2016** முதல் **31.07.2016** வரை மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு கால நீட்டிப்பு செய்து ஆணையர் அவர்களின் அனுமதி பெற்றதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டியும்,
2) வாகன நிறுத்தம் குறித்து தற்போது தலைமை பொறியாளர் (சிறப்பு திட்டங்கள்) மூலமாக ஜே.ஜே.எல் என்ற கலந்தாலோசகர் parking Management System முறையில் தெரிவு செய்துள்ள இடங்களையும் கேட்டுப் பெற்று தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள **186** இடங்களுடன் சேர்த்து ஒப்பம் கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், தற்போது வசூலிக்கப்படும் வாகன நிறுத்தக் கட்டணம் தொகை மிகவும் குறைந்த அளவிலான தொகையே கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக வசூலிக்கப்பட்டு வருவதால் புதிய வாகன நிறுத்தக் கட்டணத்தினை நிர்ணயம் செய்து மன்றத்தின் மூலமாக அரசின் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மறு மின் ஏல முயைில் ஒப்பந்தப்புள்ளி கோர சிறிது கால அவகாசம் தேவைபடுவதாலும், வரும் **31.07.2016** உடன் தமிழ்நாடு முன்னால் படைவீரர் கழகத்தினர் தற்போது **93** இடங்களில் மேற்கொண்டு வரும் வாகன நிறுத்தக் கட்டண வசூல் பணிக்கான ஒப்பந்த உடன்படிக்கை முடிவடைவதால், மேற்கண்ட வசூல் பணியில் சுணக்கம் ஏதும் ஏற்படாத வகையில் வரும் **01.08.2016** முதல் **31.12.2016** வரை மன்றத்தின் அனுமதியுடன் கால நீடிப்பு செய்திடவும்,

மேற்கண்ட **1** மற்றும் **2** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் **17.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**257/2016**ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**வ.இ.அ.(தெ).ந.க.எண்.எ10/33/2015**
**ஆணையர் அவர்களின் 12.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.468/2016** **பொருள் எண்.40**

**வட்டார அலுவலகம் (தெற்கு) – மதிப்பீடு–2015–16, மண்டலம்–15, கோட்டம்–198 – தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் திறந்தவெளி நிலத்தில் புதியதாக பூங்கா கட்டும் பணிக்கு மூலதன நிதியின் கீழ் 2014–15 ஆம் ஆண்டு விலைப்பட்டியளின் அடிப்படையில் இப்பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 1,08,00,000/–க்கு நிர்வாக அனுமதி.**

கீழ்குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 01. பணியின் பெயர் | : மண்டலம்–15, கோட்டம்–198 தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் திறந்தவெளி நிலத்தில் புதியதாக பூங்கா கட்டும் பணி |
| 02. பரிந்துரை செய்தவரின் விவரம் | : மாண்புமிகு மேயர் அவர்கள் |
| 03. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : பூங்காத்துறை வட்டார அலுவலகம்(தெற்கு) |
| 04. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி பெறப்பட்டதா ? | : பெறப்பட்டது |
| 05. தொழில்நுட்ப அனுமதி அளித்த அதிகாரி, செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி | : தலைமை பொறியாளர்(பொது) தொழில்நுட்ப அனுமதி எண். T.S.No.257/ 2015–16 நாள். 12.01.2015 |
| 06. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : 2014–15ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டது. |
| 07. மதிப்பீட்டின் தொகை | |
| (அ) பணியின் செலவினம் மட்டும் | : ரூ. 8595731.33 |
| (ஆ) மேலான மேற்பார்வை செலவு | : ரூ. 859573.13 |
| (இ) சிறு மேற்பார்வை செலவு | : ரூ. 214893.28 |
| (ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3% | :ரூ. 85957.31 |
| (உ) தரக்கட்டுபாடு | : ரூ. 85957.31 |
| (எ) மற்றைய எதிர்பாரா செலவு | : ரூ. 957887.64 |
| மொத்தம் | : ரூ. 1,08,00,000.00 |
| 08. ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு | : |
| 09. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | :– ஆம் |
| 10. மதிப்பீட்டிற்காக ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி | : பின்னர் பெறப்படும் |
| 11. ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : புதிய பணி |
| 12. புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளதா ? | : ஆம் |
| 13. நிதியின் மூலத்தன்மை | : மூலதன நிதி (பூங்காத்துறை) |
| 14. கணக்கு தலைப்பு | : 60–61–00 / 412–400–200 Others parks & Gardens |

இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி : ரூ. 1,08,00,000/–

இப்பணியானது பூங்காத்துறையின் மூலதன நிதியின் மூலம் நடைபெறுவதற்கும் பூங்கா துறைக்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து நிதி பெறப்படும்பொழுது மூலதன நிதிக்கு நேர் செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, மேற்கண்ட பணிக்கு 2014–15ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,08,00,000/– (ரூபாய் ஒரு கோடி எட்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன் படி நிலைக்குழு பணிகள் மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்புமற்றும்நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 16.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.240/2016ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 17.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.256/2016ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>க.து.ந.க.எண்.பி1/3093/2015</u>**
**<u>ஆணையர் அவர்களின் 19.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்.469/2016** **பொருள் எண்.41**

**<u>மண்டலம் 13, வார்டு– 179 சேவா நகரில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் சேமிப்புக்கிடங்கு தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் கட்டும் பணியினை ரத்து செய்ய அனுமதி</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடத்துறையின் மூலமாக சென்னை மாவட்டத்திற்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் சேமிப்புக்கிடங்கு தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் கட்டும் பணி வேளச்சேரி, கோட்டம் 179, மண்டலம் 13 கட்டுவதற்காக மதிப்பீடு ரூ.577.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு 05.01.2016 அன்று ஒப்பம் கோரப்பட்டது.

இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.பொன்குழலி அன்டு கோ அவர்கள் குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு 05.02.2016 அன்று பணி ஏற்பு ஆணை வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் பணியினை வேலை ஆரம்பிக்கும் பொழுது உள்ளூர் மக்களால் தங்களுக்கு விளையாட்டு மைதானம் தேவை என்ற காரணத்தினால் மேற்படி வேலை செய்யும் பணி தடுத்து நிறுத்தப்பட்டது. மேலும் 03.03.2016 முதல் தேர்தல் நடைமுறைகள் அமுலுக்கு வந்ததால் தொடர்ந்து பணியை மேற்கொள்ள இயலவில்லை.

கூடுதல் மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்கள் மூலம் இது சம்பந்தமாக துணை ஆணையர், காவல் துறை அவர்களுக்கு 03.03.2016 அன்று வேலை செய்வதற்கு பாதுகாப்பு கொடுக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டது.. காவல் துறையால் பாதுகாப்பு கொடுக்கப்பட்ட போதிலும் மேற்படி பணி ஆரம்பித்து செயல்படுத்த இயலவில்லை.

வட்டார துணை ஆணையர் (தெற்கு) மற்றும் பொறியாளர்கள் அவ்விடத்திற்கு 18.06.2016 அன்று சென்ற பொழுதும் பொதுமக்கள் மேற்படி காலியிடம் தங்களுக்கு விளையாட்டு மைதானமாக பயன்படுத்துவதற்கு அவசியம் தேவை என்பதை வலியுறுத்தி தெரிவித்தனர். பொது மக்களின் எதிர்ப்பை மீறி மேற்படி காலியிடத்தில் மின்னணு வாக்குபப்திவு இயந்திரம் சேமிப்பு கிடங்கு கட்டும் பணியை ஆரம்பிக்க இயலவில்லை.

பொதுமக்கள் காலி இடமாக வேண்டும் என கோரியதால் இப்பணியினை ரத்து செய்து வேறு இடத்தில் பணி மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்கள் அறிவுறுத்திவுள்ளார்கள்.

எனவே, மண்டலம்–13 கோட்டம்–179 சேவா நகர் 2வது தெரு வேளச்சேரியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் சேமிப்புக்கிடங்கு, தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட கட்டிடம் கட்டும் பணியை ரத்து செய்வதற்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 16.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.242/2016ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 17.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.259/2016ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/19772/2016**
**ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.470/2016** **பொருள் எண்.42**

**திரு.எல்.ஸ்ரீதரன், உதவி செயற்பொறியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதால் ஏற்கனவே வெளியிடப்பட்ட 2016–2017ம் ஆண்டு செயற்பொறியாளர் தெரிவு பட்டியலில் உரிய மூப்பு நிலையில் சேர்த்து கருத்தியலான பதவி உயர்வு வழங்கவும், திருத்திய தெரிவு பட்டியல் வெளியிட அனுமதி**

30.07.2016 நாளிட்ட மன்றத் தீர்மானத்தில், 01.04.2016ஐ மைய நாளாகக் கொண்டு 2016–2017 ஆம் ஆண்டிற்கான செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு தகுதிவாய்ந்த 14 உதவி செயற் பொறியாளர்களில் திரு.எல்.ஸ்ரீதரன் உதவி செயற்பொறியாளர் மீது குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு நிலுவையில் உள்ளதால், தற்போது தனியரின் பெயரை தவிர்த்து கீழ்காண் தெரிவுப்பட்டியலில் உள்ளவர்களுக்கு மன்றத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

| வ. எண். | உதவி செயற் பொறியாளரின் பெயர் (திருவாளர்கள்) | உதவி செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | அரசாணை (ப) எண்.177, நாள்.16.03.2015–ன்படி தனியர் உதவி செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 01 | வி.புவனேஷ்வரன் | 16.06.2003 | – |
| 02 | டி.வேலுச்சாமி | 16.12.2010 | **08.02.2010** |
| 03 | ஆர்.ஜெயக்குமார் | 16.12.2010 | **08.02.2010** |
| 04 | சி.சொக்கலிங்கம்பிள்ளை | 02.02.2011 | **08.02.2010** |
| 05 | எம்.பழனி | 02.02.2011 | **08.02.2010** |
| 06 | கே.கார்த்திகேயன் | 28.01.2011 | **08.02.2010** |
| 07 | எம்.முத்துக்கிருஷ்ணன் | 20.04.2011 | **08.02.2010** |
| 08 | வி.கண்ணையன் | 28.01.2011 | **08.02.2010** |
| 09 | ட்டி.பத்மநாபன் | 11.07.2011 | **08.02.2010** |
| 10 | எஸ்.குமாரசாமி | 24.02.2011 | **08.02.2010** |
| 11 | ஜி.ராதாகிருஷ்ணன் | 18.07.2011 | **08.02.2010** |
| 12 | பி.விஜய் அரவிந்த் | 18.07.2011 | **08.02.2010** |
| 13 | சி.திருநாவுக்கரசு | 23.05.2011 | **08.02.2010** |

12.08.2016 நாளிட்ட மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் கடிதத்தில் திரு.எல்.ஸ்ரீதரன் உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது விளக்கம் பெறப்பட்டு, இன்றைய தினத்தில் வாகனங்கள் அனைத்தும் தகுதிச் சான்றிதழுடன் செயல்பட்டுக் கொண்டிருப்பதாக உதவி செயற்பொறியாளர் சான்றிதழ் அளித்துள்ளதால், தனியரின் மீது வேறு எவ்வித ஒழுங்கு நடவடிக்கை குறிப்பு துணை ஆணையர் (மத்திய வட்டாரம்) அலுவலகத்தில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16.08.2016 நாளிட்ட தனியரின் கடிதத்தில், கடந்த 30.07.2016 அன்று நடந்த மன்றக் கூட்டத்தில் செயற்பொறியாளருக்கான பதவி உயர்வுக்கு படிக்கப்பட்ட பொருள் எண்.44 ன் மீது விவாதித்த போது 115 வது வார்டு மாமன்ற உறுப்பினர் தன் மீது குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், அதனடிப்படையில் தனது பெயரை தவிர்த்து செயற்பொறியாளர் தேர்வு பட்டியலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், மேலும் குற்றச்சாட்டு குறித்து தனக்கு இதுவரை எந்த குறிப்பானையும் கொடுக்கப்படவில்லை எனவும், தன் மீது வேறு எவ்வித ஒழுங்கு நடவடிக்கை குறிப்பு துணை ஆணையர் (மத்திய வட்டாரம்) அலுவலகத்தில் இல்லை என ம.வ.அ.ந.க.எண். அ6/000061/2015 நாள்.12.08.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், மேலும் தான் இதுவரை எந்தவிதமான குறைபாடின்றி உதவி செயற்பொறியாளராக 6 ஆண்டுகள் பணிபுரிந்து

வருவதாகவும், தான் ஓய்வு பெற இரண்டு வருடமே உள்ளதால், தனக்கு ஓய்வூதியத்தில் பாதிப்பு ஏற்படும் என்பதால், தகுதியான தனது பெயரை தேர்வுப் பட்டியலில் சேர்த்து ஆவண செய்யுமாறு கோரியுள்ளார்.

இதனடிப்படையில், **12.08.2016** நாளிட்ட திரு.எல்.ஸ்ரீதரன், உதவி செயற்பொறியாளர், மத்திய வட்டார அலுவலகம் அவர்கள் மீது இன்றைய நிலையில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லை எனக் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் மற்றும் பொதுத்துறையில் தனியர் மீது குற்றச்சாட்டுக்கள் இதுநாள் வரை ஏற்படுத்தாத நிலையிலும், தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் காலத்தில் தனியர் மீது எவ்வித குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தாத நிலையிலும், மேற்கண்ட **2016–17** ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.**2** திரு.டி.வேலுச்சாமி அவர்களுக்கு பின்னரும் வரிசை எண்.**3** திரு.ஆர்.ஜெயகுமார் அவர்களுக்கு முன்னரும் திரு.எல்.ஸ்ரீதரன் அவர்களின் பெயர் சேர்த்து பின்வருமாறு திருத்திய தெரிவுப்பட்டியல் அமைகிறது.

| வ. எண். | உதவி செயற் பொறியாளரின் பெயர் (திருவாளர்கள்) | உதவி செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | அரசாணை (ப) எண்.177, நாள்.16.03.2015–ன்படி தனியர் உதவி செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 01 | வி.புவனேஷ்வரன் | 16.06.2003 | – |
| 02 | டி.வேலுச்சாமி | 16.12.2010 | **08.02.2010** |
| 03 | எல்.ஸ்ரீதரன் | 20.12.2010 | **08.02.2010** |
| 04 | ஆர்.ஜெயக்குமார் | 16.12.2010 | **08.02.2010** |
| 05 | சி.சொக்கலிங்கம்பிள்ளை | 02.02.2011 | **08.02.2010** |
| 06 | எம்.பழனி | 02.02.2011 | **08.02.2010** |
| 07 | கே.கார்த்திகேயன் | 28.01.2011 | **08.02.2010** |
| 08 | எம்.முத்துக்கிருஷ்ணன் | 20.04.2011 | **08.02.2010** |
| 09 | வி.கண்ணையன் | 28.01.2011 | **08.02.2010** |
| 10 | ட்டி.பத்மநாபன் | 11.07.2011 | **08.02.2010** |
| 11 | எஸ்.குமாரசாமி | 24.02.2011 | **08.02.2010** |
| 12 | ஜி.ராதாகிருஷ்ணன் | 18.07.2011 | **08.02.2010** |
| 13 | பி.விஜய் அரவிந்த் | 18.07.2011 | **08.02.2010** |
| 14 | சி.திருநாவுக்கரசு | 23.05.2011 | **08.02.2010** |

எனவே,

1. **01.04.2016** ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள மேற்காண் **14** உதவி செயற்பொறியாளர்களை கொண்ட திருத்திய தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,
2. அடுத்து வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள/மைய நாளுக்கு பின்பு ஏற்படவுள்ள செயற்பொறியாளர் காலிப்பணியிடங்களை மேற்காண் தேர்ந்த பெயர்ப்பட்டியலிருந்து **ரூ.15600 – 39100** + **7600/–** தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட இனங்களின் மீது நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/23126/2013**
**ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.471/2016** **பொருள் எண்.43**

**கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு தகுதிவாய்ந்த நபர்கள் இல்லாத காரணத்தால் 2013–2014,2014–2015 மற்றும் 2015–2016 ஆகிய ஆண்டுகளுக்கு இன்மை பட்டியல் வெளியிட அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, கூடுதல் வருவாய் அலுவலர் பதவி வகுப்பு – IBன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியன மன்றம் பெற்றுள்ளது. இப்பதவி கூடுதல் வருவாய் அலுவலர் பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு.

| Name of the post/Scale of Pay | Method of Appointment | Qualification |
|---|---|---|
| **Additional Revenue Officer**<br><br>**(Scale of Pay Rs.15600-39100+Grade pay Rs.7600)**<br><br>**(Class-IB)** | By Promotion from Assistant Revenue Officer | 1. A Graduate of a Recognized University.<br>2. A pass in the Account Test for Subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by the Government as equivalent thereto.<br>3. A pass in the Revenue Test Parts I to III prescribed for the Tamil Nadu Revenue Subordinate Service or any other Revenue Test prescribed by the Government as equivalent thereto; and<br>4. A minimum experience of three years as Assistant Revenue Officer. |

இக்கோப்பின் மீது 2013ஆம் ஆண்டிலிருந்து மேல்நடவடிக்கை தொடர இயலாத நிலை இருந்ததால், நிர்வாக நலன்கருதி, கூடுதல் வருவாய் அலுவலர் 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016ஆம் ஆண்டுகளுக்கான தெரிவுப்பட்டியல்களை **“இன்மை பட்டியல்”** (NIL PANEL) ஆக வெளியிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>வ.து. ந.க.எண்.ஜி1/0494/2016</u>**

**<u>ஆணையர் அவர்களின் 16.08.2016 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்.472/2016** **பொருள் எண்.44**

**<u>பொது கணக்குக் குழு – 2011–12 – 54வது அறிக்கை – சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் – அரசுக்கு முன்மொழிவு அனுப்ப அனுமதி</u>**

பொது கணக்கு குழுவின் 2011–12 ஆம் ஆண்டிற்கான 54வது அறிக்கையில் (XIV சட்ட மன்றம்) 1999–2000 ஆம் ஆண்டின் பொது கணக்காயர் அறிக்கை பத்தி எண்.6.27ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

''சொத்துவரியை மாநகராட்சி மன்றமே நிர்ணயிக்கலாம் என்பதால், கட்டிடங்கள், நிலத்தின் ஆண்டு மதிப்பின் சதவீதத்தில், சொத்துவரி விதிப்பதற்கு, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டம் வகை செய்கிறது. கட்டிடங்கள், நிலத்தின் ஆண்டு மதிப்பில், 11.95 சதவீதம் ஒவ்வொரு அரையாண்டுக்கும் சொத்துவரி விதிக்கத் தக்கதாக இருந்தது. இத்துடன் சேர்த்து அனைத்து கட்டிடங்கள், உடமைகளாகப் பயன்படுத்தப்படுகின்ற அடுத்துள்ள வளாகங்களுக்கும் சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். சென்னை மாநகராட்சி சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி, ''கட்டிடம்'' என்பதில், குடியிருப்பதற்காக பயன்படுத்தப்படுகிற யாதொரு அமைப்பு யாதொரு பொருளை அல்லது பொருட்களை இருப்பு வைப்பதற்கான அல்லது திரட்டி வைப்பதற்கான கட்டமைப்பும் அடங்குகிறது.

56 பெட்ரோல் பங்குகள் குறித்து, சென்னை மாநகராட்சியில் சொத்துவரி மதிப்பீடு தொடர்பான பதிவுருக்களை ஆய்வு செய்ததில், ஆண்டு மதிப்பை கணக்கிடுவதற்காக, நிலப்பரப்பிற்காக மேலுள்ள கட்டிடத்தையும், காலி இடத்தையும் மட்டும் மாநகராட்சி கணக்கில் எடுத்துக் கொண்டது. டீசல் மற்றும் பெட்ரோலை இருப்பு வைப்பதற்காக பயன்படுத்துகிற உருக்குத் தொட்டிகளுடன் கூடிய நிலத்தடி கட்டுமான அமைப்பு மதிப்பீடு செய்யப்படவில்லை.

56 பெட்ரோல் பங்குகளுக்கான சொத்துவரியை குறைவாக மதிப்பீடு செய்ததற்காக குறைந்தபட்ச கொள்திறன் உள்ள இருப்பு வைப்பதற்கான தொட்டியை கணக்கில் எடுத்துக் கொண்டதில் (கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட ஆண்டினை சார்ந்து தேய்மானம் அளித்த பின்னர், உருக்குத் தொட்டிகளின் அங்காடி மதிப்பு), 2000, மார்ச் திங்கள் வரையில் முடிவடைந்த மூன்று அரையாண்டு கால அளவுக்கு, குறைந்தளவாக ரூ.29.97 இலட்சம் என்றும் கணக்கிடப்பட்டது.

நிலத்தடியில் அமைந்துள்ள யாதொரு கட்டுமான அமைப்புக்குள்ளும் நபர்கள் உட்செல்வதற்கான வழியில்லை என்பதால், அவை மதிப்பீடு செய்யத்தக்கதாக இல்லை என்றும் எனவே, இதில் குறைவாக மதிப்பீடு செய்யப்படவில்லை என்றும், 2000, ஆகஸ்ட்டில் அரசு தெரிவித்தது. இருப்பினும், ஏனையவற்றிற்கிடையே, கட்டிடம் என்பது யாதொரு பொருளை அல்லது சரக்கை இருப்பு வைப்பதற்குப் பயன்படுத்துகிற யொதொரு கட்டிட அமைப்பும் உட்பட்டது என சென்னை மாநகராட்சி சட்டத்தின் 3 ஆம் பிரிவில், கட்டிடத்திற்கு அளிக்கப்பட்ட வேறுபட்ட விளக்கத்திற்கு முரணாக உள்ளதால் இப்பதில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை.

துறை, தன் விளக்கக் குறிப்பில், கட்டுமான அமைப்பு என்ற விளக்கத்தின் வரம்பு எல்லைக்குள், நிலத்தடி கட்டுமான அமைப்பு வராத காரணத்தால் சட்டக்கருத்தின்படி, தணிக்கையில் சுட்டிக்காட்டியவாறு, நிலத்தடி கட்டுமான அமைப்பிற்கு சொத்துவரி மதிப்பீடு செய்யத் தேவையில்லை. 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின்படி. இது சொத்து வரி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய நிலப்பரப்பிற்கு மேல் அமைந்துள்ள கட்டிடம் அல்ல. எனவே நியாயமான வாடகை நிர்ணயம் செய்வதற்கு அத்தகைய கட்டமைப்பு கருதிப் பார்க்கத் தேவையில்லை என்று துறை தன் விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மாநகராட்சி ஆணையாளர் நேரில் விளக்கம் அளித்த போது, தணிக்கையின்படி பெட்ரோல் பங்குகளில் உள்ள பெட்ரோல் நிலத்தடி சேமிப்புத் தொட்டி மதிப்பீடு செய்யப்படவில்லை என்று சுட்டிக் காட்டினார். இச்சட்டத்தின் விளக்கத்திற்கிணங்க, நிலப்பரப்பிற்கு மேல் அமைந்துள்ள கட்டுமான அமைப்பு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். நிலத்தடிப் பகுதியில் உள்ள இருப்பு வைக்கும் இடத்தை மதிப்பீடு செய்வதற்கு இச்சட்டத்தில் நிதித்துரை ஏதுமில்லை. ஆயினும், பெட்ரோல் பங்குகளில் உள்ள நிலத்தடி பெட்ரோல் சேமிப்புத் தொட்டிகளை மதிப்பீடு செய்ய, இயலும் வகையில், திருத்தம் செய்யப்படும் என்று அரசு செயலாளர் தெரிவித்துள்ளார்''.

வருவாய் துறையில் அவ்வப்பொழுது சில வரைவு பணிகள் புதியதாக வருவாய் துறைக்கு ஒப்படைக்கப்படுகின்றது. அப்பணியினை முடிக்க வேண்டியுள்ளதால் வருவாய் துறையிலிருந்து இது சம்பந்தமான விதி திருத்தம் செய்வதற்கு அரசுக்கு முன்மொழிவு அனுப்ப தாமதம் ஏற்பட்டு விட்டது.

பெட்ரோல் நிலத்தடி சேமிப்பு தொட்டிகளுக்கு 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 100ன்படி மதிப்பீடு செய்து சொத்துவரி விதிக்க இயலாது. பொது கணக்கு குழுவின் அறிக்கையின்படி பெட்ரோல் நிலத்தடி சேமிப்பு கட்டடங்களுக்கு சொத்துவரி விதிக்க வேண்டுமாயின் கீழ்கண்டபடி சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 100 (1)ல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| Section | Existing | Amendment proposed to be included | Remarks |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 100. Method of assessment of property tax. | 1) Every building shall be assessed together with its site and other adjacent premises occupied as appurtenances thereto unless the owner of the building is a different person from the owner of such site or premises.<br>2) The annual value of lands and buildings shall be deemed to be the gross annual rent at which they may [at the time of assessment] reasonably be expected to let from month to month or from year to year [less a deduction, in the case of buildings, of ten per cent of that portion of such annual rent which is attributable to the buildings alone, a part from their sites and the adjacent lands occupied as an appurtenance thereto] and the said deduction shall be in lieu of all allowance for repairs or on any other account whatever:<br>Provided that----<br>[(a) in the case of---<br>(i) any Government or railway building ; or<br>(ii) any building of a class not ordinarily let the gross annual rent of which cannot in the opinion of the commissioner be estimated the annual value of the premises shall be deemed to be six percent of the total of the estimated market value of the land at the time of assessment and the estimated cost of erecting the building at such time after deducting for depreciation a reasonable amount which shall in no case be less than ten per centum of such cost, and] | In Section 100 of CCMC Act, 1919:- In clause (2), after sub clause (b), the following sub clause shall be inserted, namely:-<br><br>Provided that-<br>In the case of Petrol Bunk, the following shall be considered for making assessment of property tax:<br>1)the buildings used for petrol bunk,<br>2)the area of the structure constructed for sun shade and<br>3)the area of the structure used for storing of fuel. | Currently, the area of the building constructed on the ground is being assessed for property tax assessment. As discussed in the Public Accounts Committee meeting the draft amendment is proposed. |

| | | | |
|---|---|---|---|
| | (b) machinery [and furniture] shall be excluded from valuations under this section :<br>[Provided further that where the annual value of any land or building is attributable partly to the use of such land or building or any portion thereof for the display of any advertisement or advertisements and tax is levied under this Act in respect of such advertisement or advertisements, the annual value of such land or building for the purpose of assessing then property tax thereon shall be ascertained as if such land, building or portion is not used for the display of such advertisement or advertisements.]<br>[(3) The [State] Government shall have power to make rules regarding the manner in which the person or persons by whom and the intervals at which, the value of the land, the present cost of erecting the building and the amount to be deducted for depreciation, shall be estimated or revised in any case or class to cases to which clause (a) of the first proviso to sub-section (2) applies, and they may, by such rules, restrict or modify the application of the provisions contained in Schedule IV to such case or class of cases] | | |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் அரசு செயலர் அவர்களால் பொது கணக்கு குழுவால் தெரிவித்துள்ளவாறு, பெட்ரோல் நிலத்தடி சேமிப்பு தொட்டிகளுக்கு சொத்துவரி மதிப்பீடு செய்து வரி விதிக்க ஏதுவாக (Provided that- In the case of Petrol Bunk, the following shall be considered for making assessment of property tax: 1) the buildings used for petrol bunk, 2) the area of the structure constructed for sun shade and 3) the area of the structure used for storing of fuel) சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 பிரிவு 100 (2) (b) ற்கு அடுத்ததாக மேற்கண்ட சட்டப்பிரிவை கூடுதலாக சேர்த்து திருத்தம் வெளியிட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 17.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.260/2016ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.இ6/53738/2006**
**ஆணையர் அவர்களின் 17.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.473/2016** **பொருள் எண்.45**

**2006ம் ஆண்டு நியமனக்குழுவால் தண்டனை ரத்து செய்யப்பட்ட11 தீர்மானங்களை அரசு கடிதத்தின்படி ரத்து செய்து அரசிற்கு செயற் குறிப்பு அனுப்புவதற்கு அனுமதி**

**30.08.2006** மற்றும் **26.02.2015** நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள், சென்னை மாநகராட்சியில் கீழ்கண்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள் மீது இறுதி ஆணை வேண்டியும் மற்றும் மேல்முறையீட்டு மனுக்களின் மீது உரிய ஆணை வேண்டியும் நியமனக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது என்றும், அவற்றின் மீது சென்னை மாநகராட்சியில் அன்றைய மேயர் பதவி காலியாக இருந்ததால் மேயர் மற்றும் நியமனக்குழுவின் தலைவராகவும் பதவி பொறுப்பு வகித்த மதிப்பிற்குரிய அன்றைய துணை மேயர் அவர்கள் தனது கருத்தினை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

| பொருள் எண். மற்றும் விவரம் | அன்றைய துணை மேயர் அவர்களின் 18.08.2006 நாளிட்ட கருத்து |
|---|---|
| **பொருள் எண்.54**<br>திரு. பாஸ்கர், துப்புரவு பணியாளர், மண்டலம்–5 முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை. | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி எச்சரித்துவிட தீர்மானிப்பதாக தெரிவித்துள்ளார். |
| **பொருள் எண்.55**<br>திரு.ட்டி.ஆர்.ருக்மாங்கதன், அலுவலக உதவியாளர், பொதுத்துறை, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை. | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி எச்சரித்துவிட தீர்மானிப்பதாக தெரிவித்துள்ளார். |
| **பொருள் எண்.56**<br>திரு.கே.ராஜேந்திரன். ஓட்டுநர், மண்டலம்–10, லாரியில் இருந்து டீசலை வெளிநபர் களவாட அனுமதித்தது. | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி எச்சரித்துவிட தீர்மானிப்பதாக தெரிவித்துள்ளார். |
| **பொருள் எண்.57**<br>திருமதி.சரோஜா, துப்புரவு பணியாளர், மண்டலம்–5 முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை. | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி எச்சரித்துவிட தீர்மானிப்பதாக தெரிவித்துள்ளார். |
| **பொருள் எண்.75**<br>திரு.ஜெ.ரவீந்திரன், துப்புரவு ஆய்வாளர், மண்டலம்–3, லாரி ஓட்டுநர்களின் வருகை பதிவேட்டினை முறையாக பராமரிக்காமல் ஈடுசெய்யும் விடுப்பு வழங்கி, அந்த நாட்களுக்கு சம்பளம் வழங்கி மோசடி செய்தது. | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி எச்சரித்துவிட தீர்மானிப்பதாக தெரிவித்துள்ளார். |
| **பொருள் எண்.76**<br>திரு.எஸ். பஞ்சபிரகாசம், ஓட்டுநர், மண்டலம்–7, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை. | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி எச்சரித்துவிட தீர்மானிப்பதாக தெரிவித்துள்ளார். |
| **பொருள் எண்.79**<br>திருமதி.ட்டி.உமா மகேஸ்வரி, ஆய்வக தொழில்நுட்பாளர், சைதாப்பேட்டை மண்டலம், மாவட்ட குடும்பநலத்துறை, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை. | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி தனியரின் விளக்கம் பெற்று இதனை மீள சமர்ப்பிக்கலாமென எச்சரித்துவிட தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். |
| **பொருள் எண்.81**<br>திருமதி.வி.ஜெயலட்சுமி, பல்நோக்கு சுகாதார பணியாளர், மாவட்ட குடும்ப நலத்துறை, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நலவாழ்வு | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி தனியரின் விளக்கம் பெற்று இதனை மீள சமர்ப்பிக்கலாமென எச்சரித்துவிட |

| | |
|---|---|
| மையத்தின் பணிகள் பாதிக்கக் காரணமாக இருந்தது. | தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். |

| | |
|---|---|
| **<u>பொருள் எண்.82</u>**<br>திரு. எ. கண்ணன், தொழிலாளி, பொது பண்டக சாலை, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்து பொது பண்டக சாலையின் பணிகள் பாதிக்கக் காரணமாக இருந்தது. | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி தனியரின் விளக்கம் பெற்று இதனை மீள சமர்ப்பிக்கலாமென எச்சரித்துவிட தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். |
| **<u>பொருள் எண்.83</u>**<br>திரு.எம். கருணாகரன், காவலர், மண்டலம்–3, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை. | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி தனியரின் விளக்கம் பெற்று இதனை மீள சமர்ப்பிக்கலாமென எச்சரித்துவிட தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். |
| **<u>பொருள் எண்.84</u>**<br>திரு.எம். ராஜகோபால், துப்புரவு பணியாளர், மண்டலம்–9 முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை. | தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி தனியரின் விளக்கம் பெற்று இதனை மீள சமர்ப்பிக்கலாமென எச்சரித்துவிட தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். |

மேற்படி பொருள் எண்.54 முதல் 57, 75 மற்றும் 76 ஆகியவற்றில் தனியர்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்து சென்னை மாநகராட்சி பணிகளுக்கு குந்தகம் விளைவித்தும், லாரியில் இருந்து டீசலை களவாட அனுமதித்ததும், ஓட்டுநர்களுக்கு வருகை பதிவேட்டினை சரிவர பராமரிக்காமல் ஈடுசெய்யும் விடுப்பு அனுமதித்து அந்நாட்களுக்கு சம்பளம் வழங்கி மோசடி செய்துள்ளதும் கடுமையான தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதிகள் பிரிவு 9(2)ன் கீழ் தனியர்களின் மீது ஒழுங்கு நடடிவக்கை தொடரப்பட்டு விசாரணை அலுவலர் அறிக்கை பெறப்பட்டு, மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த தண்டனை தனியர்களுக்கு நிர்வாகத்தால் வழங்கப்பட்டது, மேற்படி தனியர்கள் அளித்த மேல்முறையீடு மனுக்கள் நியமனக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு, அப்பொருள்களின் மீதான விவாதத்தில் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள், தனியர்களுக்கு நிர்வாகம் வழங்கிய தண்டனையை ரத்து செய்து அவர்களை எச்சரித்து விட வேண்டும் என கருத்து தெரிவித்திருந்தார்.

ஆனால், அன்றைய சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் மேற்காணும் தீர்மானங்களின் மீது இறுதியாணைகளை செயல்படுத்தும் பட்சத்தில், சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கு இது போன்ற கடுமையான ஒழுங்கு நடவடிக்கை நிகழ்வுகளில், இந்நிகழ்வுகள் முன்னுதாரணமாகிவிடும் என்பதாலும், நிர்வாகத்திற்கு எதிர்காலத்தில் பணியாளர்களால் எழக்கூடும் ஒழுங்கீனங்கள்/சீர்கேடுகள் ஏற்படுவதை தவிர்த்திடும் பொருட்டும், தனியர்கள் மீது சுமத்தப்பட்டவைகள் கடுமையான குற்றச்சாட்டுகள் என்பதாலும், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, விதி 24–ல் தெரிவித்துள்ளவாறு, சென்னை மாநகராட்சி ஆணையர் இத்தீர்மானங்களில் நீதிக்குட்பட்டு குற்றங்களுக்குரிய சரியான தண்டணைகள் வழங்கப்படவில்லை (miscarriage of justice) என கருதுவதாகவும், எனவே மேற்காணும் தீர்மானங்களை நீக்கம் செய்து உரிய ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில், 16.08.2016 நாளிட்ட அரசு கடிதத்தில், 18.08.2006 அன்று நியமனக்குழுவால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீது இறுதி ஆணைகளை செயல்படுத்தப்படும்பட்சத்தில், சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கு இதுபோன்ற கடுமையான ஒழுங்கு நடவடிக்கை நிகழ்வுகளில், இந்நிகழ்வுகள் முன் உதாரணமாகிவிடும் என்பதாலும், நிர்வாகத்திற்கு எதிர்காலத்தில் அலுவலர்/பணியாளர்களால் எழக்கூடும் ஒழுங்கீனங்கள்/சீர்கேடுகள் ஏற்படுவதை தவிர்த்திடும் பொருட்டும், தனியர்கள் மீது சுமத்தப்பட்டவை கடுமையான குற்றச்சாட்டுகள் என்பதாலும், 2006ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை மேல்முறையீட்டு மனுக்கள் தொடர்பான 11 தீர்மானங்களை (தீர்மான எண்கள்.54–57, 75,76,79 மற்றும் 81–84) சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 44ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி நீக்கம் செய்யலாம் என அரசு கருதுவதாகவும், மேற்படி 11 தீர்மானங்களை ஏன் நீக்கம் செய்யக்கூடாது எனவும் அதற்கான விளக்கத்தையும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்ட தீர்மானங்களினால் நிர்வாகத்திற்கு எதிர்காலத்தில் அலுவலர் / பணியாளர்களினால் எழக்கூடும் ஒழுங்கீனங்கள் / குற்றச்சாட்டுகள் ஏற்படுவதை தவிர்க்கப்படும் பொருட்டும், 11 தீர்மானங்களை (தீர்மான எண்கள்.54–57, 75,76,79 மற்றும் 81–84) அரசு கோரியவாறு நீக்கம் செய்யலாம் என கருதப்படுகிறது.

மேலும், மேற்கண்ட தீர்மானங்கள் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தமான பொருள் என்பதாலும் இது போன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் ஏற்படாவண்ணம் தவிர்க்கும் பொருட்டு மேற்படி தீர்மானங்களை (தீர்மான எண்கள்.54–57, 75,76,79 மற்றும் 81–84) ரத்து செய்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“சென்னை மாநகராட்சியில் 2006ஆம் ஆண்டு பணியாளர்கள் நடத்தை விதிகள் பிரிவு 9(2)ன் கீழ் 11 பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு தகுந்த தண்டனைகள் வழங்கப்பட்டது. நிர்வாகத்தால் வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து பணியாளர்கள் நியமனக்குழுவிற்கு மேல்முறையீடு செய்ததின் அடிப்படையில் அப்போது மேயர் பதவி காலியாக இருந்ததால் அன்றைய துணை மேயர் அவர்கள் 18.08.2006ஆம் ஆண்டில் நடைபெற்ற நியமனக்குழுவில், தனக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி, தனியர்களுக்கு நிர்வாகம் வழங்கிய தண்டனையை ரத்து செய்து அவர்களை எச்சரித்துவிட வேண்டுமென கருத்து தெரிவித்தார். இறுதி ஆணைகளை செயல்படுத்தும்பட்சத்தில், இந்நிகழ்வுகள் முன்னதாரணமாகிவிடும் என்பதாலும், நிர்வாகத்திற்கு எதிர்காலத்தில் பணியாளர்களால் எழக்கூடும் ஒழுங்கீனங்கள் / சீர்கேடுகள் ஏற்படுவதை தவிர்த்திடும் பொருட்டும், இத்தீர்மானங்களில் நீதிக்குட்பட்டு குற்றங்களுக்குரிய சரியான தண்டனைகள் வழங்கப்படவில்லை (Miscarriage of Justice) என கருதுவதாகவும், மேற்காணும் தீர்மானங்களை நீக்கம் செய்து உரிய ஆணை வழங்குமாறும் அன்றைய சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் அரசை கேட்டுக் கொண்டார். சென்னை மாநகராட்சி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டதற்கிணங்கவும், அப்போதைய துணை மேயர் நிர்வாகம் வழங்கிய தண்டனையை ரத்து செய்தது, வருங்காலங்களில் பணியாளர்கள் / அலுவலர்களுக்கு இது ஒரு தவறான முன்னுதாரணமாக இருக்கும் என்ற கருத்தை உறுதிபடுத்தி சென்னை மாநகராட்சி சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி நீக்கம் செய்யலாம் என தற்போதைய அரசு கருதுவதாக தெரிவித்து மேற்படி உத்தரவினை ஏன் ரத்து செய்யக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் அவர்களால் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. எனவே, அதனடிப்படையில் மேற்கண்ட நிகழ்வுகள் எதிர்காலத்தில் முன்னுதாரணமாகி விடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்ட 11 தீர்மானங்களை (தீர்மான எண்கள்–54–57, 75, 76, 79 மற்றும் 81–84) ரத்து செய்ய அரசுக்கு பரிந்துரை செய்யலாம் என தீர்மானித்து இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

*******

**ம.அ.11.ந.க.எண்.இ3/4464/2016**
**ஆணையர் அவர்களின் 19.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.474/2016** **பொருள் எண்.46**

**மண்டலம்–11, கோட்டம்–155 – இராமாபுரம் ஏரி புனரமைக்கும் பணி – மதிப்பீடுகள் தயாரித்து பணி மேற்கொள்ள அனுமதி**

மண்டலம்–11, கோட்டம்–155,மதுரவாயல் தாலுகா, இராமாபுரம் கிராமம், புல எண்.239ல் ஒரு பகுதியில் அமையப் பெற்றுள்ள ஏரியை தூர்வாரவும் மற்றும் சுற்றி வேலி அமைத்தும் உள்புறத்தில் மக்கள் நடைபயிற்சி மேற்கொள்ளும் வகையில் நடைபாதை அமைக்கவும், நடைபாதையின் இருமருங்கும் வண்ண விளக்குகள் அமைக்கவும், வயதானவர்களும் குழந்தைகளும் இளைப்பாரும் வகையில் சிமெண்ட் இருக்கைகள் அமைத்தும் ஏரியின் உட்புறத்தில் அணைச்சுவர் அமைத்து இராமாவுரம் ஏரியை புனரமைக்கும் பணிக்கு முறையே 48.30 லட்சம் மற்றும் 45.70 லட்சம் ஆகிய இரு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் உரிய நிர்வாக அனுமதி பெற்று ஆக மொத்தம் 94.00 இலட்சங்களில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 16.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.246/2016ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 17.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.262/2016ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**தே.ந.வா.இ.ந.க.எண்.எ1/72/2016**
**ஆணையர் அவர்களின் 19.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.475/2016** **பொருள் எண்.47**

**பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமையில் வாழும் முதியோர்கள், விதவைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க வறுமைக்கோட்டு எண் வழங்குவதற்கு அனுமதி**

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 28.07.2016 மற்றும் 18.08.2016 நாளிட்ட கடிதங்களில் (கடித எண். ஊ2/0754/2016) சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களில் இந்திராகாந்தி தேசிய முதியோர் திட்டத்தின் கீழ் வரப்பெற்ற மனுக்கள் பரிசீலினை செய்யப்பட்டு முதியோர்கள்–760 பேர், விதவைகள்–582 பேர் மற்றும் மாற்றுத்திறனாளிகள்–69 பேர் ஆக மொத்தம் 1411 தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களின் வறுமை நிலையை கண்டறிந்து அவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்குவதற்கு வறுமைகோட்டிற்கு கீழ் வாழ்பவர்களுக்கான வறுமைக்கோட்டு எண் வழங்க கோரியுள்ளார்கள்.

**வட்டாட்சியர் அவர்களால் பிப்ரவரி 2016 முதல் ஜுன் 2016 வரை கண்டறியப்பட்ட பயனாளிகளின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

| வ. எண். | வட்டாட்சியர் அலுவலகப் பெயர் | இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகை | இந்திராகாந்தி தேசிய விதவை உதவித்தொகை | இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனாளி உதவித்தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | எழும்பூர் | 42 | 28 | 2 | 72 |
| 2 | அமைந்தகரை | 108 | 144 | 9 | 261 |
| 3 | புரசைவாக்கம் | 27 | 37 | 4 | 68 |
| 4 | மாம்பலம் | 23 | 9 | 3 | 35 |
| 5 | கிண்டி | 20 | 25 | 0 | 45 |
| 6 | மயிலாப் பூர் | 73 | 70 | 5 | 148 |
| 7 | வேளச்சேரி | 53 | 53 | 5 | 111 |
| 8 | பெரம்பூர் | 22 | 13 | 1 | 36 |
| 9 | அயனாவரம் | 96 | 80 | 13 | 189 |
| 10 | ஆர்.கே நகர் (துண்டையார்பேட்டை வட்டம்) | 296 | 123 | 27 | 446 |
| | **மொத்தம்** | **760** | **582** | **69** | **1411** |

| இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகை | இந்திராகாந்தி தேசிய விதவை உதவித்தொகை | இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனாளி உதவித்தொகை | மொத்தம் | வறுமைக்கோட்டு எண் |
|---|---|---|---|---|
| 760 | 582 | 69 | 1411 | 3477 முதல் 4887 வரை |

இந்திரா காந்தி தேசிய முதியோர், விதவை மற்றும் மாற்றுத் திறனாளி ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு இதுவரை 3476 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் வழங்கி மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது (தீர்மான எண்.375/2016 நாள் 30.07.2016).

இதன் தொடர்ச்சியாக மேலே குறிப்பிட்டுள்ள **1411** பயனாளிகளுக்கு **3477** முதல் **4887** வரை வறுமைக்கோட்டு எண் வழங்கப்பட வேண்டும்.

எனவே, வட்டாட்சியர் அவர்களால் தேர்வு செய்யப்பட்ட மேற்குறிப்பிட்டுள்ள **760** முதியோர்கள், **582** விதவைகள் மற்றும் **69** மாற்றுத் திறனாளிகளுக்கு ஆக மொத்தம் **1411** பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண்.**3477** முதல் **4887** வரை வழங்குவதற்கு நிலைக்குழு (கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் **12.08.2016** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.08.2016** அன்று தீர்மான எண்.**16/2016**ன்படி நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/1022/2003**
**ஆணையர் அவர்களின் 19.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.476/2016** **பொருள் எண்.48**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–10 கோடம்பாக்கம் கிராமம் – சென்னை மாநகராட்சி தனி நிலம் – ஜெய கோபால் கரோடியா பள்ளிக்கு குத்தகைக்கு வழங்கியது – குத்தகை நீட்டிப்பு மற்றும் குத்தகை தொகையை அரசு நிர்ணயம் செய்ய கோருவதற்கு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் கிராமம், பிளாக் 59 புல எண்.49 டெலிபோஸ்ட் கோ–ஆப்ரேட்டிவ் ஹவுஸ் கன்ஸ்ட்ரக்ஷன் சொசைட்டி லிமிடெட் அவர்களால் தானபத்திரம் எண். 1296 /1994 மூலம் சென்னை மாநகராட்சிக்கு 14 மனை 1114 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இடம் பொதுப் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது. மேற்படி இடம் சென்னை மாநகராட்சியால் ஜெயகோபால் கரோடியா பள்ளிக்கு 1979 முதல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, மண்டலம்–10 (பழைய மண்டலம்–8) கோடம்பாக்கம் கிராமம், புல எண்.49, 14 மனை 1114 ச.அடி நிலம் ஜெயகோபால் கரோடியா வித்யாலயா மெட்ரிக் உயர்நிலைப்பள்ளிக்கு விடப்பட்ட குத்தகை விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். (1) | நிலத்தின் விவரம் (2) | பரப்பளவு (3) | குத்தகை காலம் (4) | வாடகை (5) | அரசாணை / மன்றத்தீர்மான எண். (6) |
|---|---|---|---|---|---|
| 1 | கோடம்பாக்கம் கிராமம் புல எண்.49 | 14 மனை மற்றும் 1114 ச.அடி நிலம் | 22.3.79 முதல் 26.4.84 வரை | மாதாந்திர வாடகை ரூ.652.50 | |
| 2 | கோடம்பாக்கம் கிராமம் புல எண்.49 | 14 மனை மற்றும் 1114 ச.அடி நிலம் | 27.4.84 முதல் 26.4.87 வரை | மாதாந்திர வாடகை ரூ.3915.00 | சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணைஎண்.வ.து.ந.க.எண்.ஜி3/17606/84 நாள். 3.3.1988 |
| 3 | | | 27.04.1987 முதல் 26.04.2002 வரை 15 ஆண்டுகள் | மொத்த நிலத்திற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– | அரசாணை எண்.1100 ந.நி.ம.கு.வ.துறை, நாள். 21.12.1988 |

அட்டவணை–1ல் கண்டுள்ளபடி மாதாந்திர வாடகை ரூபாய் 652.50 என நிர்ணயித்து குத்தகைக்குவிடப்பட்டது. மேற்படி கல்வி நிறுவனம் நீண்ட கால குத்தகைக்கு சென்னை மாநகராட்சியை கோரியபோது, அரசு கடித எண்.57793/மாத5/86–1, ந.நி.(ம)கு.வ.து நாள். 25.11.1986–ன்படி நீண்ட கால குத்தகையினை நிராகரித்தது.

இதனை தொடர்ந்து மீண்டும் 1984 முதல் 1987 வரை குத்தகை புதுப்பிக்க கோரியதின் அடிப்படையில், விதிகளின்படி நிலமதிப்பில் 4 சதவீதம் வாடகையாக நிர்ணயிக்கப்பட்டு அட்டவணை இரண்டில் கண்டுள்ள ஆணையரது செயல்முறை ஆணையின்படி மாதாந்திர வாடகையாக ரூபாய். 3915/–க்கு உயர்த்தப்பட்டது.

அதன் பிறகு அரசாணை எண். 829, நநிமதுவதுறை, நாள்22.9.1988ன்படி 27.4.1987 முதல் 15 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது. குத்தகை தொகை ரூ. 3915/– என நிர்ணயக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி கல்வி நிறுவனம் அரசுக்கு முறையீடு செய்து அரசாணை எண்.1100 ந.நி.ம.கு.வ.துறை நாள். 21.12.1988–ன்படி சென்னை மாநகராட்சியின் மொத்த 14 மனை 1114 ச. அடி நிலத்திற்கும் மாதாந்திர வாடகையாக ரூபாய். 1000/– மட்டும் நிர்ணயம் செய்தும், அட்டவணை மூன்றில் கண்டுள்ளபடி தொடர்புடைய கல்வி நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது.

மேற்படி குத்தகை கடந்த 26.04.2002 அன்றுடன் முடிவிற்கு வந்துவிட்டது. தொடர்புடைய பள்ளி நிர்வாகம் குத்தகையினை மீண்டும் புதுப்பிக்க கோரிக்கை சமர்ப்பித்தது.

இத்தனியார் கல்வி நிறுவனம் அனைத்து மாணவ மாணவிகளிடம் கட்டணம் வசூலித்து கல்வி போதித்து வருகின்றது. எனவே இது வருவாய் ஈட்டும் பள்ளியாக கருதப்படுகிறது. சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானங்களின்படி கடந்த **1989** ஆம் ஆண்டு முதல் குத்தகைக்கு விடப்பட்ட அனைத்து இனங்களையும் **1.** வணிக பயன்பாடு **2.** குடியிருப்பு மற்றும் கல்வி பயன்பாடு மற்றும் **3.** தொண்டு பயன்பாடு என்று மூன்று வகையாக பிரித்து அதற்கு ஏற்ப குத்தகை கட்டணம் நிர்ணயித்து வசூலிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் தொடர்புடைய பள்ளி நிர்வாகம் கட்டணம் வசூலித்து பள்ளியினை நடத்தி வருவதால் வணிகப்பயன்பாட்டிற்கு உள்ள குத்தகை கட்டணத்தையே வசூலிக்க வேண்டும். குத்தகை காலம் முடிவுற்ற பின்னர் சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானத்தின்படி கல்வி பயன்பாட்டிற்கான குத்தகை கட்டணம் நிர்ணயித்து அத்தொகையினை செலுத்தும்படி தொடர்புடைய பள்ளி நிர்வாகத்தினை கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் அவ்வாறு செலுத்த இயலாது என்று அக்கல்வி நிறுவனம் தெரிவித்தது. மேற்படி கல்வி நிறுவனம் குத்தகையினை புதுப்பிக்க விஸ்வ இந்து வித்யா கேந்திராவின் பொது செயலாளர் திரு.எஸ். வேதாந்தத்தின் அவர்களின் கடித நாள் **08.08.2006**ன்படி குத்தகை புதுப்பிக்க கோரப்பட்டது.

இக்கோரிக்கையினை பரிந்துரை செய்து வார்டுக்குழு–**8** தீர்மானம் இயற்றி அனுப்பியதை தொடர்ந்து மேற்படி ஜெயகோபால் கரோடியா பள்ளிக்கு மேற்குறிப்பிட்டுள்ள மொத்த நிலத்திற்கும் ரூ.**1000/–**த்திலிருந்து ரூ.**2000/–** ஆக குத்தகை உயர்வு செய்து **33** ஆண்டுகளுக்கு குத்தகை நீட்டிப்பு செய்து தருவது குறித்து அரசின் அனுமதிக்கு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்பட்டதில் மன்றம் தனது தீர்மான எண்.**269/2007**, நாள் **28.5.2007**ல் கீழ் கண்ட மூன்று நிபந்தனைகளை விதித்து மேற்படி நிலத்தினை இப்பள்ளிக்கு **33** ஆண்டுகளுக்கு குத்தகை நீட்டிப்பு செய்து தருவது குறித்து அரசின் அனுமதியினை கோரலாம் என தீர்மானித்து குத்தகை நிலம் தொடர்பான நிபந்தனைக்குளுக்குட்பட்டு குத்தகை செய்யக்கோரி நீட்டிப்பு **17.09.2007** நாளிட்ட கடிதம் மூலம் அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டது.

**<u>குத்தகை நிலம் தொடர்பான நிபந்தனைகள்.</u>**

1) தற்பொழுது கட்டடதின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டிருப்பதை இனி வாடகைக்கு விட கூடாது.
2) ரூ.**2000/–** என உயர்த்தப்படவுள்ள குத்தகையை மேலும் உயர்த்தலாம்.
3) மாநகராட்சி பரிந்துரை செய்யக் கூடிய ஒரு குறிப்பிட்ட சதவீத பிள்ளைகளை அந்தப் பள்ளியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்

அரசு தனது **08.01.2008** மற்றும் **12.08.2009** நாளிட்ட கடிதங்கள் மூலம் (கடிதம் எண்.**3082**/மாநு**1/2007–5**) சில விவரங்களை கோரியது. அரசு கோரிய விவரங்கள் இத்துறையின் **28.08.2010** நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

இவ்வலுவலக கடித எண். L &E.D.C.No. SCI/1022/2003 நாள்**28.8.2010, 10.11.2010** (ம). **12.3.2011**ல் ஆணையர் அவர்கள், அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு **12.03.2011** நாளிட்ட கடிதத்தில், ஜெயகோபால் கரோடியா பள்ளிக்கு வழங்கிய குத்தகை நிலத்தினை மீண்டும் குத்தகை நீட்டித்து அவ்விடத்திற்கு (**34714** ச.அடி) மாத வாடகை ரூ.**2000/–** என்று நிர்ணயித்து மன்றத்திற்கு இப்பொருள் சமர்ப்பித்ததில் மன்றம் இத்தொகை காட்டிலும் அதிகமாக குத்தகை தொகை நிர்ணயிக்குமாறு கேட்டுக்கொண்டது. இதே போன்ற கல்வி நிறுவனங்களுக்கு மன்றத்தில் சந்தை மதிப்பில் **1** முதல் **7 1/2** சதவீதம் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் ஜெயகோபால் கரோடியா பள்ளிக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை மிகவும் வித்தியாசம் காணப்படுவதாலும் இப்பொருளினை மீண்டும் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு விரிவான அறிக்கை அரசுக்கு அனுப்பப்படும் என்று கடிதம் அனுப்பப்பட்டது.

அரசு துணை செயலாளர் அவர்களின் கடிதம் எண்.**30821/M.C.I/2007–4** நாள். **20.12.2015**ல் ம.அ.**8.** வார்டு குழு தீர்மான எண்.**200**, நாள் **9.5.2007** கடிதத்தின் மீது நடவடிக்கை குறித்து அரசு மேல் நடவடிக்கை எடுப்பதற்காக அரசுக்கு உடனே அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தனி வட்டாட்சியர்/நி.ம.உ.து அவர்களின் கள ஆய்வு அறிக்கையில், இந்த பள்ளியில் எல்.கே.ஜி. முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை ஆங்கில மொழி வாயிலாக கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது என்றும், மேற்படி பள்ளிக்கு கட்டிட உரிமம் பெறப்பட்டுள்ளது என்றும், இந்த பள்ளியில்

மொத்தம் 1794 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர், இதில் ஆதி திராவிட இனத்தை சார்ந்த மாணவர்கள் 145, மிகவும் பிற்படுத்தபட்ட வகுப்பு இனத்தை சார்ந்த மாணவர்கள். 472, பிற்படுத்தப்பட்ட வகுப்பு இனத்தை சார்ந்த மாணவர்கள் 818 இதர பிரிவினர் 354, எந்த பிரிவை சாராத மாணவர்கள் 5 பேரும் கல்வி பயின்று வருகின்றனர். இதற்கு பள்ளியிருந்து பெறப்பட்ட மொத்த மாணவர்கள் தொடர்பான ஆதாரம் இதனுடன் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

தனி அலுவலர், தனியார் பள்ளி கட்டணம் நிர்ணயிக்கும் குழு, சென்னை 600 006, அவர்கள் 2015–16 ஆம் ஆண்டிற்கான கட்டணம் நிர்ணயித்த விவரம் கீழே அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வகுப்பு | மாணவர்கள் எண்ணிக்கை | ஆண்டு கட்டணம் | வருமானம் |
|---|---|---|---|
| L.K.G – U.K.G | 350 | 12100 | 4235000 |
| 1–5 | 817 | 13310 | 10874270 |
| 6–8 | 429 | 14762 | 6332898 |
| 9–10 | 256 | 15730 | 4026880 |
| 11–12 | 218 | 16940 | 3692920 |
| | 2070 | – | 29161968 |

இதன் அடிப்படையில் துணை ஆணையர்/வ.ம.நி அவர்களின் 18.01.2016 நாளிட்ட குறிப்பில் வழிகாட்டு மதிப்பீட்டின்படியும், அரசாணையின்படியும், மன்றத்தீர்மானங்களின் அடிப்படையிலும் குத்தகை கட்டணம் கணக்கீடு செய்யுமாறு தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் கீழ்காணும் அட்டவணையில் குத்தகை கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. வழிகாட்டி மதிப்பின்படி குத்தகை தொகை நிர்ணயம் செய்வது தொடர்பான கணக்கீட்டுப் பட்டியல்

வழிகாட்டி மதிப்பு : ரூ.6500 1 ச.அடி
குத்தகை நிலத்தின் பரப்பளவு : 34714 ச.அடி
வழிகாட்டி மதிப்பின்படி

7% வாடகை நிர்ணயம் செய்தால் $\frac{34714 \times 6500 \times 7}{100}$ = ரூ. 1,57,94,870/– ஆண்டுக்கு

1% வாடகை நிர்ணயம் செய்தால் $\frac{34714 \times 6500 \times 1}{100}$ = ரூ. 22,56,410/–ஆண்டுக்கு

2. மன்ற தீர்மானத்தின்படி வணிக பயன்பாட்டிற்கு குத்தகை கட்டணம் நிர்ணயம் தொடர்பான கணக்கீட்டுப்பட்டியல்

| மன்ற தீர்மானம் எண். | காலம் | ஒரு மனைக்கு மாத வாடகை | மாத வாடகை | காலம் | செலுத்த வேண்டிய தொகை | சேவை வரி |
|---|---|---|---|---|---|---|
| 432/2000 நாள். 30.7.2000 | 27.04.2002 முதல் 30.04.2002 வரை | 2640 | 38185 | 4 நாட்கள் | 5091 | |
| 432/2000 நாள். 30.7.2000 | 01.05.2002 முதல் 31.03.2003 வரை | 2640 | 38185 | 11 | 420035 | |
| 500/2004 நாள்.23.12.2004 | 01.04.2003 முதல் 31.03.2006 வரை | 3036 | 43913 | 36 | 1580868 | |
| 312/2006 நாள். 31.12.2006 | 01.04.2006 முதல் 31.05.2007 வரை | 3492 | 50509 | 14 | 707126 | |
| 312/2006 நாள். 31.12.2006 | 01.06.2007 முதல் 31.03.2009 வரை சேவை வரி 12.36 % | 3492 | 50509 | 22 | 1111198 | 137344 |
| 29/2011 நாள் 31.01.2011 | 01.04.2009 முதல் 31.03.2012 வரை | 4016 | 58088 | 36 | 2091171 | 215391 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சேவை வரி 10.30 % | | | | | |
| | 01.04.2012 முதல் 31.03.2015 வரை சேவை வரி 12.36 % | 4618 | 66796 | 36 | 2404656 | 297215 |
| | 01.04.2015 முதல் 31.05.2015 வரை சேவை வரி 12.36 % | 5311 | 76819 | 2 | 153638 | 18990 |
| | 01.06.2015 முதல் 31.10.2015 வரை சேவை வரி 14 % | 5311 | 76819 | 5 | 384095 | 53773 |
| | 01.11.2015 முதல் 14.11.2015 வரை சேவை வரி 14 % | 5311 | 76819 | 14 நாட்கள் | 35849 | 5019 |
| | 15.11.2015 முதல் 30.11.2015 வரை சேவை வரி 14.5 % | 5311 | 76819 | 16 நாட்கள் | 40970 | 5941 |
| | 01.12.2015 முதல் 31.05.2016 வரை சேவை வரி 14.5 % | 5311 | 76819 | 6 | 460914 | 66833 |
| | 01.06.2016 முதல் 31.07.2016 வரை சேவை வரி 15 % | 5311 | 76819 | 2 | 153638 | 23046 |
| | | மொத்தம் | | | 9549249 | 823602 |

செலுத்த வேண்டிய மொத்த தொகை – ரூ. 9549249
செலுத்தப்பட்ட தொகை (31.07.2016 வரை) – ரூ. 171000
செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை – ரூ. 9378249
சேவை வரி – ரூ. 823602

மன்ற தீர்மானத்தின்படி கல்வி பயன்பாட்டிற்கு குத்தகை கட்டணம் நிர்ணயம் தொடர்பான கணக்கீட்டுப்பட்டியல்

| மன்ற தீர்மான எண். | காலம் | ஒரு மனைக்கு மாத வாடகை | மாத வாடகை | காலம் | செலுத்த வேண்டிய தொகை | சேவை வரி |
|---|---|---|---|---|---|---|
| 432/2000 நாள். 30.7.2000 | 27.04.2002 முதல் 30.04.2002 வரை | 1320 | 19093 | 4 நாட்கள் | 2546 | |
| 432/2000 நாள். 30.7.2000 | 01.05.2002 முதல் 31.03.2003 வரை | 1320 | 19093 | 11 | 210023 | |
| 500/2004 நாள்.23.12.2004 | 01.04.2003 முதல் 31.03.2006 வரை | 1513 | 21884 | 36 | 787824 | |
| 312/2006 நாள். 31.12.2006 | 01.04.2006 முதல் 31.05.2007 வரை | 1746 | 25254 | 14 | 353556 | |
| 312/2006 நாள். 31.12.2006 | 01.06.2007 முதல் 31.03.2009 வரை சேவை வரி | 1746 | 25254 | 22 | 555588 | 68671 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 12.36 % | | | | | |
| 29/2011 நாள் 31.01.2011 | 01.04.2009 முதல் 31.03.2012 வரை சேவை வரி 10.30 % | 2008 | 29044 | 36 | 1045584 | 107695 |
| | 01.04.2012முதல் 31.03.2015வரை சேவை வரி 12.36 % | 2309 | 33398 | 36 | 1202328 | 148608 |
| | 01.04.2015முதல் 31.05.2015வரை சேவை வரி 12.36 % | 2655 | 38402 | 2 | 76804 | 9493 |
| | 01.06.2015 முதல் 31.10.2015 வரை சேவை வரி 14 % | 2655 | 38402 | 5 | 192010 | 26881 |
| | 01.11.2015 முதல் 14.11.2015 வரை சேவை வரி 14 % | 2655 | 38402 | 14 நாட்கள் | 17921 | 2509 |
| | 15.11.2015 முதல் 30.11.2015 வரை சேவை வரி 14.5 % | 2655 | 38402 | 16 நாட்கள் | 20481 | 2970 |
| | 01.12.2015 முதல் 31.05.2016 வரை சேவை வரி 14.5 % | 2655 | 38402 | 6 | 230412 | 33410 |
| | 01.06.2015 முதல் 31.07.2016 வரை சேவை வரி 15 % | 2655 | 38402 | 2 | 76804 | 11521 |
| | | மொத்தம் | | | 4771881 | 411758 |

செலுத்த வேண்டிய மொத்த தொகை – ரூ. 4771881
செலுத்தப்பட்ட தொகை (31.07.2016 வரை) – ரூ. 171000
செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை – ரூ. 4600881
சேவை வரி – ரூ. 411758

ஜெயகோபால் கரோடியா அவர்களின் 8.05.2015 மற்றும் 18.08.2016 நாளிட்ட கடிதங்களில் குத்தகை ஒப்பந்தத்தில் தற்போதுள்ள ரூ.1000/– என்ற வாடகைத்தொகையை ரூ.2000/–மாக உயர்த்தி ஒப்பந்தத்தை புதுப்பித்து 30 ஆண்டுகளுக்கு குத்தகை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் ஜெயகோபால் கரோடியா பள்ளிக்கு 27.04.2002 முதல் குத்தகை காலத்தை அரசு நீட்டிப்பு செய்யவும் மற்றும் குத்தகை தொகையினை அரசு நிர்ணயம் செய்ய கோருவதற்கும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 17.08.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.08.2016 அன்று தீர்மான எண்.261/2016ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/22667/2016**

**ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.477/2016** **பொருள் எண்.49**

**உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப் பட்டியலுக்கு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்த்துறையில் வகுப்பு 2ன் கீழ் வரும் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு 15.05.2016ஐ மைய நாளாகக் கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படவேண்டும், அதற்கான விவரம் பின்வருமாறு:–

| | | |
|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | உதவி வருவாய் அலுவலர் |
| 2 | மைய நாள் | 15.05.2016 |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.15600–39100 + தர ஊதியம் 5400 |
| 4 | காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies) | 1) அனுமதிக்கப்பட்ட பணியிடம் – 46<br>(அ) தற்காலிக பணியிடம் – 0<br>(ஆ) நிரந்தர பணியிடம் – 46<br>2) பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – 1<br>3) மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் – 14<br>4) எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் – 5<br>5) பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடம் – 1<br>6) பட்டியல் ஆண்டில் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் – 0 |
| 5 | வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | வரி மதிப்பீட்டாளர்<br>(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட பட்டம்.<br>(ஆ) வரிமதிப்பீடு கண்காணிப்பாளராக தகுதிகாண்பருவம் முடித்தவராக இருக்க வேண்டும் அல்லது வரிமதிப்பீட்டாளர் பதவியில் ஐந்தாண்டு காலம் தகுதி பணி முடித்தவராக இருக்க வேண்டும்.<br>(இ) சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம்–1 மற்றும் 2ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>(ஈ) தமிழ்நாடு வருவாய் சார்நிலை அலுவலருக்கான வருவாய் தேர்வு பாகம் 1, 2, மற்றும் 3ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? | இல்லை |

பணிமூப்பின்படி வரிமதிப்பீட்டாளர்களின் விவரம் பின்வருமாறு :–

| **வ. எண்.** | **பெயர் (திருவாளர்கள்)** | **தற்போதுள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள்** | **தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்த தகுதி விவரம்** |
|---|---|---|---|
| 1 | பி.லட்சுமணகுமார் மண்டலம்–6 | 06.10.2008 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை<br>4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார்.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெற்றுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| 2 | ஆர்.யுகமணி<br>மண்டலம்–14 | 06.10.2008 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை<br>4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார்.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெற்றுள்ளார். |
| 3 | ஜி.வெங்கடசுப்பிரமணி<br>மண்டலம்–9 | 01.12.2010 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை<br>4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார்.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெற்றுள்ளார். |
| 4 | கு.ஜஸ்டினா<br>மத்திய வட்டார துணை ஆணையர்<br>அலுவலகம் | 25.02.2013 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை<br>4) பணிக்காலத்தகுதி பெறவில்லை.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை. |
| 5 | வி.ராமன்<br>மண்டலம்–4 | 27.02.2013 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை<br>4) பணிக்காலத்தகுதி பெறவில்லை.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை |
| 6 | ட்டி.கஜேந்திரபாபு<br>மண்டலம்–10 | 25.02.2013 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3)தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஓராண்டிற்கு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 29.06.2016 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு 01.04.2017 முதல் 31.03.2018 வரை தண்டனை நடப்பில் உள்ளது.<br>4) பணிக்காலத்தகுதி பெறவில்லை.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை. |
| 7 | எ.அருள்தாஸ்<br>மண்டலம்–11 | 27.02.2013 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை<br>4) பணிக்காலத்தகுதி பெறவில்லை.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை. |
| 8 | ஏ.எஸ்.சுரேஷ்<br>மண்டலம்–4 | 27.02.2013 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை<br>4) பணிக்காலத்தகுதி பெறவில்லை.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை |

| | | | |
|---|---|---|---|
| 9 | ஆர்.தீனதயாளன்<br>மண்டலம்–12 | 28.02.2013 | 1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் இளங்கலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை.<br>2)துறைத்தேர்வு (வருவாய் தேர்வு பாகம் 1 தாள் 1) தேர்ச்சி பெறவில்லை.<br>3)தனியர் மீது 9(1)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது.<br>4) பணிக்காலத்தகுதி பெறவில்லை.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை |
| 10 | எஸ்.பாக்கியசெல்வரா<br>ஜ்<br>மண்டலம்–6 | 04.03.2013 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை<br>4) பணிக்காலத்தகுதி பெறவில்லை.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை. |
| 11 | கே.லஷ்மிநாராயணன்<br>மண்டலம்–3 | 29.03.2013 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை<br>4) பணிக்காலத்தகுதி பெறவில்லை.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை. |
| 12 | எஸ்.பிரகாஷ்<br>மண்டலம்–10 | 27.02.2013 | 1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.<br>2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.<br>3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை<br>4) பணிக்காலத்தகுதி பெறவில்லை.<br>விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை. |

மேற்படி மூப்புப்பட்டியலில் வ.எண்.1, 2 மற்றும் 3ல் இடம் பெற்றுள்ள திரு.பி.லட்சுமணகுமார், திரு.ஆர்.யுகமணி மற்றும் திரு.ஜி.வெங்கடசுப்பிரமணி, ஆகிய வரி மதிப்பீட்டாளர்கள் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான பணிவிதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித்தகுதி, துறைத்தேர்வுகளில் தேர்ச்சி மற்றும் 5 வருட பணிக்கால தகுதி பெற்றுள்ளதால் இவர்களது பெயர்களை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம்.

வரிசை எண்.6ல் இடம் பெற்றுள்ள திரு.ட்டி.கஜேந்திரபாபு, வரி மதிப்பீட்டாளர் அவர்கள் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித்தகுதி மற்றும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். ஆனால் தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஓராண்டிற்கு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 29.06.2016 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு தண்டனை நிலுவையில் உள்ளதால், இவரது பெயரை விதிகளின்படி பரிசீலிக்க இயலாது.

வரிசை எண்.9ல் இடம்பெற்றுள்ள திரு.ஆர்.தீனதயாளன் அவர்கள் வருவாய் துறைத்தேர்வு பாகம் 1 தாள் 1ல் தேர்ச்சி பெறவில்லை என்பதால் இவரது பெயரை பணிவிதிகளின்படி பரிசீலிக்க இயலாது.

வரிசை எண்.4,5,7,8,10,11 மற்றும் 12ல் இடம் பெற்றுள்ள வரி மதிப்பீட்டாளர்கள் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித்தகுதி மற்றும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் தனியர்கள் மூன்று வருடங்களுக்கு மேலாக வரி மதிப்பீட்டாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். ஆனால், ஊட்டப்பதவியில் 5 ஆண்டு காலம் பணி முடித்திருக்கவில்லை.

அரசாணை எண்.47 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.01.2016—ல் வரி மதிப்பீட்டாளர் பதவியில் (ஊட்ட பதவி) 3 ஆண்டுகள் மட்டுமே ஊட்ட பதவியில் பணிக்கால தகுதி பெற்ற நபர்களுக்கு உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு அளிக்கப்பட்டதற்கு பின்னேற்பு வழங்குவது பிற்காலத்தில் ஒரு தவறான முன்னுதாரணமாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016—17 ஆம் ஆண்டிற்கு உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலில் விதிகளின் படி ஊட்டப்பதவியில் கீழ்க்காண் 1 முதல் 3 வரையுள்ள நபர்கள் வரிமதிப்பீட்டாளர் பதவியில் 5 ஆண்டு பணிக்காலம் நிறைவு செய்துள்ளனர். வரிசை எண்.4 முதல் 10 வரையுள்ள நபர்கள் வரிமதிப்பீட்டாளர் பதவியில் விதிகளின் படி 5 ஆண்டுகாலம் பணிநிறைவு செய்யவில்லை. அதன் விவரம் வருமாறு:

| வ. எண். | பெயர் | வரி மதிப்பீட்டாளராக பணியில் சேர்ந்த நாள் | வரி மதிப்பீட்டாளராக பணியினை பூர்த்தி செய்த காலம் |
|---|---|---|---|
| 1. | பி.லட்சுமணகுமார்<br>மண்டலம்—6 | 06.10.2008 | 7 வருடங்கள் 10 மாதங்கள் |
| 2. | ஆர்.யுகமணி<br>மண்டலம்—14 | 06.10.2008 | 7 வருடங்கள் 10 மாதங்கள் |
| 3. | ஜி.வெங்கடசுப்பிரமணி<br>மண்டலம்—9 | 01.12.2010 | 5 வருடங்கள் 8 மாதங்கள் |
| 4. | கு.ஜஸ்டினா<br>மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம் | 25.02.2013 | 3 வருடங்கள் 6 மாதங்கள் |
| 5. | வி.ராமன்<br>மண்டலம்—4 | 27.02.2013 | 3 வருடங்கள் 6 மாதங்கள் |
| 6. | எ.அருள்தாஸ்<br>மண்டலம்—11 | 27.02.2013 | 3 வருடங்கள் 6 மாதங்கள் |
| 7. | ஏ.எஸ்.சுரேஷ்<br>மண்டலம்—4 | 27.02.2013 | 3 வருடங்கள் 6 மாதங்கள் |
| 8. | எஸ்.பாக்கியசெல்வராஜ்<br>மண்டலம்—6 | 04.03.2013 | 3 வருடங்கள் 5 மாதங்கள் |
| 9. | கே.லஷ்மிநாராயணன்<br>மண்டலம்—3 | 29.03.2013 | 3 வருடங்கள் 5 மாதங்கள் |
| 10. | எஸ்.பிரகாஷ்<br>மண்டலம்—10 | 27.02.2013 | 3 வருடங்கள் 6 மாதங்கள் |

உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வுக்கு விதிகளின் படி வரி மதிப்பீட்டாளர் பதவியில் 5 ஆண்டுகள் பணிக்கால தகுதி பெற்ற மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள வ.எண்.1 முதல் 3 வரையுள்ள நபர்களுக்கு உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு வழங்க தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்க்கலாம்.

அரசாணை எண்.47 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.01.2016—ல் வரி மதிப்பீட்டாளர் பதவியில் (ஊட்ட பதவி) 3 ஆண்டுகள் மட்டுமே ஊட்ட பதவியில் பணிக்கால தகுதி பெற்ற நபர்களுக்கு உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு அளிக்கப்பட்டதற்கு பின்னேற்பு வழங்குவது பிற்காலத்தில் ஒரு தவறான முன்னுதாரணமாக அமையும் என தெரிவித்துள்ள நிலையில், தற்போது மேற்காண் பட்டியலில் 3 ஆண்டுகள் மட்டுமே பணிமுடித்துள்ள வரிசை எண்.4 முதல் 10 வரையுள்ள நபர்களுக்கு வரி மதிப்பீட்டாளர் பதவியில் 5 ஆண்டு பணிக்காலம் பணிபுரிய வேண்டும் என்பதிலிருந்து தளர்வு பெற அரசின் ஆணை பெற்று பதவி உயர்வு அளிக்க அரசுக்கு முன்மொழிவு அனுப்பலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு—2ன் கீழ் வரும் பதவிகளை பணி நியமனம் செய்து கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அதிகார பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. 15.05.2016ஐ மைய நாளாக கொண்ட உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வுக்கு முழு தகுதியுடைய ஊட்டப்பதவியான வரிமதிப்பீட்டாளர் பதவியில் 5 ஆண்டு பணிக்காலம் நிறைவு செய்திருக்கும் கீழ்க்காண் 3 வரி மதிப்பீட்டாளர்களை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,

| வ. எண். | பெயர் | வரி மதிப்பீட்டாளராக பணியில் சேர்ந்த நாள் | வரி மதிப்பீட்டாளராக பணியினை பூர்த்தி செய்த காலம் |
|---|---|---|---|
| 1. | பி.லட்சுமணகுமார் மண்டலம்–6 | 06.10.2008 | 7 வருடங்கள் 10 மாதங்கள் |
| 2. | ஆர்.யுகமணி மண்டலம்–14 | 06.10.2008 | 7 வருடங்கள் 10 மாதங்கள் |
| 3. | ஜி.வெங்கடசுப்பிரமணி மண்டலம்–9 | 01.12.2010 | 5 வருடங்கள் 8 மாதங்கள் |

2. மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ள 3 வரி மதிப்பீட்டாளர்களுக்கு உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு வழங்கவும், ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.5400 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் காலிப்பணியிடத்தில் பணியமர்வு செய்து ஆணை வழங்கவும்,

3. அரசாணை எண்.47 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.01.2016–ல் வரி மதிப்பீட்டாளர் பதவியில் (ஊட்ட பதவி) 3 ஆண்டுகள் மட்டுமே ஊட்ட பதவியில் பணிக்கால தகுதி பெற்ற நபர்களுக்கு உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு அளிக்கப்பட்டதற்கு பின்னேற்பு வழங்குவது பிற்காலத்தில் ஒரு தவறான முன்னுதாரணமாக அமையும் என தெரிவித்துள்ள நிலையில், தற்போது 3 ஆண்டுகள் மட்டுமே வரி மதிப்பீட்டாளர் பதவியில் பணிமுடித்துள்ள கீழ்க்காண் 7 நபர்களை வரி மதிப்பீட்டாளர் பதவியில் 5 ஆண்டு பணிக்காலம் பணிபுரிய வேண்டும் என்பதிலிருந்து தளர்வு பெற அரசின் ஆணை பெற்று பதவி உயர்வு அளிக்க அரசுக்கு முன்மொழிவு அனுப்ப ஒப்புதல் வேண்டியும்

| வ. எண். | பெயர் | வரி மதிப்பீட்டாளராக பணியில் சேர்ந்த நாள் | வரி மதிப்பீட்டாளராக பணியினை பூர்த்தி செய்த காலம் |
|---|---|---|---|
| 1 | கு.ஜஸ்டினா, மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம் | 25.02.2013 | 3 வருடங்கள் 6 மாதங்கள் |
| 2 | வி.ராமன் மண்டலம்–4 | 27.02.2013 | 3 வருடங்கள் 6 மாதங்கள் |
| 3 | எ.அருள்தாஸ் மண்டலம்–11 | 27.02.2013 | 3 வருடங்கள் 6 மாதங்கள் |
| 4 | ஏ.எஸ்.சுரேஷ் மண்டலம்–4 | 27.02.2013 | 3 வருடங்கள் 6 மாதங்கள் |
| 5 | எஸ்.பாக்கியசெல்வராஜ் மண்டலம்–6 | 04.03.2013 | 3 வருடங்கள் 5 மாதங்கள் |
| 6 | கே.லஷ்மிநாராயணன் மண்டலம்–3 | 29.03.2013 | 3 வருடங்கள் 5 மாதங்கள் |
| 7 | எஸ்.பிரகாஷ் மண்டலம்–10 | 27.02.2013 | 3 வருடங்கள் 6 மாதங்கள் |

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/20893/2016**
**ஆணையர் அவர்களின் 18.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.478/2016** **பொருள் எண்.50**

**உதவி செயற்பொறியாளர்(மின்சாரம்) பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) (முந்தைய பதவி உதவி கோட்ட மின்பொறியாளர்) பதவிக்கான தெரிவுப்பட்டியல் 01.06.2016ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்படவுள்ளது. உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளின்படி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | **உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்)**<br>(முந்தைய பதவி உதவி கோட்ட மின்பொறியாளர்) |
| 2 | மைய நாள் | 01.06.2016 |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.15600–39100 + தர ஊதியம் 5400 |
| 4 | காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies) | 1) அனுமதிக்கப்பட்ட பணியிடம் – 18<br>2) அரசாணை எண்.95, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள் 14.10.2012 தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் – 6<br>(அ) தற்காலிக பணியிடம் – –<br>(ஆ) நிரந்தர பணியிடம் – 24<br>3) பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – 3<br>4) பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடம் – 1<br>6) விடுப்பு காலிப்பணியிடம் 40% (அரசாணை(ப) எண்.103, நாள் 09.10.2014–ன்படி – 1<br>––––<br>5<br>–––– |
| 5 | G.O.Ms.No.96 (M A W S (MC-3) Dept Dated 29.07.2016 (1969-ல் வெளியிடப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளில் திருத்தம் செய்து 2907.2016–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.) | **Appendix – Notification**<br>In exercise of the powers conferred by clause (i) of sub-section (1) of section 86 read with clause (a) of sub-section (2) of section 347 IV of 1919) , the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Chennai Corporation Engineering Service Rules, 1969,as subsequently amended:-<br>**1.** The amendments (1) hereby made shall be deemed to have some into force with effect on and from the **22nd of August, 1996.**<br>**AMENDEMENTS**<br>In the said Rules,-<br>(1) In rule 4, in the Table, under CLASS-II ,in column (3),against the entry "Assistant Divisional Engineer (Electrical)" in column (1),-<br>(i) Against the entry "By direct recruitment" in column (2), for item (2), the following item shall be substituted, namely:- |

| | | |
|---|---|---|
| | | (2) Must possess a degree in Electrical and Electronics Engineering or Electronics and Communication Engineering or Instrumentation Engineering or Computer Science or Information Technology Engineering of any University or Institution recognized by the University Grants Commission for purposes of its grant; and”;<br>(ii) Against the entry “ By Promotion or by appointment on deputation” in column (2), in item 1, for clauses (a) and (b), the following clauses shall be substituted, namely:-<br>(a) A degree in Electrical and Electronics Engineering or Electronics and Communication Engineering or Instrumentation Engineering or Computer Science or Information Technology Engineering of any University or Institution recognized by the University Grants commission for purpose of its grant or any other qualification considered equivalent thereto:<br>Provided that in the case of promotion must possess a minimum service for a period of not less than five years as Assistant Engineer (Electrical) in the Corporation Engineering Subordinate Service;<br>(b) Diploma in Electrical and Electronics Engineering or Electronics and Communication Engineering or Instrumentation Engineering or Computer Science or Information Technology Engineering of the State Board of Technical Education and Training or any other qualifications considered equivalent thereto:<br>Provided that in the case of promotion must possess a minimum period of service and experience of Ten years as Junior Engineer (Electrical)”;<br>(2) for the expression “Assistant Divisional Engineer (Electrical)” where ever it occurs, the expression “Assistant Executive Engineer (Electrical)” shall be substituted; and<br>(3) in rule 3, in sub-rule (a) in the Table under CLASS – II, in column (2) for the entries against the entry “Assistant Executive (Electrical)” as so amended in column (1) the following entries shall be substituted, namely:-<br>“(a) By Direct recruitment: or<br>(b) By promotion from the categories of Assistant Engineer (Electrical) and Junior Engineer (Electrical) in the Chennai Corporation Engineering Subordinate Service in the ratio of 3:1;or<br>(c) By appointment of Assistant Executive Engineer (Electrical) in the TANGECDCO of the TNEB Limited on deputation: or |

| | | |
|---|---|---|
| | | (d) By appointment of Assistant Executive Engineer (Electrical) in the public Works Department on deputation ; or<br>(e) By appointment of persons in the cadre of Assistant Executive Engineer (Electrical) in the Electrical Inspectorate on deputation". |
| **6** | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? | ஆம் |

அரசாணை எண்.**1 81**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந**3**) துறை, நாள்: **06.10.2009**ல், சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு **2**ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பதவிகளை பணிநியமனம் செய்து, உறுதியாக்கம் வழங்க மன்றத்திற்கு அதிகார பங்களிப்பு வழங்கியுள்ளது.

உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி, உதவி பொறியாளர் பதவியில் **5** ஆண்டுகள் பணி முடித்தவர்கள் மற்றும், இளநிலை பொறியாளர்களை பொறுத்தமட்டில் 15 ஆண்டுகள் பணி முடித்தவர்களை கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுவருகிறது. பட்டயப் பொறியாளர்களை பொறுத்தமட்டில் பணிவிதிகளில் இளநிலை பொறியாளர் பதவியில் 15 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டுமென குறிப்பிடப்படவில்லை. எனவே, பட்டயப்படிப்பு முடித்தவர்களில் தனியர்கள் உதவி மேற்பார்வையாளர், டெஸ்டர் மற்றும் ஓவர்சியர் ஆகிய பதவிகளில் மொத்தமாக 15 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களை உதவி கோட்ட மின்பொறியாளர் பதவி உயர்வுக்கு பரிசீலிக்க பணிவிதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிப்பது தொடர்பாக கீழ்கண்ட விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது :—

மன்ற தீர்மான எண்.**349/2014**, நாள்.**26.06.2014**ன்படி, சென்னை மாநகராட்சி (மின்துறை சார்பான) பணிவிதிகளில், மின்துறை உதவி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு **3:1** விகிதாசாரம் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதின் பொருட்டும், மேலும், மின்துறையில் பட்டப்படிப்பு படித்த உதவி பொறியாளர்களுக்கு **5** வருடங்கள் பணிஅனுபவமும், பட்டய படிப்பு படித்த இளநிலை பொறியாளர்களுக்கு **10** வருடங்கள் பணி அனுபவமும், உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வுக்கு கடைப்பிடிக்கப்படவும், சென்னை மாநகராட்சி மின் துறை உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் The Chennai Corporation Engineering Service Rules 1969-ன் பணி விதிகளை திருத்தி மாற்றி அமைக்கவும், உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியின் பெயரை உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) எனவும் மாற்றி அமைக்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

அரசாணை எண்.**96** நாள்.**29.07.2016** ன்படி உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையிலும் திருத்தம் செய்யப்பட்டுள்ள கல்வித்தகுதியின் அடிப்படையிலும் இளநிலை / உதவி பொறியாளர்(மின்சாரம்) மூப்பு பட்டியல் பார்வை 2ல் கண்டுள்ள மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) அவர்களின் **12.08.2016** நாளிட்ட கடிதத்தின்படியும், அசாணையின்படி **3:1** என்ற விகிதத்தில் உதவி செயற்பொறியாளர்(மின்சாரம்) பதவிக்கு கீழ்கண்டவாறு தெரிவுப்பட்டியல் அமைகிறது.

| **வ. எண்** | **பெயர்** | **கல்வித் தகுதி** | **விகிதாச்சாரம் (Degree 3 : Diploma) 1) (AE 3:JE1)** | **பதவி** | **பணியில் சேர்ந்த நாள்** |
|---|---|---|---|---|---|
| 1 | எஸ்.சிங்காரவேலு | **Degree in ECE** | **பட்டம்** | உதவி பொறியாளர் | **22.08.1996** (5 ஆண்டுகள் பணி முடித்துள்ளார்) |
| 2. | என்.சிவபதி | **Degree in ECE** | **பட்டம்** | உதவி பொறியாளர் | **22.08.1996** (5 ஆண்டுகள் பணி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | முடித்துள்ளார்) |
| 3. | பி.ஆர்.சியாம் சுந்தர் | **Degree in EEE** | **பட்டம்** | உதவி பொறியாளர் | **22.08.1996** (5 ஆண்டுகள் பணி முடித்துள்ளார்) |
| 4. | எஸ்.ஏ.மணிமுக பாண்டியன் | **Diploma in ECE** | **பட்டயம்** | இளநிலை பொறியாளர் | **31.07.1997** (10 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளார்) |
| 5. | டி.சுரேஷ் | **Degree in EEE** | **பட்டம்** | உதவி பொறியாளர் | **09.06.2010** (5 ஆண்டுகள் பணி முடித்துள்ளார்) |

01.06.2016 அன்று மைய நாளாகக் கொண்டு மின்துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் பணிமூப்பின்படி உதவி/ இளநிலை பொறியாளர்களின் விவரம் பின்வருமாறு

| வ. எண். | பெயர் | பதவி | பணியில் சேர்ந்த நாள் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | எஸ்.சிங்காரவேலு | உதவி பொறியாளர் | 22.08.1996 | அரசாணை எண்.96 ன்படி பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர். |
| 2. | என்.சிவபதி | உதவி பொறியாளர் | 22.08.1996 | அரசாணை எண்.96 ன்படி பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர். |
| 3. | பி.ஆர்.சியாம்சுந்தர் | உதவி பொறியாளர் | 22.08.1996 | அரசாணை எண்.96 ன்படி பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர். |
| 4. | எஸ்.ஏ.மணிமுகபாண்டியன் | இளநிலை பொறியாளர் | 31.07.1997 | அரசாணை எண்.96 ன்படி பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர். |
| 5. | டி.சுரேஷ் | உதவி பொறியாளர் | 09.06.2010 | அரசாணை எண்.96 ன்படி பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர். |

மேற்காணும் பட்டியலில் இடம் பெற்றுள்ள அனைத்து நபர்களும் அரசாணை எண்.96 ன்படி தகுதி பெற்றுள்ளதாலும் மற்றும் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் பொது பணித் தேர்வு பாகம்–1 மற்றும் 2 முழுவதுமாக தேர்ச்சி பெற்றுள்ளதாலும், இவர்களது பெயர்களை பணிவிதிகளின்படி உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) பதவிக்காக தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.

எனவே மேற்கூறியவைகளின் அடிப்படையில், பின்வரும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அ) அரசாணை எண்.96 ந.நி.(ம) கு.நீ.வழங்கல்துறை, நாள்.29.07.2016ல் தெரிவித்துள்ளவாறு திருத்திய பணிவிதிகளை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்திடவும்,

ஆ) அரசாணை எண்.96 ந.நி.(ம) கு.நீ.வழங்கல்துறை, நாள் 29.07.2016ல் உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கு, தெரிவித்துள்ள கல்வித்தகுதி, பதவி உயர்வுக்கான விகிதாச்சாரம் போன்றவற்றினை பின்பற்றி உரிய தகுதி பெற்றுள்ள பின்வரும் உதவி/இளநிலை பொறியாளர்களின் பெயர்களை கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

| வ. எண் | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | இளநிலை/உதவி பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | எஸ்.சிங்காரவேலு, உதவி பொறியாளர் | 22.08.1996 |
| 2 | என்.சிவபதி, உதவி பொறியாளர் | 22.08.1996 |
| 3 | பி.ஆர்.சியாம்சுந்தர், உதவி பொறியாளர் | 23.06.1995 |
| 4 | எஸ்.ஏ.மணிமுகபாண்டியன், இளநிலைபொறியாளர் | 31.07.1997 |
| 5 | டி.சுரேஷ், உதவி பொறியாளர் | 09.06.2010 |

இ) உதவி செயற்பொறியாளர்(மின்சாரம்) பதவியில் ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில் மேற்கண்ட தெரிவுப்பட்டியலில் உள்ள தகுதியானவர்களுக்கு ரூ.15600–39100+தர ஊதியம் 5400 என்ற ஊதிய விகித அடிப்படையில் உதவி செயற்பொறியாளர்(மின்சாரம்) பதவி உயர்வு அளித்திடவும்

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

********

**வ.து.ந.க.எண்.எம்3/4015/2012**
**ஆணையர் அவர்களின் 19.08.2016 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.478a/2016** **பொருள் எண்.50a**

**வருவாய் துறை – சமுதாய நலக் கூடம் –2016ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மாமன்றக் கூட்ட சிறப்பு அறிவிப்பு – சமுதாய நலக்கூடங்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கட்டணமில்லாமல் வழங்க அனுமதி**

மன்றத் தீர்மான எண்.264/12 நாள்.25.7.2012 ன்படி சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து சமுதாய நலக் கூடங்கள், மண்டல அலுவலகங்களில் முன்பதிவு செய்வது மற்றும் ஆன் லைனில் முன்பதிவு செய்வதை ரத்து செய்து வருவாய் துறை தலைமையகத்தில் மட்டும் முன்பதிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு மேயர் அவர்களின் குறிப்பு மா.மே.அ.ந.க.எண்/018/ 2016 நாள் 03.3.2016 மற்றும் 29.2.2016 அன்று நடைபெற்ற வரவு செலவு திட்ட மாமன்றக் கூட்டத்தில் சிறப்பு அறிவிப்புகளில் ஒன்றாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் சமுதாய நலக் கூடங்களில் இனி வருங்காலங்களில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக கட்டணமில்லாமல் வழங்கப்படும் எனவும் பராமரிப்பு தொகை மட்டும் பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த தொகையானது சம்பந்தப்பட்ட சமுதாய நலக் கூடங்களின் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு மட்டும் செலவு செய்யப்படும் என்றும் இதற்கென சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்களில் வங்கி கணக்கு துவக்கப்பட்டு வசூலிக்கப்படும் தொகையை வங்கியில் செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான ஷெனாய் நகர், தியாகராயர் நகர் மற்றும் போகு சாலையில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடங்களைத் தவிர பிற அனைத்து சமூக நலக்கூடங்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்துவதாகவும், மேலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கான பயிற்சிகள், இளைஞர்கள் நலன்சார்ந்த பணிகள் மேற்படி சமூக நலக்கூடங்களில் நடத்தப்படும்போதும் மேற்படி சலுகையினை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு மேயர் அவர்கள் அறிவுறுத்தியபடி பராமரிப்பு தொகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் மறுபரிசீலனைக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

ஆணையரின் 6.7.2016 நாளிட்ட குறிப்பின் மீது மாண்புமிகு மேயர் அவர்களின் மேற்குறிப்புரையில் <u>வைப்பு தொகை மட்டும் பெற்று அதை திருப்பி கொடுத்தவிட வேண்டும் என்றும் பராமரிப்பு தொகை தேவையில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.</u>

எனவே

1) **கீழ்காணும் கலையரங்கம் மற்றும் சமுதாய நலக்கூடம் தவிர்த்து** தற்போதுள்ள அனைத்து சமுதாய நலக்கூடங்களும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கட்டணமில்லாமல் இலவசமாக வழங்குவதற்கும்,
    - மண்டலம்–1, கோட்டம்–11ல் உள்ள ஐய்யன் திருவள்ளுவர் திறந்தவெளி கலையரங்கம்
    - மண்டலம்–8, கோட்டம்–101ல் உள்ள ஷெனாய் நகர் கலையரங்கம் மற்றும் முதல் மாடியில் உள்ள சமுதாயநலக் கூடம்,
    - மண்டலம்–10, கோட்டம்–136, ஜி.என்.செட்டி சாலையில் உள்ள சர் பிட்டி தியாகராயர் கலையரங்கம்,
    - மண்டலம்–9, கோட்டம்–117ல் உள்ள கிரியப்பா சாலையில் உள்ள சமுதாய நலக் கூடம்
    - மண்டலம்–10, கோட்டம்–134 டாக்டர் அம்பேத்கர் சாலை சமுதாய நலக் கூடம்,

2) மேலே வரிசை எண்(1)ல் குறிப்பிட்டுள்ள 5 இனங்களுக்கு ஏற்கனவே பெறப்படும் வாடகை மற்றும் இதர கட்டணங்களை பெற்று கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதி வழங்குவதற்கும்,
3) அனைத்து சமூக நலக்கூடங்களுக்கும் கட்டணமில்லாமல் இலவச தளவாட சாமான்கள் வழங்குவதற்கும்,
4) சமுதாய நலக்கூடத்தை முன்பதிவு செய்பவர்களிடமிருந்து முன்வைப்புத் தொகை ரூ.10,000/– பெற்றுக் கொண்டு அனுமதி வழங்குவதற்கும்,
5) முன்வைப்பு தொகையில் நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்பட்ட மின்சார கட்டணம் மற்றும் சமுதாய நலக்கூடத்தில் உள்ள பொருட்களுக்கு ஏதேனும் இழப்பீடு ஏற்படும் பட்சத்தில் இழப்பீட்டு தொகை பிடித்தம் செய்யப்பட்டு மீதி தொகை அனுமதி பெற்ற விண்ணப்பதாரருக்கு சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகம் மூலம் வழங்குவதற்கும்
6) சமுதாய நலக்கூடத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு கீழ்க்காணும் நாள் அடிப்படையில் அனுமதி வழங்குவதற்கும்
    - திருமண நிகழ்ச்சிக்கு மட்டும் அதிகபட்சம் ஒரு நாள் வழங்குவதற்கும்,
    - நிச்சயதார்த்தம், வரவேற்பு, பிறந்த நாள், சீமந்தம், காதணி விழா, பெயர் சூட்டு விழா, மஞ்சள் நீராட்டு விழா, பூநூல் விழா, புதுநன்மை, 60வது/70வது/80வது திருமண ஆண்டு விழாக்கள் பணி ஓய்வு பாராட்டு விழா போன்ற நிகழ்ச்சிகளுக்கு அரை நாள் மட்டும் வழங்குவதற்கும்,
7) மேற்கண்ட குடும்ப நிகழ்ச்சிகள் தவிர்த்து வேறு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏற்கனவே மன்ற தீர்மானத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட வாடகை தொகை, சேவை வரி மற்றும் முன்வைப்பு தொகை ரூ.10,000/– ஆகியவற்றை வசூலிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கும்,
8) மத்திய/மாநில அரசு நிகழ்ச்சிகள், அரசு சார்புடைய நிகழ்ச்சிகள் கட்டணமில்லாமல் இலவசமாக நடத்திக் கொள்ள அனுமதி வழங்குவதற்கும்,
9) வாடகை கட்டணத்தின் அடிப்படையில் ஏற்கனவே முன்பதிவு செய்தவர்களிடமிருந்து பெற்ற முன்வைப்பு தொகையின் வித்தியாசத் தொகையினை விண்ணப்பதாரரிடமிருந்து பெறுவதற்கும்
10) சமுதாய நலக்கூடம் முன்பதிவினை ஒரு வருடத்திற்கு முன்பான நிகழ்ச்சிகளுக்கு பதிலாக ஆறு மாத காலத்திற்கு முன்பான நிகழ்ச்சிகளுக்கு முன்பதிவு செய்வதற்கும்
11) மேலும், ஏற்கனவே முன் பதிவு செய்தவர்களுக்கு இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள் முதல் வாடகை கட்டணம் திருப்பி வழங்குவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 11 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*********